நவசக்தி
சிலம்பு 9, பரல் 52
October 16, 1929

Record no. 2305

Navacakti
Cilampu 9, paral 52
October 16, 1929

Record no. 2305

Registered No. M. 1500. "NAVASAKTI"

நவசக்தி

சந்தா விவரம்	ரூ. அ.
வருட சந்தா ...	5 0
ஆறுமாத சந்தா ...	3 0
வெளிநாடு—வருடசந்தா	6 0

வாரப்பதிப்பு

"எவ்வுயிர்க்கும் அன்பாயிரு"

விளம்பர விகிதம்
பத்தி 1-க்கு வாரம் 1-க்கு ரூபா 6
சில்லரை விளம்பரம் 1 அங். 0 8
முன்பணமின்றி விளம்பரம் செய்யப்படமாட்டாது.

சிலம்பு க — சுக்கிலஞு புரட்டாசிமீ ௩௰௨ (16—10—29) புதன்கிழமை — பரல் ௪௨

இராமலிங்க சுவாமிகள்

அம்பலத்தே திருநடஞ்செய் யடிமலரென் முடிமேல்
அணிந்துகொண்டே னன்பொடுமென் னுருயிர்க்கு
[மணிந்தேன்
எம்பரத்தே மணக்குமந்த மலர்மணத்தைத் தோழி [வே
என் னுரைப்பே னுரைக்கவென்று லென்னளவன் றது
வம்பிசைத்தே னல்லடிநீ யென்னருகே யிருந்துன்
மணிநாசி யடைப்பதனைத் திறந்துமுகர்ந் தறிகாண்
நம்புறுபார் முதல்நாத வரையுளநாட் டவரும்
நன்குமுகர்ந் தனர்வியந்தார் நண்மணமீ தெனவே.

தன் னுறங்கே னுறங்கி னுமென் னவரொடு கலக்குங்
கனவேகண் டுளமகிழ்வேன் கனவொன்றே நனவின்
எண்ணடங்காப் பெருஞ்சோதி யென்னிறைவ ரெனையே
இணைந்திரவு பகல்காணு தின்புறச்செய் கின்றார்
மண் ணுறங்கு மலையுறங்கும் வளைகடலு முறங்கும்
மற் றுளவெல் லாமுறங்கும் மாநிலத்தே நமது
பெண் ணுறங்கா ளெனத்தாயர் பேசிமகிழ் கின்றார் [ரே.
பெண்களெலாங் கூசுகின்றார் பெருந்தவஞ்செய் தில

"நவசக்தி" ஆசிரியர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

எழுதிய நூல்கள்

தமிழ்த் தென்றல்

ஸ்ரீமான் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் மகாநாடுகளில் தலைமை வகித்து நிகழ்த்திய முன்னுரைகளிற் சில அடங்கப்பெற்ற நூல். பெயருக்கேற்ற பொருளை இந்நூலிற் பெறலாம்.

தமிழ் மொழியில் வீரச்சுவையுண்டு என்பதை இந்நூலிற் காணலாம். இயற்கை வருணனைகள் இயற்கைப் படம்போலக் காட்சியளிக்கும். மேடைகளில் நம்பிக்கைத் தமிழில் பேச முயல்வோர்க்கும், தமிழ்க் கட்டுரைகள் வரைவோர்க்கும் இந்நூல் பெருந்துணை செய்யும். ஒவ்வொரு தமிழ் மாணக்கர் கையிலும் இந்நூலிருத்தல் வேண்டும். இந்நூலைப் படிப்போர்க்குத் தேசபக்தியும், உரிமையில் வேட்கையும் வீறிட்டெழும் என்பது உறுதி.

தமிழ்நாட்டுப் பண்டைப் பெருமை, தாய்மொழிப் பற்று, பிறப்புரிமை, உரிமை வேட்கை, தேசபக்தி, சுயராஜ்யப் பேறு, ஒற்றுமை, சகோதர நேயம், ஊக்கம், காந்தியடிகள் அறம், ஒத்துழையா இயக்கச் சிறப்பு, அவ்வியக்க முறைகளால் நாட்டுக்குள்ள நலன் முதலிய பொருள்கள் இந்நூற்கண் ஆங்காங்கே மிளிர்கின்றன. அணிந்துரையுடன் 480 பக்கங் கொண்டது. காலிகோ பைண்டு. விலை ரூபா 2.

***

தமிழ் நூல்களில் பௌத்தம்

வேண்டுவோர் 5 அணு தபால் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணு 4.

***

கடவுள் காட்சியும் தாயுமானரும்

மன மாசுகளை நல்லறிவால் கழுவி உண்மையில் மூழ்கி நின்ற அநுபூதிமான்களில் ஒருவராகிய தாயுமானர் அருளிச் செய்த "ஐவகை எனும் பூதம்" என்னும் திருப்பாட்டைப் பீடிகையாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலின் திரண்ட கருத்து மெய்ம்மையில் கடவுள் காட்சி பெறலாமென்பது. கடவுளின் அருட்டன்மையும், படைப்பு முறைகளும், படிகளும், படைப்பின் நோக்கமும், உயிர்களின் கடமையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப் பட்டிருக்கின்றன. விலை அணு 4. வேண்டுவோர் ஐந்து அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஏக காலத்தில் 12 புத்தகங்கள் வாங்குவோர்க்குத் தபால் செலவு இனம்.

முருகன் அல்லது அழகு

இரண்டாம் பதிப்பு

விரிவாக எழுதப்பட்டது

இஃது இயற்கை அழகை எடுத்துக்கூறும் நூல். இயற்கை அன்னையின் மாண்பை இந்நூற்கண் காணலாம். இந்நூற்கண் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகினியல், இளமைப்பேறு, இயற்கை மாண்பு, நோன்பு வழிபாடுகளின் திறம், முருகனடியார் இயல்பு முதலியன ஓதப்பட்டிருக்கின்றன. இந்நூலை முற்றும் பயில்வோர் உள்ளத்தில், இயற்கை வழிபாட்டில் ஆர்வம், ஒரே கடவுள் ஒரே நெறி என்னும் உறுதி, எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாப்பேறும் முதலியன நிலவும். இயற்கை வருணனையும் உரை நடையும் நெஞ்சைக் கவரும். 224 பக்கங்கொண்டது நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டுளது கலிகோ பயிண்டு விலை ரூபா 1.

***

சைவத்தின் சமரசம்

இந்நூற்கண் சமயத்தின் இயல்பு இஃது என்பதும், எல்லாச்சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயரால் பல வழியில் போற்றுகின்றன என்பதும், சமயங்கள் பல வாய்க்கிடப்பினும் அவைகள் யாவும் சமரசத்தையே குறிக்கொண்டு நிற்கின்றனஎன்பதும், அச்சமரசமே சைவமென்பதும், பிறப்பையொட்டி உயர்வு தாழ்வு பாராட்டாமை, கைம்மாறற்ற பணி, பிறர் குற்றம்பொறுத்தல், பாவ மன்னிப்பு முதலியன சைவசமயத்தில் சிறப்பாக விருக்கின்றன என்பதும், அருள்-கருணை - இரக்கம் - தயை உள்ள விடங்களிலெல்லாம் சைவம் மிளிரும் என்பதும், சைவம் ஒரு சமயம் அன்றென்பதும் பிறவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் பதிப்பு விலை அணு 8.

***

[illegible]ன் கடன் பணிசெய்து கிடப்பதே

இந்நூலில் பணியின் பெருமை விரிவாக ஓதப்பட்டிருக்கிறது. கடவுள்பணி, சராசரப்பணி, சிறப்பாகத் தேசப்பணி ஆகிய இப்பணிகளை இந்நூலில் காணலாம். இஃதொரு கருமயோக நூல்; காலத்துக் கேற்றது. இரண்டாம் பதிப்பு விலை அணு 8.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

சிங்கப்பூர் ஏஜண்டு :—
K. S. A. S. பிரதர்ஸ்,
176, சிலிகி ரோட், சிங்கப்பூர்.

எட்டாம்பதிப்பு! வெளியாய் விட்டது!

சரீர மர்ம சாஸ்திரம்

இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர் அனுபவிக்க வேண்டிய சம்சார சுகங்கள், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் ஆகிய அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. 64 படங்களுடன் 200 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 1.

எல்லாப் புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணசல முதலி வீதி, சென்னை.

பெட்ரோமாக்ஸ் லைட்

மாண்டில், குளோப், அதன் தனித்தனி சாமான்கள் எல்லாம் நயமாய் கிடைக்கும்.

பூச்சிவண்டர்
கியாஸ் லைட்

உறுதியானது. ரிபேர் ஏற்படாதது. இந்த மேக்கர் மதராசில் கிடைக்காது.

முழுவிபர கியாட்லாக், ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Importers—
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

திருப்பூர் பனியன்கள்

முதல்தரம் கார்டிகன். 32 இஞ்சு. டஜன் 1-க்கு 6-8-0. வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting Factory,
Tirupur.

அமிர்தகுணபோதினி

(30,000 சந்தாதாரர்களை யுடையது)

இதுபோன்ற நவீன மாதாந்த ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும், அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றி, சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்ற மடையக்கூடிய வழியையும் போதிப்பதை பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபாரிசு இல்லாமல் தாங்களே சந்தாவில் சேர்வீர்களென்பது நிச்சயம். பிரதிமாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூ 1. வெளிநாடு ரூ 1—4—0 மாதிரி காபி இனம்.

தி. இர்ராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்.
302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப் பற்றி தாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும் புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிடநூற்கள் பலவுள்ளதால், நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப் பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவு மிருக்கும். உங்கள் ஜாதக சகலாவதுகடிதம் எழுதும் நோத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இனம்! கேட்லாக் இனம்!!

சங்கீத வித்வத்ரத்னங்கள் பாடும்

HINDU MUSIC SONGS

உபாத்தியாயர் இன்றி ஒவ்வொருவரும், தாமே இராக தாளத்துடன் பாடலாம். 320 பாட்டுகள் ரூ. 1-8-0. சுயமரியாதைக் கண்டனத்திரட்டு அணு 8.

இவ்விரண்டையும் ஏககாலத்தில் வாங்கினால் தபாற்கூலி இனம்.

S. B. சுந்தரம் கம்பெனி,
3, பார்க் டவுன் (P.O.) (ந) மதராஸ்.

---

40 வருஷங்களாக

ஹிமாலயத்திலிருந்து
கன்னியா குமரிவரையில்

AMRUTANJAN
AMRUTAN[illegible]
Best Indi[illegible] Pain Ba[illegible]
Amrutanjali
BOMBAY

அமிருதாஞ்சனம்

நவசக்தியாக
பெயர்பெற்றுவிட்டது

எல்லாவித நோய்களுக்கும், வலிகளுக்கும் அரிய குடும்ப ஔஷதம்

அமிர்தாஞ்சன் டிபோ,
மதராஸ். கல்கத்தா, பம்பாய்.

உயர்ந்த இலை!
குறைந்த விலை!!

சிவபுரி - - - புகையிலை

உலகு புகழ்வது எது? உற்சாகத்தின் ஊற்று எது? மணம் மிகுந்தது எது? குணம் சிறந்தது எது? சிதம்பரத்திற்கு அடுத்த சிவபுரி புகையிலையே! தேவைக் கெழுதுங்கள்! ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

கத்தை ஒன்றுக்கு
40 இலைகள் கொண்டது

1 நே.	கத்தை விலை ரூபா	5-0
2 நே.	,, ,,	4-4
3 நே.	,, ,,	3-12
4 நே.	,, ,,	3-0

சிவபுரி "மனோரஞ்சித" வாசனைப் புகையிலை

டப்பி 1-க்கு விலை அணு	0-3-0
1 டஜன் டப்பிகள் விலை ரூ.	1-12-0

வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

வி.கே.எஸ். ஐயர் & கோ,
புகையிலை வியாபாரம், சிதம்பரம்

வந்தேமாதரம்

நவசக்தி

" என்கடன் பணிசெய்து கிடப்பதே"

சிலம்பு கூ | சுக்கிலஹு புரட்டாசிமீ நகஉ (16—10—29) புதன்கிழமை | பரல் [illegible]

கடவுளில்லையா? கண்ணில்லையா?

சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது:—

என்றெய்வம் எல்லார்க்கும் இனிய தெய்வம்!
எப்புவிக்கும் ஓர்தந்தை யிறைவனுகி. [பாய்
என்றென்றும், எவ்வுயிர்க்கும் உயிராய் அன்
இதயமெனுங் கண்ணுடி யிலகு தெய்வம்
தோன்றுமுதல், தொண்டருக்குத் தொண்ட
[னகத்
துணைநிற்குஞ் சுத்தசத்தி யாகி யெம்பால்,
கன்றைத்தாய் பேணுகின்ற காத லோடுங்
கருணையருள்சுரக்குமுயர்காட்சித்தெய்வம்

தெய்வமணங் கமழுந் தமிழ்த் தென்றலில் இன்று ஒரு புன்புலாற் கழுமுடை நாற்றம் வீசுகிறது! புலவுடம்பும், வெளிப்புலனும், விழிபுலகமே கொண்டு, உயிருடம்பு, மன வுடம்பு, அறிவுடம்பு, மகிழ்வுடம்பிற் கப்பா லுக்கப்பாலாய் அமர்ந்து நிறையும் கண் ணுதலை மறுக்கும், பகற்கூகை விழியர் தமி ழுணங்கின் மைந்தராகவா இருக்க வேண்டும்! ஆ! தமிழ்மொழி தெய்வமொழி, தமிழ் நூல் கடவுள் மணங்கமழ்வது. தமிழகம் கடவு ளகம்! தமிழர் ஒரு குலக்கடவுள் மைந்தர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று ஒற்றுமையுடன் தெய்வ முழக்க மதிருந் தமிழ் நாட்டிலா நாத்திகப் பறைமுழக்கம் இன்று கேட்க வேண்டும்!

மேல் நாடு

அத்லாண்டிக் பெருங் கடல்கூட நாத்திக முழக்கத்தைவிடுத்து உண்மையையாவலுடன் தேடித்தேடிப் பாரத நாட்டின் தத்துவ அறிவைக் கூவி யழைத்து ஓலமிடுகின்றதே! நாத்திகம் பேசிய எபர்ட் ஸ்பென்ஸரும் முடிவில் உலகை ஒரு சக்தி ஆளுகின்றதென்று ஒப்புக் கொண்டு விட்டார். ஹக்ஸ்லி என்ற அறிவு நூல் ஆராய்ச்சிக்காரர் நெடுநாளாக "இயற்கையே எல்லாம் செய்கிறது. கடவுள் இல்லை" என்ற எண்ணம் பூண்டிருந்தார். ஒரு நாள் ஒருவருக்குக்காயமறுக்கையில், அக்காயத்தைத் தானாக ஆற்றும் வெண்ணிறத்த சக்தி மனிதனிடம் மறைந்திருப்பதைக் கண்டு "ஓகோ ஏதோ ஓர் உயர்பொருள் இருக்க வேண்டும்" என்று நம்பித் தெளிந்தார். மனித வுடலை வெளி விழிகளால் கூறுசெய்து நோக்கினுங் காணாத நுண்மைகள் பலவுள்ளன. இதயத் துடிப்பு எதனால் ஏற்படுகின்றது? இரத்தம் எப்படிச் சிவக்கிறது? என்று இன்னும் ஆராய்ச்சியாளரின் மருத்துவக்கத்தி வியக்கிறது.

நமது நெஞ்சுளேயுள்ள ஒருறுப்பை ஆராய்ந்தறிய முடியாமல் அதற்கு "அவனுடைய மூட்டை" என்று மேனாட்டு மருத்துவர் பெயரிட்டு விட்டனர். அந்த மூட்டையை அவிழ்த்து ஆராய்ந்தறிந்தவர் நம்நாட்டு உட் புலமையாளரே!

கடவுள்

"நீரிடை யுப்பும் நிலத்திடை யப்பும்
தாயிடைச் சூலுஞ் தளிரிடைத் துவரும்
தீயிடை வெம்மையுஞ் செறிந்தாங் கன்ன
அறிவிடை ஈசன் அமர்ந்தாங் குறலே"

என்று நமது அறிவினிடை நீக்கமற நிலவும் ஒரு நுண்பொருள், மறைபொருள், எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவனாக, எல்லா வுடல்களிலுங் கோயில்கொண் டிலங்குவதை யறிவார் யார்? அவர்களே அறிவுள்ளவர். அவ்வறிவே தெய்வப் புலமை (Cosmic Conscience), விஞ்ஞானம் எனச் சொல்லப் படும். அவ்வறிவுற்று, அதன் ஒளிமயமாக நிலைத்தவன் தேவனாவான். பிரகலாதன், ஞான சம்பந்தர், அப்பர், நம்மாழ்வார், அருட்சோதி வள்ளலார், ஏசுநாதர், புத்தர் முதலியோர் அவ் வறிவுலகில் வாழ்ந்தவர்.

மூவகை மனிதன்

ஏன் அனைவரும் கடவுளைக்காண முடிய வில்லை? அவனைக் காண்பதற்குத் தடையா யுள்ள தெது? என்பதைச் சற்று ஆராய்வோம். உயிரினங்களை யுணர்ச்சியின் உயர்வின்படி மூவகையாகப் பிரிக்கலாம். மா, மனிதன் தேவென்னும் வாழ்க்கைப் படிகளுள; தாம்செய் வினையே தரும். விலங்குப்படி—மனிதப்படி—தெய்வப்படி என்ற முப் பிரிவுகளுக்கும் மூவகை யுணர்ச்சிகள் உள்ளன.

மனித விலங்கு

விலங்குகளுக்குச் சாதாரண வுணர்ச்சி மட்டுமே உண்டு. அதனால் அவை உண்ணும்; உணவு தேடும்; உறங்கும்; குட்டிபோடும்; குட்டி பெரிதாகுமட்டும் பேணும்; தமக்காகவே வாழும்; தன்னெதிரேயுள்ளபுலப்பொருள்களையே காணும். வேறுள்ளனவெல்லாம் அதற்கு நினைவிராது. இதுதான் விலங்கு நிலை. தனது உணவிற்காகத்தனக்கு இயல்பிற்கேற்ற வண்ணந் திரிந்து, தன் விழைவிற்காகக் கூடி முயங்கிக் குட்டிப்போடும் விலங்குபோல மனிதனாகப் பிறந்தோனும், மனிதனுக்குரிய கடவுள் நன்றி, சமுதாய உணர்ச்சி, பிறர் காணத்தக்கது தான் காணல் முதலிய உயரிய சுத்த, சுதந்திர, சமத்துவ வாழ்வில்லையேல் அவனை என்னென்பது?

அன்பறம், நன்றியிவை
செய்திடுதல் லாற்றலிலேல்
என்னென்ப தாளை யினி?

சுடர், காற்று, கடல், புவி, செடி, கொடி யனைத்தையும் உண்டாக்கும் ஒரு சக்தியுள்ளதென்ற அறிவு யில்லாவிடின், அந்தச் சக்தி யிறைவன் பால் நன்றியில்லாவிடின், அவன் அருள் பெற மனங் குழைந்துருகிக் கனியாவிடின், அவன் அறவழியி லொழுகி நில்லாவிடின், மனிதனை விலங்கினுங் கீழாகவே மதித்தற்பாற்று. ஹோமர் எழுதிய ஓர் ஒதேஸி என்ற காவியத்தில் ஸெர்ஸி என்ற ஒரு மாய நங்கையின் கதையுள்ளது. அப்பெண் தனது மாயத்திறனால் மனிதனை அவன் உள்ளத் தன்மைக்கேற்ற விலங்காக்கி விடுவாள். ஒரு நாள் ஒதேஸனுடைய வீரர்கள் ஸெர்ஸியின் அரண்மனைக்குச் சென்று அவள் அளித்த விருந்தை யுண்ணப் பன்றி போன்ற பெருந்தீனி யிச்சையுடன் உட்கார்ந்தனர். உடனே ஸெர்ஸி தனது மாயக் கோலால் அவர்களைத் தொட்டாள். அனைவரும் பன்றியாயினர். தற்போது வீண் வம்புகளும், வாதங்களும், போரும், கோளும், பொறாமையும் செய்யும் மக்களை ஒரு ஸெர்ஸி இருந்தால் அவரவர்களுக்கேற்ற மிருகங்களாகவே மாற்றி அவர்களின் விலங்கு நீர்மையை வெளிக்காட்டுவாள். ஒருவன்சினமுறும்போது அவனை "நீ ஒரு மனிதனா" என்கிறோம். மனிதன் என்னும் செம்பொருள் மாண்பை அடுத்த பத்தியில் ஆராய்வோம். வஞ்சம் புரிவோன் நரி. மறைந்து தீங்கிழைப் போன் பாம்பு. புன்விழைவில் பொதிந்து அழுக்குறுவோன் பன்றி. எடுத்ததற்கெல்லாம் சினப்பவன் நாய். தன்னறத்தையும் காட்டையும் பிறர் கற்பழிக்கப் பார்த்துப் பொறுத்திருப்பவன் பொதிக்கழுதை. பிறர் என்ன நயம் புகன்றாலும் கேளாது தான் போன போக்கிலேயே சென்று தீங்கிழைப்போன் வெறி மதயானை. பகல் போல் உண்மையான பொருளைக் காணாதவன் ஆந்தை. தன் முயற்சி விடுத்துப் பிறர் பொருளை வௌவு வோன் கழுகு. சோம்பித் தூங்கி மயங்குவோன் பனிக் கரடி அல்லது தேவாங்கு. அந்தோ! மனிதா! கேவலம் உன் உடலைப் பார்க்கின்றனை! உன் வெளிக்கண்ணுக்கே ஆட்பட்டாய்.

ஊணு, உறக்கமும் ஊடலுங் கூடலும்
ஈனலும், பேணலும், எனமுஞ் செய்யுமே!

பன்றியும் உண்கிறது; உறங்குகிறது; உடல் கூடல், ஈனல், குட்டியைப் பேணல் எல்லாம் செய்கிறது. மனிதா? நீயும் அதற்காகவே வாழ்ந்தாயாயின் நீ விலங்கினும் எப்படி யுயர்ந்தவன்? உனக்குள்ளே, மூச்சினும் அருகேயுள்ள, எல்லாம் வல்ல பொருளையறியாமல் நீ என்னென்னவோ செய்கிறாய்! மனிதனின் தத்துவத்தைச் சற்று அறிவாயாக!

மனித மனிதன்

மனிதனுக்குள்ள உணர்வு தன்னுணர்வு (Self consciousness). அதனால் மனிதன் தன்னலத்தி னின்று தன்னை வேறு பொதுநலக் கருவியாக அறிகிறான். "கட்புலன், செவிப் புலன்களைக் கடந்த உலகினின்று தான் வேறு. தன்னுள் அதனினும் பெரிய ஒரு செம்பொருள் உள்ளது" என்றறிகிறான். திமிங்கிலத்திற்குத் தன் நிறையில் ௩௦௦-ல் ஒரு பங்குதான் மூளையுள்ளது. யானைக்கு ௬௦௦-ல் ஒரு பங்கே யுள்ளது. மனிதனுக்கே தன்னிடையில் ௪௰-ல் ஒரு பங்கு மூளையுள்ளது. மனிதனுக்கு ஏன் அனைத்தினும்பெரிய மூளை கொடுக்கப்பட்டது? தன்னறிவால் உள்ளே தேடி அனைத்திற்கும் மூலமான ஒரு பொருளை யறிந்து அப்பொருள் மயமாக உலகைக் காணவன்றோ? அன்பு, அறம், நன்றி, ஒப்புரவு, நாண், கற்பு, ஆராய்ச்சி, உண்மை, பொறுமை, சீர்மை முதலிய தன்மைகளை வளர்த்துக் கடவுட்டன்மை யடைந்து, கடவுள் விழிகளால் உலக முழுவதையும் கடவுள் மயமாகக் காண்பதற்கு அன்றோ மனிதனுக்கு ஆண்டவன் பெருத்த [illegible] கொடுத்தான். அதைச் செவ்வழியிற் செலு[illegible]த்தி யோங்காமல், தெவ்வழியில், [illegible] பொறாமை, போர், சச்சரவு[illegible] வாழ்வைப் போக்கினால் அதனினும் [illegible] வேறு என்ன இருக்கிறது!

சத்தியமும் நோன்புந் தவமும் இரக்[illegible] [illegible]
உத்தமருக் குள்ளகுணம் ஒன்றின் [illegible] [illegible]
மைதனமுஞ் சோறும் மாயுமன [illegible]
கைதவர்க்கு முண்டோ கதி.

என்றார் வள்ளலார்.

"உண்டியே உடையே புகத்தொழி[illegible]
மண்டலத் தொடுங் கூடவே [illegible]"

என்றார் குலசேகரப் பெருமான்.

மனிதன் உயர்ந்த வாழ்வுள்ளோன்; [illegible] வுட் டன்மை யடையத் தக்கோன். [illegible] முயக்குமே மனிதச் செய்கையல்ல. அதன் பொருட்டுக் கலாம் விளைத்து [illegible] கலக்கிச் சச்சரவு விளைத்துத் திரிந்து மனிதனைக் காட்டு விலங்கினும் [illegible]கின்றது. மனிதன் என்பது தோல், [illegible] தமல்ல; தசையல்ல. மனிதன் என்பது அறிவு. அவ்வறிவில் ஆண்டவன் [illegible] கிறான். ஆனால் மனித [illegible] அவனைக் காண முடியாது. அது [illegible] சொல் மனங் கடந்த பொருள். அப்பொருளைச் சுற்றி ஐந்து கோட்டைகளுள்ளன. அக்கோட்டைகளைப்பற்றி ஆராய்வோம்.

ஐந்து கோசம்

இக்கோட்டைகளே பஞ்சகோசம் என்பது. அதாவது முறையே அன்னமய கோசம் (உடல்), பிராணமய கோசம் (உயிர்), மனோமயகோசம் (மனது) விஞ்ஞானமய கோசம் (அறிவு) ஆனந்தமய கோசம் (பேரின்பம்) இக்கோசங்களின் தன்மைகளைத் தெரிக:—

சாதிகுல நாமாதி யன்னகோசம்; [கோசம்;
தரும்பசி தாகம், இன்னல் உயிரின்
வாதலின்சங் கற்பமொடு விகற்பம் யாவும்
மனக்கோசம்மருவிடும்; விஞ்ஞானகோசம்,
சாதுரியன் றலைவனெனுந் தன்மைதோற்றும்;
சாந்தன்யா னென்று மானந்தகோசம்
ஈதெலாங் கருவியா யிவை கடந்தே [கோமே!
இலங்குகின்ற பெரும்பொருளை [illegible]

சாதி, குலம், நிறம், உடை, நடை [illegible] லிய தற்காலச் சமூகச் சச்சரவுக்கு [illegible] யூற்றி நிற்பதெல்லாம் அன்னமய கோச வேற்றுமைகளே. இக்கோசத்தை மனிதன் தன் திமிரினால் தீய செயல்களுக்குப் பயன் படுத்துகிறான். இக்கோசம் நன்கு பயன்படுத்[illegible] தப்பட்டுத் தூய்மையுற்றால் மேலே [illegible] வுண்மைகளை யடைய நற்கருவியாகும். [illegible] லும், மதவும் பிறரை வஞ்சித்த இரத்த [illegible] வும் போர் தொடுத்து, பிறர் சமாதானத்தைக் கெடுக்குங் கொடுந்தொழிற்கே மனிதன் இதைப் பயன்படுத்துகிறான். [illegible] அன்னமய வேற்றுமைகளைக் கொண்டு [illegible] கில் எத்தனை சாதி, மத சமயச் சச்சரவுகள் விளைகின்றன. இக்கோசத்தினையே [illegible] வாக எண்ணுகின்றவன் மனித [illegible] யாவான். இதன் ஆட்டங்களுக்கு இடம் [illegible] வது பிராணகோசம். இதில் மனிதன் [illegible] பசி, தாகம், இன்னல், இன்பம், [illegible]

முதலிய உணர்ச்சிகள் அடங்கியுள்ளன. இவ்விரு கோசங்களையும் ஒழுங்குறுத்தவே யோகம்ஏற்பட்டது. நீவழிச்செலுத்தாதுஆஸனப் பிராணாயாமாதி, இயம நியம விதிகளால் வாழ்வை நெறிப்படுத்தினால் இக்கோசங்கள் வலுப்பட்டுத் தூய்மையுற்று, நீளாயுளும், பேராற்றலும் கொடுக்கும். மூன்றாவதான மனோமய கோசமே மனிதனின் இருக்கை. மனமெப்படி, மனிதனப்படி.

இம்மனது மயங்குந் தன்மை யுடையது. இதன் எண்ணங்களால் தான் மனிதன் கட்டுகளுக் குள்ளாகிறான். பண்டைவினை, முன்வினை, பின்வினைகளுக்கு மனிதனை உள்ளாக்குவது இம்மனமே யாகும்.

மனமதே தோற்ற வாதி
மனமதே பற்றும் வீடும்
மனமதே யெண்ண மாகும்
எண்ணமே வலிய பந்தம்
மனமதே மாயா பாச
மதியென வொளி மறைக்கும்
மனதினை யுறுதி செய்தால்
மற்றொரு வெற்றி யேனோ!

நமது இன்னல்களுக் கெல்லாங் காரணமான மனத்தைத் தூய்மைப் படுத்தி ஒன்றுபடுத்தி வென்றால் அதன் ஆற்றல் அளவிறந்தது.

சினத்தோ டுலகைச்
செயிப்பதினுந் தங்கள்
மனமடக்கி வாழ்தலே மாண்பு.

உலகவெற்றி அவ்வெற்றிக் கீடாகாது. ஆகாயத்தந்தி, தொலையொலி கேட்டல், தொலைப்பொருள் காண்டல், பிறர்மன மறிதல், பிறர்நோய் தீர்த்தல், வியன்செயற் செய்தல் முதலிய வெல்லாம் பழக்கிய மனத்தின் செயல்களே. மனத்தை நன்கு பழக்கவே இராஜயோகத்தில் வளிநிலை, தொகை நிலை முதலிய முறைகள் ஏற்பட்டுள்ளன. இம்முறைகளில் தேர்ந்தால் நம்முள்ளிருக்கும் மஹாசக்தி (குண்டலினி) எழும். மனத்தின் வடிவு நான் எனும் அகந்தை. அவ்வகந்தை அழிந்து எல்லாம் அவன் எனும் நிலை வந்தால் தான் அவனுடைய சக்தியான குண்டலி எழும். அஃதெழுந்த பின், மனிதனுக்கு வரவரத் தன்மறதியும், கீழியல்பின் நாடக முடிவும், கடவுளுணர்ச்சியும் ஏற்படும். அப்போது தான் ஓங்காரவுட் பொருளும், தனிப்பொருளும், சிற்பொருளும், தற்பொருளும் ஒவ்வொன்றாக அற்புதத்திரை தூக்கித் தெய்வ நடனம் புரிந்து நமது மனக்கண்ணில் இலங்கும். இதன் முடிவு சமாதியும் தன்மறதியும், முற்றும் ஈரறக்கலந்த பேரின்பமுமேயாகும்.

ஆனால் மனதினால் மட்டும் மனிதன் கடவுளைக்காண முடியாது. அடுத்தபடியான விக்ஞான கோசத்தில்தான் இராமலிங்க சுவாமிகள் சாகா மருந்தாகப் புகலும் அருட்பெருஞ் சோதியின் வாயிற்படியுள்ளது. அந்த விக்ஞான வொளி தான் தன்னறிவு. அதில் தான் தெய்வப் புலமையுள்ளது. அதன் மீது தான் ஆண்டவன் ஆனந்த நடம் புரிகிறான். சித்தம்பலத்தின் திருவிளக்கு அதுவே! அந்நிலையில் மனிதன் ஏறினால் ஆண்டவனின் லீலைகளை அறியலாம். அவனை உணரலாம். எனினும் ஆனந்த கோசத்திலே தான் சாந்தமாக, என்றுங்களித்துமனிதன் இருக்கலாம். சச்சிதானந்த வாழ்விற்குச் சென்று கடவுண் மயமாயிருத்தல் முடியும்.

இத்தகைத் திரைகளைக் கடந்து எழினும் இறைவனை மனிதன் தனது வாயாலும் மனத்தாலும் அறிய வொண்ணாத நிலையில் "கடவுளில்லை" யென்றால் அவனைக்கண்டு இரங்கவேண்டியதே. மனிதனுடைய சிற்றறிவினால் முடியாததை மறுத்தல் "திராட்சை புளிப் பென்று" நரி யோடிய கதையேயாகும். நரியாவது கண்டது. இவன் விழுங் காணக்கூடாத வொன்றை இல்லையென்று உபதேசஞ் செய்யக் கிளம்புவது இருள், மாயம், மடமை, அகந்தை, பகை, வேற்றுமை, எல்லாஞ் சேர்ந்த புன்மை! பித்த நோயாளன் பலாப்பழம் கசப் பெனல் வியப்பா!

தெய்வ மனிதன்

தெய்வமனிதனின் உணர்ச்சியே கடவுட் புலமை (Cosmic conscience) இது விக்ஞான கோசத்தாலடையும்அருபெருஞ்சோதியால் உண்டாவது. உடல், உயிர், மனம் இவற்றைக் கடந்த நிலையே தெய்வநிலை. இந்நிலையையடைய மனிதன் விக்ஞானகோசத்தில் உழைக்க வேண்டும். இதைத்தன் அகந்தையால் மனிதன் செய்ய முடிவதில்லை. இப்போதுதான் மனிதன் தனக்கு எட்டாத ஒரு பொருளுணர்ச்சியை யடைகிறான்; விசாரத்தால் உண்மையைப் பெறுகிறான்; தான் என்பதை மறக்கிறான்.

எனதென தென்னல் இடாரும்;

என்றும்,

அவனது லென்ன, அருள்

என்பதை யுணருகிறான்; எண்ணங்களையும் சங்கற்பங்களையும் ஒடுக்குகிறான்; ஆண்டவனுக்குத் தன்னைத் தருகிறான்.

மைப்பணமும் போன்ற பரும வுடலுயிரை
மெய்க்கடவுள் மெய்த்தொண் டிற் பெய் [நீ
சுடர்காற்கடல், புவியுந் தோற்றிநமை யாளு
கடவுட்கீந் தன்னைக் களி.

என்ற நம்பிக்கையும் உறுதியும் எய்துகிறான்; "என் செயலால் யாவதொன்றுமில்லை; எல்லாம் உன் செயல்" என்று உருகுகிறான்! அந்தக் காண சுத்தி யடைந்தால்தான் இந்நிலைவரும். சித்தம், மனம், அகந்தை இவற்றைப் புத்தியால் பகுத்தறிந்தடக்கி, சேட்டை யொடுங்கினால் தான் சித்தசுத்தி யேற்படும். அந்தச் சுத்தமே கடவுள் நிலை. அதுவே மனிதனை பந்தத்தி னின்று சுதந்திரப் படுத்தும்; கடவுளுடன் சமரஸப் படுத்தும். அப்போதே,

எல்லா வுலகிற் கிறைவ னொருவன்
எல்லா வுடலும் இறைவ னாலயமே!

என்று தானும் அவனுகப் பிறவும் அவனுகக் காணும் உண்மைச் சமத்துவம் ஏற்படும்.

இவ்வுண்மைச் சமத்துவம் பத்திரிகை, விதண்டவாதம், வசை புராணங்களால் வருமா? நாத்திகத்தால் எய்துமா? மனிதனுடைய அற்பப் புலனறிவிற்குப் புலப்படுமா?

எல்லா வுயிருள்ளும்
ஈசனையே கண்டுவப்போன்
கில்லா நெறி யொன்றுமில்.

"ஸத்வம் யோக வுச்சசே"
"பண்டிதா: ஸம தர்ஸன"

என்ற வுண்மைகளுக்கு அடிப்படை ஆண்டவனின் அருள் விழியன்றோ? அஃதின்றி, அவ்விழியை நாத்திகச் சூட்டுக்கோலாற் பொசுக்கிக்கொண்டு, "என் கண் பொட்டை! விண்ணும் மண்ணும் இருட்டே" என்ற முடிவிற்கு வருதல் உதாரணங்களுக்கு எட்டாத மடமையேயாகும். கீதையில் கண்ணன் "ஏ! அருச்சுனா "ஊனக் கண்ணின் உருக்காணாது! ஞானக் கண்ணை நல்குவேன் காணாய்" என்று கடவுள் விழியை யளித்ததனாலன்றோ விசயன் கடவுட் பேருருவைக் கண்ணனுட் காண முடிந்தது! அக்கண்ணை எப்படிப் பெறுதல் முடியும்! தீவிரமான அறிவு, அன்பாலே தான் விக்ஞான கோசத்திற் பெற முடியும்!

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையான், என்னினல்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன் [லான்
ஒரூர னல்லன், ஓர் உவனில்லி,
அப்படியன், அந்நிறமும், அவ்வண்ணமும்
அவனருளேகண் ணுகக்காணினல்லால்,
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ
[ணாதே!

ஆதலின் ஆழ்ந்த உறுதியும், அடைக்கலமும், உயர்ந்த அறிவும், கீழியல்புகளினின்று முற்றும் விடுதலையும், சித்த சுத்தியும் பெற்றால் தான் "அவனருட்கண்" உண்டாம். அதனால் அவனுடைய காட்சிகளையும், திருவிளையாடல் களையுங் காணலாம். அத் தெய்வம்,

பொல்லாரைப் பொறுத்தழித்துப் புதுமை
[யாக்கும்
புண்ணியரைக் கண்ணெனவே போற்றி
[யாளும்
எல்லையறும் படைப்பணிகள் இலகக்காட்டும்
எம்மதமுஞ் சம்மதமா யேந்துந்தெய்வம்
நல்லபரி பூரணர்கள் நாடுந்தெய்வம்
நடுநின்ற நாயகமாய் நீதிசெய்யும்
எல்லாமுந் தானாகி யிறைவனாகும்
எல்லாமும் வல்லதுமாம் எவர்க்குந்தெய்வம்.

இத்தகைய தெய்வம் உள்ளது! உள்ளது! உள்ளது! கடவுள் உண்டு. ஆனால் அவனைக் காணக் கண்ணில்லை!

கண்ணாயென் கண்ணகற்றாய்
காணக் கருத்தினிலே!
மன்னா மணிவண்ணா
மாதவனே யென்னுயிரே!

உலகக் காட்சி

வழுக்குத் தலையில் விளம்பரம்!

"மான் செஸ்டர் கார்டியன்" பத்திரிகையில் சென்ற மாதத்தில் ஒரு விநோத விளம்பரம் பின்வருமாறு வெளிவந்திருக்கிறது:—"நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்களும், நல்லொழுக்கத்தை யுடையவர்களுமான 12 வழுக்கைத் தலையர்கள் விளம்பரஞ் செய்யத் தேவை. அவர்கள் உடல் நலன் கெடாத முறையில், அவர்கள் தலையில் கருப்பு எழுத்துக்கள் எழுதப்படும். அவர்கள் தொப்பியில்லாமல் நாடகக் கொட்டகைகள், படக்காட்சி சாலைகள், விரிவுரை நிகழும் கூட்டங்கள் முதலிய இடங்களுக்குச் செல்ல வேண்டும். இவ்வழுக்குத்தலையர்களுக்கு எவ்வித தீங்கும் நிகழாவண்ணம், பாதுகாக்க அவர்களுடன் துணைக்கு ஆட்களை அனுப்பிவைக்கக் கம்பெனியார் ஏற்பாடு செய்வார்கள். இவர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். இவ்வித வழுக்குத்தலையர்கள் நல்ல குலத்தினுதித்தோர்களாகவும், நல்லொழுக்க முடையோர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் தலையில் எழுதி விளம்பரஞ் செய்யப் போவது 'டைப்ரைட்டர்' தான். ஏனைய விளம்பரங்கள் அல்ல."

* * *

உயிருடன் புதைக்கப்பட்ட மனிதன்

பாரிஸில், பஸ்ஸால் என்னும் பிரெஞ்சுக் கைதி ஒருவன் சிறையிலிருந்து விடுதலையடைந்த பின்னர், நல்லொழுக்கத்தை மேற்கொண்டு தன் தாயாருடன் வாழ்ந்து வந்தான். சன்மார்க்கத்தை விரும்பாத அவனுடைய பழைய கள்ளக்கூட்டத்து நண்பர்களுள் ஒருவன் அவனை மயக்கி அழைத்துச் சென்று உயிருடன் ஒரு பெட்டியில் வைத்துப் புதைத்து விட்டான். அவனுக்கு, பஸ்ஸால் மிகவும் வருந்தி இறக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டு. எனவே அவன் காலடையில் மரணமடைவதற்காகச் சவப்பெட்டியிலிருந்து ஒரு சிறு குழாயைப் பூமிக்கு வெளியே காற்று நுழையும்படி வைத்து விட்டுச் சென்றான். நாலைந்து நாட்களுக்குப் பிறகு இவ்விஷயம் வெளியாயிற்று. குழியினின்றும் சவப்பெட்டியைத் திறந்து பார்க்கையில், ஆகாரமின்றிப் பெட்டியிலடைப்பட்டிருந்த காரணத்தினால் பஸ்ஸால் இறந்து கிடக்கக் காணப்பட்டான். போலீஸார் புலன் விசாரித்து, இக்கொடுமையான காரியம் செய்தவனைக் கைது செய்து அவன்மீது வழக்குத் தொடுத்தனர். நீதிபதி அவனுக்கு இரண்டாண்டு காவல் தண்டனையும், 5 பிராங்க் அபராதமும் விதித்தார்.

* * *

பேய்களின் இன்னல்

இலங்கையில் நடந்த ஒரு விசேஷ சம்பவத்தைக்குறித்து "இலங்கை மார்னிங் லீடர்" பத்திரிகையில் நிருபர் ஒருவர் பின் வருமாறு எழுதுகிறார்:—இலங்கை, அம்பலாங்கொடையில் சுருட்டுக்கடையில் உதவியாளாக இருக்கும் முத்துச்சாமி யென்பார் எலிப்பிட்டியா முதலிய அயல் கிராமங்களுக்கு சுருட்டுக் கொண்டு போய்க் கொடுத்து வருவார். இவர் துவிசக்கர வண்டியிற் போவது வழக்கம். சில நாட்களின் முன் ஒரு நாள் இரவு மழைத்தூற்றலில் இவர் அம்பலாங் கொடையை நோக்கி வெகு வேகமாக வந்து கொண்டிருக்கும் பொழுது ஒன்பது மைலுக்கப்பாலிருக்கும் மயானத்திற்குச் சமீபத்தில் இவருடைய வண்டி விளக்கு அணைந்து விட்டது. விளக்கை ஏற்றிக்கொண்டு இவர் வண்டியி லேறும்பொழுது, மற்றொருமுறை தீபம் நின்று விட்டது. இம்முறை யாரோ அதை வாயினால் ஊதி நிறுத்தியதாக இவர் உணர்ந்தார். இவருடைய பார்வைக்கு ஆண்மைத் தோற்றமுடைய ஒரு பெண், தமிழரின் உடை யுடையவளாயும், இருமருங்கும் இரு பிள்ளைகளுடன் தமக்கருகில் வருவதைக் கண்டார். உடனே முத்துச்சாமி தமிழ் மொழியில் விளக்கை அணைத்ததற்காக அவளை வைது, இந்நேரத்தில் இவ்விடத்தில் என்ன வேலையென்றும் கேட்டார். அவள் தான் வழிக்குத் துணையின்றி நிற்பதாகவும் அவருடன் சேர்ந்து போக விழைவதாகவும் கூறினாள். பின் அவர் இரக்கங்கொண்டு அவளையும் பிள்ளைகளையும் முன்னால் நடக்கவிட்டுத் தான் பின்னால் போவாராயினர். இவ்வாறாக எல்லோரும் சுடுகாட்டுக்குச் சமீபமாக வந்தவுடன் பழையபடி விளக்கு அவிந்தது. உடனே அப்பெண்ணும் இரு சிறுவரும் முத்துச்சாமியின் தொண்டையைப் பிடித்துக்கொண்டு நெறித்தனர். இம்மூவருக்கும் முத்துச்சாமிக்கும் பெரும் போர் விளைந்தது. முத்துச்சாமி களைப்புற்றுத் தன்னிடமிருந்த கத்தியை எடுத்தார். கத்தியை எடுத்தவுடனே அப்பெண்ணும் பிள்ளைகளும் மறைந்தனர். பின் முத்துச்சாமி போலீஸ்டேஷனுக்குப் போய் நிகழ்ந்தனவற்றை எழுதி வைத்துவிட்டு ஆஸ்பத்திரி யடைந்தார். அங்கு நான்கு நாள் தங்கி யிருந்தார். அவருக் குண்டான இரத்த வாந்தியும் வயிற்றோட்டமும் நிற்காமலிருக்கக் கடைக்குச் சொந்தக்காரர் எங்குந் தேடி அவர் சிகிச்சா சாலையில் இருப்பதை அறிந்து அவரை அழைத்துச் சென்று ஒரு மந்திரவாதியின் பார்வையில் விட்டு இப்போது குணமடைந்திருக்கின்றார். இவருக்கு வைத்தியம் செய்த டாக்டர் அந்தச் சுடுகாட்டில் பிசாசுகள் உள்ளன வென்பது ஒப்புக்கொள்ளத் தகுந்த விஷயம் என்றாராம்.

ஹார்டாய் ஜில்லா மகாநாடு

ஸ்ரீமான் தாண்டனின் சொற்பொழிவு

மகாத்மாவின் வேண்டுகோள்

மிகவும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் ஹார்டாய் ஜில்லா அரசியல் மகாநாடு 10-10-29ல் ஸ்ரீமான் புருஷோத்தம தாஸ் தாண்டனின் தலைமையின்கீழ் கூடியது. முதலில் தேசிய கீதம் பாடப்பட்டது. ஸ்ரீமான் தாண்டன் தமது பிரசங்கத்தில் காங்கிரஸ் மகாசபை ஏற்பட்டது முதல் தேசிய இயக்கத்தின் நான்குவித நிலைமைகளின் விருத்தாந்தத்தைக் கூறிவிட்டு மேலே பேசியதாவது:— காங்கிரஸ் ஏற்பட்டபின் 45 வருஷங்களில் பல ஆசியா தேசங்கள் ராஜீய சமூக விடுதலையைப் பெற்றிருக்கின்றன. அரசியல் கிளர்ச்சியின் ஒவ்வொரு அலையும் நம் தேசத்தில் சுயேச்சை இயக்கத்தைப் பலப்படுத்திய போதிலும், முடிவான பலன் சொற்பமாகவேயிருக்கிறது. நாம் இன்னும் அடிமைகளாகவே இருக்கிறோம். ஒத்துழையாமை இயக்கம் நல்ல பலனையளிக்கும் போலிருந்தது. ஆனால் நாம் தகுந்தபடி வேலை செய்யாததால் நமது இலட்சியம் நடத்திவைக்கப்படவில்லை. இவ்வருஷத்திற்குள் ஜனங்களின் கோரிக்கையை நடத்தி வைக்க அரசாங்கத்தார் தகுந்தஏற்பாடு செய்யாவிடில் பூரண சுயேச்சையே இலட்சியமாகக் கொள்ளப்பட்டு விடுமென்று சென்ற வருஷத்திய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. அதனால் தான் தொழிற் கட்சி அரசாங்கம் சர்வ கட்சி மகாநாடு கூட்ட விரும்புவதாயும் அதில் இந்தியர்களின் பிரதிநிதிகள் இருப்பார்களென்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூற வாரம்பித்திருக்கின்றன. அத்தகைய கதைகளைக்கேட்டு ஜனங்கள்ஏமாந்து போகவேண்டாம். நாம் நமது பலத்தைக்கொண்டு நின்றாலொழிய எந்தக் கட்சியும் எவ்வளவு பலமாகவிருந்தாலும் நமக்கு ஸ்வாராஜ்யத்தையளிக்க முடியாது. ராஜீப் பேச்சு ஆரம்பிக்கப்படுமுன் நான் இரண்டு விஷயங்களை வற்புறுத்த விரும்புகிறேன். இதர சுய ஆட்சிபெற்ற குடியேற்றநாடுகளைப்போல் வரவுசெலவு இராணுவம் இரண்டிலும் பூரண ஆதிக்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நம்மிடம் ஒப்புவிக்கப் பட்டுவிட வேண்டுமென்பது வியக்தமாக உணரப்படவேண்டும். அடுத்த காங்கிரஸ் சம்பந்தப்பட்ட வரையில் காங்கிரஸ் மகாசபை சட்டசபைகளுடன் நேராக ஒரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது. காங்கிரஸ் சட்டசபைகளைப் பகிஷ்கரிக்கவோ அவற்றில் கலந்து கொள்ளவோ கூடாது. சட்டசபைகளின் மூலம் ஏதாவது சில சில்லரை அனுகூலங்களைப் பெறலாம். ஆனால் தேசத்தின் சுயேச்சையைப் பெறும் விஷயத்தில் அவை சிறிதும் பிரயோஜனப் படக்கூடியவை அல்ல. சுயேச்சையைப் பெறுவதற்குத் தயார் செய்துகொள்ள வேண்டும். அதற்கு ஒரே வழிதா னிருக்கிறது. அதாவது தியாகங்களைச் செய்வதற்குத் தயாராகவிருக்கவேண்டும். பலமற்ற தேசமெதுவும் சுயேச்சை பெறமுடியாது. பலத்தைப் பெற்றால் சுயேச்சை தானாகவே வந்துவிடும்.

காங்கிரஸ் மகாசபை சட்டசபைகளுடன் ஒருவிதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், ஆனால் அங்கு செல்ல விரும்புகிறவர்களுக்குச் சுயேச்சை யளித்துவிட வேண்டுமென்றும் லாகூர் காங்கிரஸிற்குச் சிபார்சு செய்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்னொரு தீர்மானம் அடக்கு முறையைக் கண்டித்தது. இராணுவம் வரவு செலவு இவற்றின் பூரண ஆதிக்கத்தை ஒப்புவித்து விடுவதை ராஜீப் பேச்சுக்கு அஸ்திவாரமாகக் கொள்ளப் பட்டாலொழிய தலைவர்கள் ஸர்வ கட்சி மகாநாடு எதற்கும் செல்லக்கூடாதென்று இன்னொரு தீர்மானம் கேட்டுக்கொண்டது. தீண்டாமை விலக்கு, கோஷா முறை விலக்கு முதலியவற்றைப் பற்றியும் ஸ்ரீ யதீந்தாஸின் தியாகத்தைப் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகாத்மா காந்தி 8-30-மணிக்கு மகா நாட்டிற்கு வந்தார். பலமான கரகோஷத்துடன் அவர் வரவேற்கப்பட்டார். மகாநாடு கலையுமுன் அவர் சிறிது நேரம் பேசியது வருமாறு:—நாம் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு அவற்றை அனுபவத்தில் நடத்தி வைக்காமலிருக்கும் வழக்கத்தைப் பெற்றிருக்கிறோம். அதை விட்டு விடவேண்டும். நமது முன்னேற்றப் பாதையில் அது ஒருபெரிய தடையாகவிருக்கிறது. 1921ம் வருஷத்தில் நாம் கூறியபடி நடத்தி வைத்திருந்தால் இதற்கு முன்னதாகவே சுயராஜ்யத்தைப் பெற்றிருப்போம். நாம் சோதனைக் குட்படுத்தப்படமோறு இன்னொரு சந்தர்ப்பம் சமீபித்துக் கொண்டிருக்கிறது. இம்மாகாணத்தின் ஜனங்களுக்கு ஒருபிரத்தியேகப் பொறுப்பு இருக்கிறது. ஏனெனில் உங்கள் மாகாணந்தான் அடுத்த காங்கிரஸின் தலைவரை யளித்திருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு உங்கள் மாகாணத்தைச் சேர்ந்தவர். அதோடு அவர் யுவராயுமிருக்கிறார். நீங்கள் உங்களுடைய மதிப்பையும் பண்டித ஜவஹர்லாலின் மதிப்பையும் பாதுகாத்துக்கொள்ள விரும்பினால் வாயால் கூறுகிறபடி காரியத்தில்நடத்த வேண்டும். நீங்கள் தீண்டாமையைப்பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறீர்கள். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றியும் அம்மாதிரித் தீர்மானம் செய்யுங்கள். கதரை உபயோகித்தால்தான் அந்நியத் துணி பகிஷ்காரத்தை நடத்தி வைக்கலாம். இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால் அவற்றின்படி நடவுங்கள். வரப்போகும் போராட்டத்திற்குத் தயாராக விருக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

லஜபதிராய் ஞாபகச் சின்ன நிதிக்கு 1000 ரூபாய் உள்பட 6000 ரூபாய் வசூலிக்கப்பட்டது. மகாநாடு உற்சாகத் துடன் முடிவுபெற்றது.

மைசூர் ஜனப்பிரதிநிதி சபை

திவானின் பிரசங்கம்

14-10-29 பகல் 12-மணிக்கு மைசூர் ஜகன் மோகன் அரண்மனையில் மைசூர் ஜனப்பிரதிநிதி சபையைத் திவான் திறந்துவைத்தார். அப்பொழுது திவான் ஜனாப் மிர்ஸா இஸ்மேல் பின்வருமாறு பேசினார்:—சமீபத்தில் சமஸ்தானத்திற்கு இராஜப் பிரதிநிதி வரப்போகிறார். மைசூர் அவரிடம் அத்யந்தமான நன்றி காட்ட கடமைப்பட்டிருக்கிறது. அதனால் இந்த சமஸ்தானத்தில் அவர் மிக்க அந்நியோன்யமாக வரவேற்கப்படுவார்.

பிறகு திவான் வரவு செலவு கிராமப் பஞ்சாயத்து, நீர்ப்பாசன வேலைகள், ரெயில்கள், மின்சார இலாகா, விவசாய இலாகா, கைத்தொழில் வியாபாரம் கல்வி ஆகிய துறைகளில் அரசாங்கத்தார் கையாளும் கொள்கையையும் அனுஷ்டானத்தில் செய்துவரும் காரியங்களையும் எடுத்துரைத்தார். அவர் மேலும் பேசியதாவது:—ஜுன் மாதத்தில் ஆஜர் செய்த திருத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் கண்டதை விட அதிகமான வரவுவர் திருக்கிறது. சென்ற வருஷத்தில் செலவு போக 33 லட்ச ரூபாய் அதிகம்கிடைத்திருக்கிறது. கீழ்த்தர உத்தியோகத்தி லுள்ளவர்களின் சம்பளம் முதலியவற்றை விருத்தி செய்யவேண்டிய விஷயம் முக்கியமானதாயும் அவசரமாக செய்து முடிக்கவேண்டிய காரியமாகவும் இருக்கிறது. இதனைப் பூர்த்தி செய்வதற்கான வழியைக் கண்டு பிடிக்க என்னாலியன்ற முயற்சி யனைத்தையும் செய்வேன். பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை நிர்வாக போர்டிலிருந்து ஸர். எம். விஸ்வேஸ்வர ஐயா விலகிக் கொண்டதால் இத்தொழிற்சாலை ஒரு பெருத்த நஷ்டத்தை அடைந்திருக்கிறது. அரசாங்கத்தார் ஏற்கனவே திறந்து வைத்துள்ள இராட்டின வகுப்புகளை நீடித்து நடத்த அனுமதித்ததுடன், இன்னும் பத்து கிராமாந்திர மிடில் ஸ்கூல்களில் இராட்டினவகுப்பை ஏற்படுத்தவும் அரசாங்கத்தார் அனுமதி கொடுத்திருக்கின்றனர். இதற்கு இராட்டினவகுப்புகளைப் பிரபலியப் படுத்தவும் இச்சபையிலுள்ள ஸ்தல ஸ்தாபனம் பிரதிநிதிகளின் கோரிக்கையை மதிக்கவும் கொண்ட எண்ணமே காரணமாகும். நியாயமானதொரு அளவிற்குட் பட்ட கிராமத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் போதிய குடி ஜல வசதி இருக்கும்படி செய்யக்கூடிய திட்டத்தை அரசாங்கத்தாரும் ஸ்தல ஸ்தாபனங்களும் தயாரிக்கக் கடமைப் பட்டிருக்கின்றன. பிரஜைகளும் ஒவ்வொரு வகுப்பினரும் சௌகரியமாகவும் திருப்தியுடனும் வாழும்படி செய்வதே நமது முக்கிய நோக்கமாகும். இப்பெரும் கடமையை நாம் அனைவரும் சேர்ந்து செய்வதை எதுவும் தடுக்காமலிருக்குமாக. "சு. மி."

மணித்திரள்

இமயமலையில் டாலுங் என்ற பனிப் பிரதேசத்தில் 'சோக்பா' என்னும் [illegible] உருவமுடைய பனிக்கட்டி மனிதர்கள் [illegible] கிறார்களாம்.

* * *

பிரிட்டிஷ் பைபிள் பிரசார சங்கத்தார் 1928ம் ஆண்டில் இந்தியாவில் 13,[illegible] பைபிள் புத்தகங்களைச் சொந்த [illegible] விற்றிருக்கிறார்கள்.

* * *

இங்கிலாந்தில் பெண்கள் முகங்களை அழகு படுத்துவதற்கும், கூந்தலைச் சிங்காரிப்பதற்கும் ஓர் ஆண்டுக்கு 650 லட்சம் பவுன்கள் செலவழிக்கிறார்கள்.

* * *

லண்டனிலுள்ள தென்ரயில்வே கம்பெனியார், லண்டனில் மின்சார ரயில் [illegible] உத்தேசித்திருக்கிறார்கள். அதற்கு [illegible] 20 லட்சம் பவுன் செலவழியு[illegible] கூறப்படுகிறது.

* * *

நியூஸிலாந்தில் கிரைஸ்ட் சர்ச் என்னு மிடத்திலுள்ள இரண்டு ஆராய்ச்சியாளர்கள் சில வஸ்துக்களை மின்சார சக்தியால் ஒன்றுபடுத்தித் தங்கம் செய்யும் [illegible] வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

* * *

எறும்புகளுக்குத் தலையின் இருபுறங்களிலும் இரண்டு மெல்லிய மயிர்களிருக்கின்றன. இவை இரண்டும் ஓரிடத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இணைப்புகள் [illegible] கேற்றபடி நான் கிலிருந்து பதின் மூன்று வரை இருக்கும். இந்த மெல்லிய மயிர்களினால்தான் எறும்புகள் முகரும் சக்தி பெற்றிருக்கின்றனவாம்.

* * *

இங்கிலாந்திலுள்ள ஸ்ரீ வின்போல்ட் என்னும் பண்டைய சரித்திர ஆராய்ச்சிக்காரர் டான்பிரட்ஜ் என்னுமிடத்தில் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்யும்போது, குழந்தைகள் விளையாடும் பொம்மை ஒன்றைக் கண்டெடுத்தார். அப்பொம்மை நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று அவர் கூறுகிறார்.

நூலாசிரியர்: நான் எழுதிய நாவலைப் படிக்கிறீர்களா? கதை எப்படி முடிகிறதென்று பார்ப்பதற்காகக் கடைசி பக்கம் வரை படித்து விட்டீர்களென்று [illegible]கிறேன்.

வாசகர்: இரண்டே அத்தியாயங்கள் படித்தேன். உடனே, ஏன் இந்த நாவலைப்படிக்க ஆரம்பித்தோம் என்ற எண்ணம் உண்டாகி விட்டது.

* * *

கான்ஸ்டேபில்: (திருடனைப் பார்த்து) பார்த்தாயா, உன்னைக் கையும் பிடியுமாய்ப் பிடித்து விட்டேன். இம் மாதிரி [illegible] பட்டுக்கொள்வது மூன்றாம் தடவை.

திருடன்: உங்கள் உத்தியோக காலத்தில் மூன்று முறைதான் திருடனைப் பிடித்திருக்கிறீர்களா?

* * *

ஓர் ஆசிரியர் தமது மாணவர்களைப் பார்த்து "தைப்பற்றிப் பேசினாலும், பேசுவதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும். அதற்காக இனி, யாரேனும் ஏதாவது விஷயம் சொல்ல வேண்டுமானால் ஐம்பது வரையில் எண்ணி விட்டுப் பிறகு சொல்லவேண்டும்; முக்கியமான விஷயமாயிருந்தால் நூறு எண்ணி விட்டுப் பிறகு சொல்ல வேண்டு" மென்று கூறினார். சில நாட்கள் கழித்து, ஆசிரியர், நெருப்புச் சட்டிக்குப் பின்னால் நின்று கொண்டு ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் சொக்காயில் தீப்பற்றிக்கொள்ள ஆரம்பித்தது. அப்பொழுது அவருடைய மாணவர்கள் ஒன்று, இரண்டு என்று எண்ண ஆரம்பித்தார்கள். இதற்குள், நெருப்பு, உபாத்தியாயரின் தலைமயிரைப் பற்றிக்கொண்டது.

* * *

ஓர் இராணுவ உத்தியோகஸ்தர்: (புதிதாக இராணுவத்திற்கு வந்த சேர்ந்தவனைப் பார்த்து) நீ சேரப்போகும் பட்டாளத்தை உன் உடன்பிறந்த சகோதரர்களைப் போல மென்று கருதவேண்டும். [illegible] இந்தப் பட்டாளத்தின் தகப்பனாராக [illegible] வேண்டும். தெரிந்ததா?

இராணுவத்தில் சேர்ந்தவன்: [illegible] அப்பா!

* * *

ஸ்ரீமான் ராம்ஸே மாக்டோனல்டு அமெரிக்காவில் ஆடம்பரமாக வரவேற்கப் பட்டார்! சரி. ஸ்ரீ மாக்டோனல்டும் ஸ்ரீ ஹூவரும் என்ன செய்[illegible] தெரியுமா? மீன் பிடிக்கப் [illegible]!

இந்தியதத்துவ ஞானிகளின் 5-வது காங்கிரஸ் 18, 19, 20-12-29ந்தேதிகளில் லாகூரில் நடைபெறும்.

o o o

டாக்டர் பெசன்ட் அம்மையாரும், ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியும், ஐரோப்பாவினின்றும், பம்பாய்க்கு 25-10-29ல் வந்து சேர்வார்கள்.

o o o

பிரிட்டிஷ் முதல் மந்திரி ஸ்ரீ ராம்சே மாக்டொனல்டுக்கு அமெரிக்க வாஷிங்டன் சர்வ கலாசாலையார் 9-10-29ல் டாக்டர் பட்டம் அளித்தனர்.

o o o

1928 அக்டோபர் முதல் 1929 செப்டம்பர் வரை, அதாவது ஓர் ஆண்டில் சென்னைத் தமிழ்நாடு காங்கிரஸ் கதராலயத்தில் 1,22,235 ரூபாவுக்குக் கதர்விற்பனையாயிருக்கிறது.

o o o

காலஞ் சென்ற ஸ்ரீமான் யதீந்திரநாததாஸரின் சிரார்த்தம் கல்கத்தாவில் 13-10-29ல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்று ஆயிரக்கணக்கான ஏழைமக்களுக்கு அன்னமளிக்கப்பட்டது.

o o o

அலகாபாத் சர்வ கலாசாலையைச் சேர்ந்த வங்காள மாணவரான திரு. ராபன் சாட்டர்ஜி என்பார், கல்கத்தாவில் கார்ன்வாலிஸ் குளத்தில் இறங்கி, 54½ மணி நேரம்வரை நீந்திக் கொண்டிருந்த பின்னர் கரையேறினார்.

o o o

தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியார், அவர்களுடைய நிர்வாகத்துக் குட்பட்ட 400 ஆலயங்களில் தென்னைமரங்களை எக்காரணத்தைக் கொண்டும் கள் இறக்க விடக்கூடாதென்று ஒரு தீர்மானம் செய்திருக்கின்றனர்.

o o o

தஞ்சை, டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் முயற்சியினால், கரந்தைத் தமிழ் சங்கத்தில் வாரந்தோறும் உயர்திரு. வாலையானந்த சுவாமிகள் சித்தாந்தப் பாடம் நடத்திவருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

o o o

வரும் நவம்பர்மாதத்தில் மைசூருக்கு இராஜப் பிரதிநிதி விஜயஞ் செய்யும்போது, வரவேற்பு, முதலிய காரியங்களுக்குச் செலவழிக்க மைசூர் அரசாங்கத்தார் மூன்று லட்ச ரூபா ஒதுக்கி வைத்திருக்கின்றனரென்று தெரிகிறது.

o o o

திரிச்சிராப்பள்ளி, பிஷப் ஈபர் காலேஜில் வால்ஸ் விடுதியில் இருக்கும் பி. ஏ. ஹனர்ஸ் வகுப்பு மாணவராகிய திரு. சத்தியமூர்த்தி ஐயர் என்பார் 14-10-29ல் காலை இறந்து கிடந்தார். அவர் பணக்கஷ்டத்தினால் விஷமுண்டு தற்கொலை புரிந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

o o o

அண்மையில் ஜப்பான் சக்கிரவர்த்தினிக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. இது குறித்து அந்நாட்டில் மகிழ்ச்சி கொண்டாடப்பெற்றது. ஆனால் பிற்காலத்தில் சிம்மாசனம் ஏற, சக்கிரவர்த்திக்கு இதுவரை ஓர் ஆண் மகவும் பிறக்கவில்லையே என்ற கவலை இருந்து வருகிறதாம்.

o o o

போலீஸ் அதிகாரிகளால் அனுமதிக்கப்படும் விசேட ஊர்வலங்களுடன் செல்லும் போது மட்டுந்தவிர்த்து, ஏனைய காலங்களில் எல்லாப் பாதசாரிகளும், சாலைகளின் இரு மருங்கிலும் கட்டப்பட்டிருக்கும் மேடை வழியே செல்ல வேண்டுமெனச் சென்னைப் போலீஸார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

o o o

சென்னை, மாகாண முஸ்லீம் மகா நாட்டின் காரியக்கமிட்டியின் கூட்டமொன்று நடைபெற்றதில், மகாநாட்டை 30-11-29, அல்லது 1-12-29ல் கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மௌலானா முகம்மது ஷபீ தாவூதி அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளார்.

o o o

சென்ற வாரம், பம்பாயில், நடைபெற்ற சட்டசபை பிராமணரல்லாதார் கட்சியின் கூட்டத்தில், வரப்போகும் சீர்திருத்தம் சம்பந்தமாக கட்சி அபிப்பிராயத்தை எடுத்துக் கூறப் பிராமணரல்லாதார் பிரதி நிதிக் கூட்டமொன்றை இங்கிலாந்திற்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

o o o

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா எட்டாவது தேசீய மகாநாடு நாளது சுக்கிலஹு ஐப்பசி மாதம் 10, 11உ (1929-ம்ஹு அக்டோபர்மீ 26, 27) களில் ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அவர்கள் தலைமையின்கீழ்த் தொம்பக்குளம் கிராமத்தில் நடைபெறும் என்று வரவேற்புக் கூட்டத்தினர் அறிவிக்கின்றனர்.

கலம்பகம்

லண்டனில் ஒரு வாடகை மோட்டார் வண்டியில் ஒரு பிரெஞ்சு மாதும், ஒரு வாலிபரும் திடீரென மரண மடைந்திருந்ததைக் குறித்துச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம். விசாரணையில், புத்தி ஸ்வாதீனமின்றி அம்மாது முதலில் அவ்வாலிபரைக் கொன்றுவிட்டுப் பின்னர்த்தற்கொலைபுரிந்து கொண்டதாகத் தெரிய வந்தது.

o o o

ஸ்ரீ காஞ்சீபுரம் நிமந்தக் காரத் தெருவிலிருக்கும் ஸ்ரீலஸ்ரீ : ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்மடத்தில் (25-9-29) புதன்கிழமை மாலை 6மணி முதல் இரவு 9மணி வரை மகா சங்கீத வித்வானும், வீணைவித்வானுமாகிய ஸ்ரீமான் அரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களால் தக்க இன்னிசைக் கருவிகளுடன் வீணைக்கச்சேரி ஒன்று நடத்தப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது.

o o o

காவேரி மேட்டூர் அணைத்திட்டத்தின் சம்பந்தமாக விவசாயிகளின் மகாநாட்டு ஆலோசனைக் கூட்டம் ஒன்று பவானியில் திரு. அழகிய கவுண்டர் கட்டிடத்தின் மாடியில் 18-10-29ல் பகல் 2 மணிக்குக் கூடும். அதற்கு திருச்சி, சேலம், கோயமுத்தூர் ஜில்லா விவசாயிகள் ஒவ்வொருவரும் தவறாமல் விஜயஞ் செய்ய வேண்டு மென்று மேற்படி கூட்டத்தின் அமைப்பாளர்கள் அறிவிக்கின்றார்கள்.

o o o

விருத்தாசலத்தின் விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்கு வட பாகத்தில் செல்லும் மணிமுத்தாநதியின் இருபக்க ஓரங்களிலும் ஜனங்கள் மலத்தைக் கழித்து, ஆபாசம் செய்கிறார்கள். இதனால் அநேகதீமைகள் ஜனங்களுக்கு உண்டாகின்றன. ஆகையால் இதனை விருத்தாசல வாசிகளும் இன்னும் சுகாதார உத்தியோகஸ்தர்களும் கவனிக்கும்படி கேட்டுக் கொள்வதாக ஒரு யாத்திரை வாசி தெரிவிக்கிறார்.

o o o

வங்கவாசி உயர்தரக் கல்விச்சாலையைச் சேர்ந்த "வடநாங்கூர் அருணசல முதலியார் பாலாம்பாள் மாணவ தரும விடுதியின்" கட்டடத்துக்காக அஸ்திவாரவிழா, 1929ஹு அக்டோபர்மீ 18உ சுக்கிரவாரம் பிற்பகல் 4½-மணிக்கு, சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் S. முத்தையா முதலியார் அவர்கள் B. A. B. L., M. L. C, தலைமையின் கீழ் நடைபெறும் என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

o o o

நவராத்திரி கடைசி நாளில் பூனாவில் குன்றின் மேலுள்ள பார்வதி அம்மன் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் தரிசனத்திற்காக வருவது வழக்கம். எனவே கோயிலதிகாரிகள் 12-10-29ல் தீண்டாத வகுப்பினர் கோயிலுக்குள் நுழைந்து விடுவார்களென்ற பயத்தினால், கோயிலை மூடி விட்டார்கள். இதனால் தரிசனத்திற்குவந்த பெருந் திரளான மக்கள் கோயிலைச் சுற்றிலும் கூடி விட்டார்கள். முன்னரே தெரிவித்துள்ளபடி தீண்டாத வகுப்பினர் சத்தியாக்கிரகம் செய்யப் போகின்றனர் என்று தெரிகிறது.

o o o

அம்மாபேட்டை, தீபகர் வாசகசாலையின் அபிவிருத்திக்காக சக்காக்கியிலிருந்து திருவாளர்கள் குப்புசாமி நாயுடு அவர்கள் ரூ. 10-ம் வீரபத்திர பிள்ளை அவர்கள் ரூ. 10-ம் இராமசாமி பிள்ளை அவர்கள் ரூ. 10-ம் சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் ரூ. 10-ம் நல்லமுத்து பிள்ளை அவர்கள் ரூ, 5-ம் முத்திருளாண்டி பிள்ளை அவர்கள் ரூ. 5-ம் சகாயதனமாக அனுப்பியுள்ளார்கள். அவைகளை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம். வாசகசாலை விருத்தி யடைந்து வருமாறு அன்பர்கள் உதவிசெய்தமைக்காக இவ்வாசகசாலையின் சார்பாக மிகவும் நன்றி பாராட்டுகின்றேன் என்று தலைவர் தெரிவிக்கிறார்.

o o o

லண்டன் தெருக்களில் மட்டும் மோட்டார் விபத்துக்களால், இவ்வாண்டு சென்றவாண்டைவிட உயிர்ச்சேதங்கள் அதிகமாகவிருக்கின்றன. 1929 ஆண்டில் நாளொன்றுக்குச்சராசரியாக நான்குபேர்மரணமடைந்து வருகின்றனர். சென்றவாண்டில் நாளொன்றுக்கு மூன்று பேரே மரண மடைந்தனர். இவ்வாண்டு முதற் பகுதியாகிய ஜனவரி மாதத்திலிருந்து மார்ச் மாதம்வரை இறந்தவர்களின் தொகை 251 பேர். இரண்டாம் பகுதியாகிய எப்ரல் மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை 364 பேர் மரணமடைந்திருக்கின்றனர்; 16,000 பேர் காயமடைந்திருக்கின்றனர். இத்தத் தொகை முற்பகுதியைவிட 6000 பேர் அதிகமாம்.

o o o

கந்தசாமி செட்டி, பாலசாமி செட்டி அப்புசெட்டி என்னும் மூவரும் பார்வதி என்னும் மாதை ஈரோடிலிருந்து 9-10-29ல் சென்னைக்கு அழைத்து வந்ததாகவும், பின்னர் அவளை ஒருவீட்டில் அடைத்து மயக்கமருந்துகொடுத்து, சுமார் 700 ரூபா பெறுமான அவளுடைய ஆபரணங்களைக் கொள்ளைகொண்டதாகவும், சில நிமிஷங்களில் மயக்கந்தெளிந்த உடனே, அம்மாது நகைகள் களவுபோனது பற்றிக் கூக்குர லிட்டதாகவும், அதைக் கேட்ட அயலகத்தோர் ஓடிவந்து கந்தசாமி செட்டி, பாலசாமி செட்டி இருவரையும் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைக்க இவர்களிடம் நகைகளுமிருந்தன வென்று கூறப்படுகிறது. விசாரணை நடந்துவருகிறது.

o o o

சென்றவாரம், மயிலாப்பூர் பிருந்தாவனம் சாலையிலுள்ள ஸ்ரீமான் ஜி. இலட்சுமி நாராயணா என்னும் வழக்கறிஞர் வீட்டிலுள்ள அவருடைய 1½ வயது குழந்தையின் கழுத்திலிருந்த ஒரு பொன் சங்கிலி களவுபோய் விட்டதாகப் போலீஸாரிடம் பிராது கொடுக்கப்பட்டது. திருடியவன் ஓர் ஆக்திரரைப் போலிருந்ததாகவும், கட்சிக்காரன் என்று சொல்லிக்கொண்டு உள்ளே வந்து வெளியே சென்றிருந்த வழக்கறிஞர் வரும் வரை காத்திருந்ததாகவும், வீட்டிலுள்ளோர் அஜாக்கிரதை யிருந்தபோது அவன் குழந்தையின் கழுத்திலிருந்த நகையைத் திருடிக் கொண்டு ஓடி விட்டதாகவும் கூறப்படுகின்றன. போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

o o o

டொர்காடு ஜில்லா 12-ம் நெம்பர் வடநாங்கூர் ஐக்கிய நாணயச் சங்கத்தின் "இருபத்தைந்தாவது வருஷோர்த்தக் கொண்டாட்டம்" (Silver Jubilee) 1929-ம்ஹு அக்டோபர்மீ 19உ சனிக்கிழமை பகல் 12½-மணிக்கு வடநாங்கூரில் நடைபெறும். அவ்வமயம் சென்னை கவர்ன்மெண்டு அபிவிருத்தி இலாகா மந்திரியார் கனம் எம். ஆர். சேதுரத்னமய்யர் அவர்கள் எம்.எல்.சி. தலைமை வகிக்கச் சம்மதித்துள்ளார்கள். அதுகாலை சுகாதார இலாகா மந்திரியார் கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் பி. ஏ. பி. எல்., எம். எல். ஸி., ஷை சங்கத்துப் பிரசிடெண்டின் உருவப்படத்தைத் திறந்து வைக்க இசைந்துள்ளார்கள் என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

o o o

9-10-29ல் ஒரு வாலிபன், சென்னை, வேப்பேரி, ஹண்டர்ஸ் தெருவிலுள்ள ஸ்ரீமதி ராபர்ட்ஸ் என்னும் ஆங்கிலோ இந்தியமாது வீட்டிற்குச் சென்று, அங்கு விற்பனைக்கு வைத்திருந்த சில மரச்சாமான்களை 85 ரூபாவுக்கு வாங்குவதாக முடிவு செய்து கொண்டு பிறகு அவன், ரூபா பதினைந்தையும், சாமான்களையும் வேலைக்காரியின் மூலம் அனுப்பிவைத்தால், நூறு ரூபா நோட்டு அனுப்புவதாகக் கூறி அப்படியே ஸ்ரீமதி ராபர்ட்ஸ் வேலைக்காரியை அவருடன அனுப்பினதாகவும், கொஞ்சதூரம் சென்றபிறகு ஒரு பாழடைந்த மாளிகையில் அந்தவேலைக்காரியை உட்காரவைத்துவிட்டு, அவளிடமிருந்த பதினைந்து ரூபாவைப் பெற்றுக்கொண்டு மறைந்துவிட்டதாகவும் சொல்லப் படுகின்றன. ஆள் இன்னும் அகப்படவில்லை.

o o o

பிரேஜ்பூர் ஜில்லாவைச்சேர்ந்த பிருவாலா கிராமத்திலுள்ள ஒரு கிணற்றில், கிராமவாசிகள் சணல்நார் கட்டுகளைக் கயிறு உற்பத்தி செய்யும் பொருட்டு ஊறப்போடுவது வழக்கம். சில சமயங்களில் அச்சணல் நார் கட்டுகள் அழுகிப் போகிறது முண்டு. இவைகளினால் அக்கிணற்றுத் தண்ணீர் துர்நாற்றம் வீசியதுமன்றி, விஷமாகவும் மாறி விட்டது. ஒரு நாள் ஒருவர் சணல்கட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு அக்கிணற்றுக்குள் இறங்கியதாகவும், உடனே தேகமெல்லாம் எரிச்சலுண்டாகிறதென்று கத்தியதாகவும், அவரை மீட்க இறங்கிய ஐவரும் அதே பலனை அடைந்ததாகவும், அவர்கள் அறுவரும் வெளியே எடுக்கப்படு முன்னரே மரணமடைந்து விட்டதாகவும் கூறப்படுகின்றன. ஒருவருடைய தேகத்தில் அக்கிணற்றின் தண்ணீர் பட்டவிடமெல்லாம்கொப்பளித்துப் போய்விட்டதாம்.

காந்தியடிகளின் 60-ம் ஆண்டுவிழா

பினாங்கு

கதர் அரசரும், உலகில் பெரியவருமாகிய மகாத்மா காந்தியடிகளின் 60-ம் ஆண்டு விழாவின் கொண்டாட்டம் இவ்வூர் [illegible] சிலர்களால் வழக்கம்போல் புரட்டாசி [illegible] பதினைந்தாம் நாள் [illegible] தெருவில் கொண்டாடப் பெற்றது. [illegible] மாலை 4-மணிக்கு மகாத்மா படத்திற்கு கதர் அணி புஷ்பமாலைகள் சாத்தப்பெற்று விசேஷ ஆராதனைகள் நடத்தப் பெற்று ஏராளமான யேழைகளுக்கு அன்னமளித்து இரவு க-மணிக்கு முடிவுற்றது என்று ஓர் அன்பர் எழுதுகிறார்.

சங்கப்பட்டாணி

சுக்கில ஆண்டு புரட்டாசித் திங்கள் 15ந் நாளன்று மகாத்மகாந்தியடிகளின் அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா சங்கப்பட்டாணியில் திரு. மு. எ. மு. இராமஞ் செட்டியாரவர்களில்லத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 50,60 [illegible] கும் 20,30 ஏழைமக்கட்கும் [illegible] யளிக்கப்பட்டது. இவை முடிந்த [illegible] உயர்திருவினர் மு.மு.ப. இராமநாதஞ் செட்டியாரவர்கள் தலைமையில் திரு. மு.மு. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள், கதர் மக்களிடைப் பரவவேண்டிய நன்மையைப்பற்றியும், தீண்டாமை ஒழியவேண்டுமென்பதைப் பற்றியும், திரு. வை.க. கனகசபைப் பிள்ளை அவர்கள், மகாத்மா என்ற பட்டம் அடிகளுக்குக் கிடைத்த பிரபல்யத்தைப் பற்றியும் பேசிய பின்னர் கூட்டம் இனிது நிறைவெய்தியதென திருவாளர் பழ. பழநியப்ப செட்டியார் எழுதுகிறார்.

பாகனேரி

மகாத்மாகாந்தியடிகளின் ஜயந்தியை முன்னிட்டு மாலை 5-மணிக்குத் தேசியதொண்டர்களும், மாணவர்களும், பெரியோர்களும் கொண்ட ஊர்வலம் ஒன்று மகாத்மாவின் படத்துடனும், தேசிய கொடி தாங்கியும், கேட்போர் மனம் உருகும்படி மாணவர்கள் தேசியகீதம் பாடிக்கொண்டும்புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியே சென்று [illegible] போர்டு ஸ்கூலின் முன்னிலையில் முடிவடைந்தது. பின்பு ஸ்ரீ சொ.செ. [illegible] பிள்ளை அவர்களின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. அவ்வமயம், திரு. R. V. சுவாமிநாதன் அவர்கள் மகாத்மாவின் பெருமை, ஜயந்தி கொண்டாடவேண்டிய அவசியம் என்பது பற்றியும் திரு. [illegible] கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் [illegible] என்பது பற்றியும், டாக்டர் [illegible] அவர்கள் ஆரோக்கியம் என்பது பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்பு தலைவர்களின் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

கம்பர் செந்தமிழ்ச் சங்கம், குளித்தலை

இச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 19, 20-10-29-ந் தேதிகளில் (சனி, ஞாயிறு) குளித்தலை உயர்தரப் பள்ளிக்கூடத்தில் நடைபெறும். முதல் நாளில், புதுவை திருவாளர் ஆர். வாசுதேவ சர்மா எம். ஏ. பி. எல். அவர்களின் தலைமையில் திரு. எல். சீனிவாச ஐயர், அவர்கள் "மூன்றாம் குலோத்துங்கன்" என்பது பற்றியும், திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் "அப்பரும் பிள்ளையும்" என்பது குறித்தும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். இரண்டாம்நாளில் திருவாளர் பா. வே. மாணிக்கம் நாயக்கர் B. E., M. C. I. (Lon.) M. I. E. அவர்களின் தலைமையில் திரு. வாசுதேவசர்மா M. A. B. L. அவர்கள் "பண்டைத் தமிழர் அரசியல்" என்பதுபற்றியும், திரு. மாணிக்கம் நாயக்கர் அவர்கள் "கம்பன் செந்தமிழ்" என்பதுபற்றியும், திரு. இ. சே. வரதராஜ ஐயர் B. A. அவர்கள் "கவித்தொகையும் தமிழர் நாகரிகமும்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்துவார்கள். அதுகாலை மாணிக்கம் நாயக்கர் அவர்கள் சங்கம் [illegible] உருவப்படத்தைத் திறந்து வைப்பார்கள். தமிழ்மொழிச் சார்பான முடிபுகள் கொண்டு வரப்படும். முடிபுகள் அனுப்ப விருப்பமுடையவர்கள் சங்க அமைச்சருக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

என்கடன் பணிசெய்து கிடப்பதே

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு

நவசக்தி

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ் சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலையில் லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணி வோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற், கோமாற்கே நாமென்றும் மீளாவா ளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.—(அப்பர்.)

சென்னை 1929ஹு அக்டோபர்மீ 16உ

பத்தாம் ஆண்டு

இவ்வாரத்தில் நமது "நவசக்தி"யின் ஒன்பதாம் ஆண்டு முற்றுப் பெறுகிறது; பத்தாம் ஆண்டு பிறக்கிறது. ஒன்பதாம் ஆண்டிற்கு வாழ்த்துக் கூறுகிறோம். பத்தாம் ஆண்டை வரவேற்கிறோம்.

1928-ம் ஆண்டு முதல் 1936-ம் ஆண்டு வரை உலகில் பலதிறக் குழப்பங்களும் கிளர்ச்சிகளும் உண்டாகுமென்றும், பின்னே உலகில் நிலைபெற்ற அமைதி யுண்டாகுமென்றும், எகிப்தில் ஒரு பழைய நிலயத்தில் பொறிக்கப்பெற்ற தீர்க்கதரிசன மொழிகளைக் கொண்டு நாம் பன்முறை கூறி வந்தது நேயர்கள் நினைவிலிருக்கும். உலகில் அமைதி நிலவல் வேண்டும் என்னும் பேச்சு யாண்டும் நிகழ்ந்து வருகிறது. ஆனால் செயலில் அமைதி நிலவாமைக்குரிய நிகழ்ச்சிகளே பெரிதும் நடைபெற்று வருகின்றன. மனிதனிடத்துள்ள விலங்கு நீர்மைகளே அந்நிகழ்ச்சிகளாக உருக்கொண்டு வெளி வருகின்றன. அந்நீர்மைகள் சிலவிடங்களில் நாட்டுப் போராகவும், சில விடங்களில் சமயப் போராகவும், சில விடங்களில் சாதிப் போராகவும் உறுத்து நிற்கின்றன. 1936-ம் ஆண்டுக்குள் மனிதன்பாலுள்ள விலங்கு நீர்மைகள் ஆடிப் பாடி அடங்கி ஒடுங்குமென்று நம்புகிறோம்.

கடந்த ஆண்டின் உலக நிகழ்ச்சிகள் பலவற்றை அவ்வப்போது "நவசக்தி" வெளியிட்டு வந்தது நேயர்கட்குத் தெரியும். உலகை மேல்நாடு கீழ்நாடு என்று பிரித்துச் சொல்வது வழக்கம். அப்பிரிவினையை வெண்மை கருமை என்றுங் கூறிட்டுக் கொள்ளலாம். அவ்விருமையும் ஒருமையுறுங் காலம் உலகில் அமைதி நிலை பெறுங் காலமாகும்.

உலகில் நிற வேற்றுமை காரணமாக உயர்வு தாழ்வு கருதல் தொலைதல் வேண்டும். இதற்கு உழைக்க முற்பட வேண்டியவர்கள் வெண்ணிறத்தவரிலுள்ள அறிஞர்களே யாவர். அவ்வறிஞர்களுள் சிலர் உழைத்தே வருகிறார். அவர் உழைப்பு, சென்ற ஆண்டில் அவ்வளவு வெற்றி பெறவில்லை என்றே கூறலாம். வரும் ஆண்டில் அவர்கள் தொண்டு வெற்றி பெறுவதாக.

வெள்ளை நாட்டில் அரசியல் ஞானிகள் போர்க்கருவிகள் குறைத்தலைப் பற்றி முயன்று வருகிறார்கள். அது குறித்து அமெரிக்காவும் இங்கிலாந்தும் பெருமுயற்சி செய்து வருவது நேயர்கட்குத் தெரியும். இத்துறையில் மேல்நாட்டு அரசியல் வாதிகள் தலைப்பட்டு உழைப்பதோடு நிற வேற்றுமையில் கருத் திருத்துவதைத் தொலைக்குந் துறையிலும் இறங்கி உழைப்பார்களாயின் பெரு நலன் விளையும்.

மேல் நாட்டில் தொழிலாளர் இயக்கம் நாளுக்கு நாள் வெற்றி பெற்று முன்னேற்ற மடைந்து வருகிறது. சென்ற ஆண்டு இங்கிலாந்தில் தொழில் அரசாங்கம் உருக்கொண்டது ஈண்டுக் குறிக்கத்தக்கது.

கீழ்நாட்டில் பற்பல நிகழ்ச்சிகள் உற்றிருக்கின்றன. அவைகளுள் குறிக்கத்தக்கன சில. சீனாவின் முன்னேற்றக் குறிக்கோள், எகிப்தின் உரிமைப்போர் வெற்றி, ஆப்கன் குழப்பம், ஜெருசலேம் போர் முதலியன. ஆப்கன் குழப்பமும் ஜெருசலேம் போரும் விரைவில் ஒழிந்து அவ்விரண் டிடங்களிலும் அமைதி நிலவவேண்டுமென்று ஆண்டவனை வழுத்துகிறோம்.

நமது பாரதநாட்டின் நிலையைப்பற்றி விரித்துக்கூறவும் வேண்டுமோ? கடந்த ஆண்டின் நிகழ்ச்சிகளிற் பெரும் பான்மையன போற்றற் குரியன வல்ல. பாரதத் தாய் கூறுபட்ட ஒருத்தியாய், ஊறுபட்ட ஒருத்தியாய் விளங்கினாள் என்று சுருங்கச் சொல்லலாம். சைமன் குழு வரவால் நாடு பல வழியிலும் பிளவு பட்டது.

சென்ற ஆண்டில் காங்கரஸிலுங் கட்சிப் பிணக்குகள் தோன்றிக் காங்கரஸ் வேலைகளைத் தகைந்தன. தலைவர்களிடை எழுந்த போராட்டம் நாட்டையே உறங்கச் செய்து விட்டது. காங்கரஸில் போதுமான அங்கத்தவர்கள் சேராமலிருப்பதே நாட்டின் உறக்கத்தை நன்கு புலப்படுத்துகிறது. காங்கரஸ் கட்டளைப்படி 5,87,908 பேர் அங்கத்தவராகச் சேர்தல் வேண்டும். சேர்ந்திருப்பவர் தொகை 4,48,416. வெட்கம்! வெட்கம்!

கல்கத்தாவில்கூடிய காங்கரஸ்மட்டும் ஓர் அரிய தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்தீர்மானத்தின்படி, வரும் டிசம்பர் முடிவிற்குள், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இந்தியாவிற்குச் சுய ஆட்சி கொடுத்தல் வேண்டும். அக்கொடை நிகழுமா என்பது ஐயம். அது நிகழாதொழியின் வரும் ஆண்டில் நமது நாட்டில் ஒரு பெரும் அறப்போர் துவங்கப் படலாம்.

அப்போருக் குரிய முன்னணி வேலைகள் சென்ற ஆண்டு நடந்தனவாவெனில், போதியஅளவு இல்லை என்றே கூறலாம். தீண்டாமை யொழிந்ததா, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை நிகழ்ந்ததா, கதர் பரவிற்றா என்னும் வினாக்கட்குத் தேசம் என்ன விடை யிறுக்கும்?

தீண்டாமை விலக்கைப் பற்றிய பேச்சு யாண்டும் பெருகி யிருக்கிறது. செயலோ யாண்டுஞ் சுருங்கி யிருக்கிறது. காந்தியடிகளின் 'குமாரர்' என்று சொல்லத்தக்க ஸ்ரீமான் ஜம்னுலால் பஜாஜ் முயற்சியால் ஓரிடத்தில் தீண்டாமை தொலைந்தமை குறித்து மகிழ்வெய்துகிறோம். தீண்டாமை விலக்குப் பிரசாரம் இன்னும் பெருகுதல் வேண்டும். தீண்டாமை போக்க நாடு முற்படாவிடின், காங்கரஸ் முயற்சியால் ஒரு பயனும் விளையாதென்பது திண்ணம்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை ஒருவாறு மீண்டும் உருக்கொண்டு வருகிறது. "நவசக்தி"யின் ஒன்பதாம் ஆண்டு ஹிந்து முஸ்லீம்களின் பெருங் குழப்பங்களைக் காணவில்லை. சிறுசிறு குழப்பங்களை அவ்வாண்டு காண நேர்ந்தமை குறித்தும் வருந்துகிறோம். இவ்வாண்டில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை வேர்கொண்டு நாட்டுக்கு நலஞ்செய்ய வேண்டுமென்று ஆண்டவனை வழுத்துகிறோம். இந்தியாவின் விடுதலைக்கு ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை இன்றியமையாததென்று சொல்லவும் வேண்டுமோ?

கதர் ஒருவாறு பரவலாயிற்று என்று கூறலாம். குறைந்தது நூற்றுக்கு அறுபது பேர் கதராணியும் ஒரு நிலை ஏற்படுதல் வேண்டும். அந்நிலை இவ்வாண்டில் ஏற்பட்டே தீர்தல் வேண்டும்.

போன ஆண்டில் அடக்குமுறை வீறுகொண்டெழுந்து தாண்டவம் புரிந்தது. அடக்குமுறைகளைத் திரட்டித் திரட்டி வாரந்தோறும் அணியணியாக "நவசக்தி" வெளியிட்டு வந்தது நேயர்கள் நினைவிலிருக்கும். அடக்குமுறை வலுத்தும் நாட்டில் ஒற்றுமை நிகழாதிருப்பது வியப்பூட்டுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னே சிறு சிறு அடக்குமுறைகட் கெல்லாம் பெரும் பெருங் கிளர்ச்சிகள் எழுந்தன. இப்பொழுதோ பெரும் பெரும் அடக்குமுறைகள் வீறுகொண்டு தாண்டவம் புரிகின்றன. நாட்டிலோ உணர்ச்சியே காணோம். கூட்டங்களும் கண்டனத் தீர்மானங்களும் மட்டும் பெருகுகின்றன. அவைகளால் என்ன பயன்? தீண்டாமை விலக்கு, ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமை, கதராடை—இவைகளைப்பற்றிய உணர்ச்சி மக்களிடைப் பரவுகிறதா என்பதே கவனிக்கத்தக்கது. இம்மூன்றற்கும் ஆக்கந் தேடுவதே அடக்கு முறைக்குச் செவ்வனிறை யென்று சென்ற ஆண்டில் மக்கள் போதிய அளவு உணர்ந்தார்களில்லை. அவர்கள் உணருமாறு தலைவர்களும் நடந்தார்களில்லை.

நாட்டின் உணர்ச்சிக்கு யதீந்திரதாஸின் மரணம் ஒன்று சாலுமன்றோ? சென்ற ஆண்டு நிகழ்ச்சிகளில், குறிக்கத் தக்கனவற்றுள், தலை சிறந்தது யதீந்திர தாஸின் மரணமாகும். அம் மரணமும்நாட்டின் ஒற்றுமைக்குக் கால் கொள்ளவில்லை யெனில் என் செய்வது?

நாட்டின் எழுச்சி குன்றுதலுக்குக் காரணங்கள் பலபடக் கூறலாம். அவைகளுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று தலைவர்கள் போராட்டம்; மற்றொன்று கட்சிப் பத்திரிகைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டுபொய் புளுகுகளைக் கட்டி விடுவது. வயது முதிர்ந்த தலைவர்களிடை நடமாடும் பொறாமை தொலைந்தால் நாடு நலமுறும். லாகூர் காங்கிரஸ் வயது முதிராத ஒருவர் தலைமையில் நடைபெறப் போவதால், நாட்டில் இளைஞர்களிடை ஒருவித ஊக்கம் எழும்பும் என்று நம்புகிறோம். அவ்வெழுச்சி நாட்டை ஒழுங்குபடுத்தக் கூடும். அவ்வொழுங்கிடைக் கட்சிப்பத்திரிகைகள் சீருறும் நிலை பெறலாம்.

பாரத நாட்டு மக்கள்மீது பழி சுமத்துவதற்குப் போதிய காரணங்களில்லை. பாரதமக்கள் ஒற்றுமைக்குச் சான்றுகள் பல கூறலாம். அவர்கள் எப்பொழுதும் ஒற்றுமைக்குச் சித்தமா யிருக்கிறார்கள். அவ்வொற்றுமைக்குக் கேடு சூழ்பவர்கள் தலைவர்களே யாவர்.

கடந்த "நவசக்தி" ஆண்டு கண்ட காட்சிகளுள் ஒன்று காந்தியடிகளின் அறுபதாம் ஆண்டுவிழா. அவ்விழாவை நாடு முழுவதும் கொண்டாடிற்று. அவ்விழாவில் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியாரும், எல்லாச் சமயத்தாரும், எல்லா வகுப்பாருங் கலந்து கொண்டனர். காந்தியடிகளின் அறுபதாம் ஆண்டு விழாவில் அரும்பிய ஒருமைப்பாடு, உரிமைப் போரில் அரும்பாதோ? பாழுந் தலைவர்கள் போராட்டம் நாட்டைக் குலைக்கிறது. வரும் ஆண்டில் அப்போராட்டம் தொலைக; தொலைக.

நாட்டில் சகோதர நேயம் நாளுக்கு நாள் அருகுகிறது. அது நாட்டின் முன்னேற்றத்துக்கு நற்குறியாகாது. இவ்வாண்டில் சகோதர நேயம் ஓங்கி வளரும்முறையில் காங்கரஸ் தொண்டு நிகழ்தல் வேண்டும்.

நமது நாட்டுத் தொழிலாளர் நிலைமை இன்னும் போதிய வளவில் பண்படவில்லை என்று கூறலாம். தொழிலாளர் தலைவர் பலர் கைது செய்யப்பட்டது தொழிலாளர் இயக்கத்தைச் சிறிது குலைத்து விட்டது என்று சொல்லலாம். இவ்வாண்டில் தொழிலாளர் நிலை பண்படுமென்று நம்புகிறோம்.

நமது அரிய தமிழ் நாட்டின் நிலையை என்னென்று குறிப்பிடுவோம்? அந்தோ அந்தோ என்று கண்ணீர் விடுகிறோம். தமிழ் நாட்டின் நிலை தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். அதனை விரித்துரைக்க வேண்டுவதில்லை.

சென்ற ஆண்டு, தமிழ் நாட்டில் நாம் கண்ட காட்சி அழிவு வேலையே யாகும். ஆக்க வேலையில் ஓர் இயக்கமுந் தன் கருத்தைச் செலுத்தியதில்லை. தமிழ் நாட்டில் எக்கட்சியும் நன்கு நிலவ வில்லை. கட்சிக்குள் கட்சிகள் கிளம்புகின்றன. கட்சிக்குள் கட்சி காண்டலில் தமிழ் மக்கள் உலகத்தை வென்றுவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. தமிழர்களுக்குள் தோன்றியுள்ள பிணக்கையும் பிளவையும் பிரிவையும் எவ்வெழுத்தால் எழுதுவது! தமிழ் நாட்டின் உருவமே குலைந்து விட்டது என்று சுருங்கச் சொல்லலாம். தமிழ் நாட்டின் நிலையைத் தமிழ் நாட்டில் உலவும் பத்திரிகையுலகம் புலப்படுத்தும்.

பத்திரிகை யுலகந் தூய்மையுற்றாலன்றித் தமிழ்நாடு நலமுறாதென்று உறுதியாகக் கூறலாம். சாக்கடைப் பத்திரிகைகள் பெருகப் பெருக நாட்டுக்குக் கேடு அதிகமென்று சொல்ல வெண்டுவதில்லை. சென்ற ஆண்டில் சாக்கடைப் பத்திரிகைகள் பெருகி விட்டன. சாக்கடை நீர்ப்பெருக்கில் சில நல்ல பத்திரிகைகளும் மூழ்கி மூழ்கித் தவிக்கலாயின. இவ்வாண்டு தமிழ் நாடு எல்லா வழியிலுஞ் சிறந்து விளங்குமாறு தமிழ் மக்கள் ஒன்றித் தொண்டாற்றுவார்களாக; வசைகளிலும் வேடிக்கைகளிலுங் கருத்தைச் செலுத்தா திருப்பார்களாக; கருத்து வேற்றுமைகளை நன்மொழியில் வெளியிடுவார்களாக; பிடிவாத மென்னும் பேயைத் தூரத்துவார்களாக.

பாரத நாட்டின் பல பகுதிகளிலும் உட் பிணக்குகள் எழாமலில்லை. ஆனால் அவைகள் தமிழ் நாட்டுப் பிணக்குகளைப் போல அவ்வளவு இழி துறையில் நிகழ்வதில்லை. ஆந்திரம், வங்கம், மஹாராட்டிரம் முதலிய விடங்களில் தாய் மொழி வளர்ச்சிக்கெனவும், காவிய ஓவியங்களின் பெருக்கிற்கெனவும் அன்பர் பலர் தொண்டாற்றுகிறார். தமிழ் நாட்டிலோ அவைகளின் அழிவிற்கெனப் பாடு படும் பிள்ளைக ளிருக்கிறார்கள். இவ்வாண்டிலாதல் தமிழ் நாட்டுத் தலைவர்கள் ஆக்கவேலைகளில் கருத்துச் செலுத்துவார்களாக.

நமது "நவசக்தி" தனது கொள்கைக்கேற்ப அமைதி முறையில் சென்ற ஆண்டு தொண்டாற்றி யதைப்போல இவ்வாண்டுந் தொண்டாற்றி வருவாள். அரசியலில் வகுப்பு வாதம் கூடாதென்பது "நவசக்தி"யின் அடிப்படையான கொள்கை. நேரிய சமூக சீர்திருத்தங்கள் இன்றியமையாதன என்பதும் "நவசக்தி"யின் கொள்கை. இன்னோரன்ன கொள்கைகளை ஓலும் வகைப் பரப்ப "நவசக்தி" முயன்று வருவாள்.

சமரச சன்மார்க்கத்தைப் பரப்ப "நவசக்தி"க்குத் தணியாக் காதல் உண்டு. அக்காதலைத் தணித்துக் கொள்ளுதற்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்கள் மிகச் சில; எதிர்ப்புக்கள் பல. காரணமின்றிச் சிலரும், வேண்டுமென்றே சிலரும் சென்ற ஆண்டு "நவசக்தி"மீது அம்புகள் சொரிந்த வண்ணமா யிருந்தனர். இவ்வாண்டாதல் அவர்கள் "நவசக்தி"யின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து நடப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

"நவசக்தி"யின் வளர்ச்சி நாடி நாம் தனி முயற்சி யொன்றுஞ் செய்வதில்லை யென்பதை நேயர்கள் அறிவார்கள். ஆண்டவன் திருவருளாலும், அன்பர்கள் துணையாலும்,

"கூற்றுமென வொருபால்வரு
மொருபால்வரு மிருள்போற்
குவடாமென வொருபால்வரு
மொருபால்வருங் குறள்போற்
காற்றுமென வொருபால்வரு
மொருபால்வரு மனல்போற்
கடலாமென வொருபால்வரு
மொருபால்வருங் கடிபோல்"

எனவரூஉம் எதிர்ப்புக்கட்கும் இடுக்கண்களுக்குமிடை "ஜெயமுண்டு பயமில்லை மனமே" என்றும், "குமரன்கைக் கணையுண்டு" என்றும் உறுதியுடன் "நவசக்தி" தன் கடனாற்றி வருகிறாள். ஆண்டவனுக்கு நமது வணக்கம். அன்பர்கட்கு நமது நன்றி.

"வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம் மடி வுறுக!
ஆரியநாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்தமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!"

—பாரதியார்

ஆப்கன் நிலை

காபூல் கைப்பற்றப்பட்டது

சர்தார் ஷாவாலிகான் தம் படைகளுடன் இம்மாதம் 6-ந்தேதி காபூலுக்குள் நுழைந்து, பாச்சா சாகோவையும், அவரது படைகளையும் தோல்வியுறச் செய்ததுமன்றி காபூலையும் பிடித்து விட்டார் என்று ஜெனரல் நாதர்கான் கோஷ்டியிலும், பாராச்சினாரிலும் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். காபூல் பிடிபட்டதைக் குறித்து ஜெனரல் நாதர்கான் உத்தியோக முறையில் 7-10-29ல் வெளியிட்ட பிரசுரமொன்றில் காபூல் ஷாவாலிகானால் பிடிக்கப்பட்டு விட்டதென்றும், சாகோ எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டாரென்றும் அவருடைய இராணுவ உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களென்றும், சாகோவின்கீழ் கவர்னராயிருந்த வர்லிக் மோசின் என்பார் ஷாவாலிகானால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டாரென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நாதர்கானுக்கு வெற்றியின்மேல் வெற்றி

குவெட்டாவிற்கு வந்த செய்தியில் பின்கண்டபடி காணப்படுகிறது. "இரண்டு நாள் போர் நடந்த பின்னர், 12-10-29ல் நாதிர்கானைச் சேர்ந்த துரானிய வகுப்பினர் காந்தஹாருக்குள், நுழைந்து அதைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் சாகோவைச் சேர்ந்த கோஹிஸ்தானி படைகள் ஆயுதங்களுடன் ஒரு புகிதமான ஸ்தலத்தில் ஒளிந்து கொண்டிருக்கின்றன."

நாதர்கானின் சகோதரர்கள் ஜலலாபாத் என்னுமிடத்தையும் கைப்பற்றி விட்டதாக வந்த செய்தி உறுதி படுத்தப்படுகிறது. சாகோவுக்குப் பெரிதும் ஆதர வளித்து வந்த ஷின் வாரி வகுப்புத் தலைவரான முகம்மது ஆலம் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்த துப்பாக்கிகளும், மற்ற ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

ஆப்கன் சர்தார்களின் மகிழ்ச்சி

இப்பொழுது இரங்கூனில் விடுதலை செய்யப்பட்டுள்ள ஆறு ஆப்கன் சர்தார்களும் காபூல் பிடிபட்ட செய்தியைக் கேட்டவுடனே மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார்கள். மகிழ்ச்சியின் பெருக்கினால் அவர்கள் இவ்வெற்றியைக் குறித்து ஒன்றும் அபிப்பிராயங் கூறவில்லை. ஆனால் ஆப்கானிஸ்தானத்தில் அமைதி நிலவவேண்டுமென்பதே தங்கள் எண்ணம் என்று கூறியதாக ஒரு செய்தி கூறுகிறது.

ஜெனரல் நாதர்கானின் கடிதம்

ஜெனரல் நாதர்கான் பெஷாவரிலுள்ள ஒரு நண்பருக்கு 11-10-29ல் எழுதியுள்ள கடிதத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருப்பதாக இறுதியாகக் கிடைத்த செய்தி கூறுகிறது: "சர்தார் ஷாவாலிகான் சாகோ படைகளுடன் கொஞ்ச நேரம் போர்புரிந்த பின்னர், காபூலுக்குள் நுழைந்து, காபூல் முழுவதையுமே பிடித்துக் கொண்டார். பாச்சா சாகோ ஆர்க்கு கோட்டையில் ஒளிந்து கொண்டதால், அக்கோட்டை முற்றுகை இடப்பட்டிருக்கிறது. சாகோவின் சகோதரரும், காபூல் கவர்னரும் கைதியாக்கப்பட்டனர். காபூலில் அமைதி நிலவி வருகிறது. ஏனைய விவரம் பின்னர்."

காபூல் பிடிபட்டதைக் குறித்து ஜெனரல் நாதர்கான் வெளியிட்டுள்ள செய்திகளைத் தவிர்த்து, வேறு செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை. காபூலிலுள்ள சௌக் பஜாரில் சாகோவை ஒரு கூண்டிலடைத்து வைக்கப்பட்டிருப்பதாயும், வழியிற் செல்வோர் அவர் முகத்தில் எச்சிலுமிழுமாறு உத்தரவிடப்பட் டிருப்பதாயும் அவ்வூர் உருதுவாரப் பதிப்பொன்றில் ஒரு வதந்தி காணப்படுகிறது.

அமானுல்லாவின் தந்திகள்

பெஷாவர் ஜமாயத் முஸ்லீம் சங்கத்தார் இத்தாலியிலுள்ள மாஜி அரசர் அமானுல்லாவிற்குக் காபூல் பிடிபட்டது குறித்தும், அவர் வருகையைக் குறித்தும் ஒரு தந்தி கொடுத்திருந்தனர். அதற்கு அமானுல்லா அனுப்பிய பதில்தந்தியில் குறிப்பிட்டிருப்பதாவது: "உங்கள் தந்திக்கு நன்றி செலுத்துகிறேன். ஆப்கன் முன்னேற்ற மடைந்து சீர்திருத்தம் பெற வேண்டுமென்பதே என் அவா. இது குறித்து நான் தினந்தோறும் ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய்து வருகிறேன்" அமானுல்லா நாதர் கானுக்கு அனுப்பும்படி ஆப்கன் வியாபார ஏஜண்டிற்கு அனுப்பியுள்ள தந்தியில், "ஆப்கன் தேசாபிமானி என்ற முறையில், சரித்திர சம்பந்தமான இப்பெரும் வெற்றிக்காக, தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆப்கனில் கொண்டாட்டம்

காபூல் பிடிபட்டது குறித்து, கோகத்தில் கொண்டாட்டம் 11-10-29ல் சிறப்பாக நடந்தேறியதென்றும், அன்று கடைகளெல்லாம் அலங்கரிக்கப்பட் டிருந்தனவென்றும் ஜனங்கள் மிகவும் உற்சாகமாக விருந்தார்களென்றும் ஒரு செய்தி கூறுகிறது. பெஷாவரிலும் 11-10-29ல் காபூல் வெற்றிக்காக கொண்டாட்டம் கொண்டாடப் பெற்றது. அன்று கிலாபத்துக் கமிட்டி காரியாலயத்திலிருந்து ஓர் ஊர் வலம் புறப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான மக்கள், தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கலந்து கொண்டார்கள். அதுபோது "அமானுல்லா நீடுழி வாழ்க; காபூலைப் பிடித்த ஜெனரல் ஷாவாலிகான் நீடூழிவாழ்க." என்னும் வாழ்த்தொலிகள் எழுந்தன. அவ்வூர்வலம் முக்கிய தெருக்களின் வழியாகச் சென்ற பின்னர், ஹேஸ்டிங்ஸ் ஞாபகச் சின்னத்துக் கெதிரிலுள்ள ஒருமைதானத்தில் நின்றது. அங்கு மாஜி ஆப்கன் வர்த்தக ஏஜண்டான அப்துல் ஹக்கீம் ஆப்கன் தேசியக் கொடியைப்பறக்க விட்டார். அச்சமயம் 101 வெடி குண்டுகள் போடப்பட்டன. அன்று இரவு பெஷாவரிலுள்ள தெருக்களெல்லாம் தீபங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. எங்கும் கற்கண்டும், புஷ்பங்களும் வழங்கப்பட்டன. அன்று இரவு 10-30 மணிக்கு மேல் சாக்கோவின் கொடும்பாவி ஒன்று கட்டியிழுக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

காந்தி அடிகளின் சுற்றுப்பிரயாணம்

ஐக்ய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக்காரியதரிசி ஸ்ரீமான் ஸ்ரீபிரகாசர் அறிவிப்பதாவது:— காந்தி அடிகள் இம்மாகாணத்தில் சுகமாகப் பிரயாணஞ் செய்து வருகிறார். இம்மாகாணத்தில் மழை அதிகம். இருப்பினும், அடிகள் உடல் நிலை நன்னிலையிலிருக்கிறது. சென்ற மாதம் 11ந் தேதியிலிருந்து இம்மாதம் 11ந் தேதிவரை, அவர் 15 ஜில்லாக்களுக்கு விஜயஞ் செய்திருக்கின்றார். எங்கும், மக்கள் பெருங்கூட்டமாகக் கூடி உற்சாகத்துடன் அவரை வரவேற்கின்றார்கள். அவரை வரவேற்க கோரக்பூரில் கூடிய கூட்ட மொன்றில், சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் குழுமியிருந்தார்கள். இது வரை இம்மாகாணத்தில் 1,05000 ரூபாவுக்கு மேல் வசூலாகியிருக்கிறது. அடிகள் மசூரி என்னுமிடத்தில் இம்மாதம் 17ந் தேதி முதற் கொண்டு ஒரு வாரம் ஓய்வு எடுத்துக் கொள்வார். அதன் பின்னரே மற்றவிடங்களுக்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்வார்.

கிழக்காப்பிரிக்கா தூதுவக் கூட்டம்

கிழக்காப்பிரிக்கா இந்தியரின் தூதுவக் கூட்டத்தின் காரியதரிசியான ஸ்ரீமான் ஈஸ்வரதாஸ், ஸர் சாமுவேல் வில்ஸன் அறிக்கையைக் குறித்துக் கிழக்காப்பிரிக்கா இந்தியர் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் அபிப்பிராயத்தை ஆதாரத்துடன் அறிந்து, அதைப் பண்டிதர் குன்ஸ்ருவுக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் தெரிவிக்க 14-10-29ல் "எல்லோரா" என்னும் கப்பலில், பம்பாயினின்றும் கிழக்காப்பிரிக்காவுக்குப் பிரயாணமானார். ஸ்ரீமான் ஜே. பி. பாண்டியா கிழக்காப்பிரிக்காவுக்கு அடுத்த வாரக் கப்பலில் செல்லுவார். வரும் பிப்ரவரி மாதம் பார்லிமெண்டின் ஜாயிண்ட்கமிட்டி கூடும்போது, இந்த விஷயத்தைப்பற்றி வாதிக்கவும், முடிவான ஏற்பாடுகளைச் செய்யவும் பிரதிநிதிக் கூட்டமொன்று இங்கிலாந்துக்கு விஜயஞ் செய்யும்.

அடக்குமுறை

லாகூர் சதியாலோசனை வழக்கு

லாகூர் சதியாலோசனை வழக்கு 8-10-29ல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அதுகாலை, சகரன்பூரில் வெடிகுண்டுகளும், கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதன் சம்பந்தமாக பிராஸிகியூஷன் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். பின்னர் ஐக்ய மாகாண சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ரகுவீரசிங் என்பாரை, எதிரிகளுள் ஒருவரான ஸ்ரீமான் சிவவர்மா குறுக்கு விசாரணை செய்தார். சாட்சியை எதிரிகள் குறுக்கு விசாரணை செய்ய இவ்வழக்கில் அநுமதித்தது இதுவே முதல் தடவையாகும் என்று தெரிய வருகிறது.

இவ்வழக்கு தசராப் பண்டிகையை முன்னிட்டு 14-10-29க்கு ஒத்தி வைக்கப்பட்டது. எனவே, 14-10-29ல் விசாரணை மீண்டும் ஆரம்பமாயது. அன்று வெடிகுண்டு மருந்து நிபுணரான டாக்டர் ராப்சன் விசாரிக்கப்பட்டார். எதிரிதரப்பு சார்பாக அவர் 23-10-29ல் குறுக்கு விசாரணை செய்யப்படுவார். பின்னர் பிராஸிகியூஷன் தரப்பில் பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். விசாரணை நடந்து வருகிறது.

இந்திய சட்டசபை வெடிகுண்டு வழக்கு

ஸ்ரீமான்கள் பகத்சிங்கும், தத்தரும் இந்திய சட்டசபை வெடிகுண்டு வழக்கில், தங்களுக்குத் தீவாந்திர தண்டனை விதித்ததை மறுத்து அப்பீல் செய்துகொண் டிருக்கின்றனரென்றும், இந்த அப்பீல் ஹைகோர்ட்டில் இந்மாத இறுதியில் விசாரணைக்கு வரலாமென்றும் தெரிகின்றன. இவ்வழக்கில், தாமே வாதிக்க அநுமதி தரவேண்டுமென்று சிறை அதிகாரிகள் மூலம் ஸ்ரீபகத்சிங் ஹைகோர்ட்டுக்கு ஒரு மனு அனுப்பியிருப்பதாகவும், அவர் அம்மனுவின் பதிலை எதிர் நோக்கிக் கொண்டிருப்ப தாகவும் தெரிய வருகின்றன என்று "டிரைப்யூன்" பத்திரிகை கூறுகிறது.

"காகோரி" வழக்கு கைதிகள்

"காகோரி" வழக்கு கைதிகளுக்கு அளிக்கப்பட்டுவந்த சௌகரியங்கள் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டதால், லாகூர் சதியாலோசனை வழக்கு எதிரிகள் மிகவும் கவலை யடைந்திருக்கின்றனர். அவர்கள் இதன் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்தாருக்கு ஒரு தந்தி அனுப்பவும், அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் தலையிட்டு அநுகூலம் செய்யாவிடின் மீண்டும் உண்ணாவிரதம் ஆரம்பிக்கவும் உத்தேசித்திருப்பதாக "ஹிந்து" நிருபர் ஒருவர் எழுதுகிறார்.

ஸ்ரீ சதீன் சேனரின் உண்ணாவிரதம்


ஸ்ரீமான் சுபாஸ்சந்திரபோஸ் 14-10-29ல் காலையிலும், பிற்பகலிலும் பாரிஸால் சிறைக்குச் சென்று உண்ணாவிரதத்தினால் மிகவும் கவலைக் கிடமான நிலையிலிருந்த ஸ்ரீமான் சதீன் சேனரை உணவருந்தும்படி வற்புறுத்தி வேண்டிக் கொண்டார். எனவே ஸ்ரீ சேனர் தற்போது பழ ரஸத்தையும், ஏனைய பானங்களையும் சாப்பிட்டு வருகின்றார். உண்ணாவிரதம் நிறுத்தியதன் சம்பந்தமாக ஸ்ரீமான் சுபாஸ் சந்திரபோஸ் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சதீன் சேனர் மரணத்தை வலிந்து ஏற்கத் தேசத்தார் விரும்பவில்லை என்றும், பொது மக்கள் காட்டும் உணர்ச்சியினால் அவருடைய குறைகள் களையப்படாவிட்டால், மீண்டும் உண்ணாவிரத மிருக்கும் உரிமையை அவர் வைத்திருக்கின்றாரென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஸ்ரீ சேனரின் வழக்கு

ஸ்ரீமான் சதீன் சேனர் உள்பட 14 பேர் மீது கி. பி. கோ. 110-வது பிரிவுப்படி குற்றஞ் சாட்டப்பெற்றுக் கல்கத்தா பிரதம மாகாண மாஜிஸ்திரேட் முன் நடைபெற்று வந்த வழக்கில், எதிர் தரப்புவாதம் 8-10-29ல் முடிவுற்றது. மாஜிஸ்திரேட் 28-10-29ல் தீர்ப்புக் கூறுவார்.

ஒரு போங்கியின் விடுதலை

சென்ற ஜூன் மாதம் 7-ந் தேதி முதல் இரங்கூன் சிறையில் உண்ணாவிரத மிருந்து வந்த போங்கி உ குவா பித்தா, இரங்கூன் அரசாங்கத்தின் உத்தரவின்படி விடுதலை செய்யப்பட்டார். 18 மாதம் காவல் தண்டனை விதிக்கப் பட்டிருந்ததில், அவர் 16 மாதம் தண்டனை அநுபவித்து விட்டார். சிறையிலிருந்துவரும் மற்றொரு போங்கி உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டார்.



மீரத் சதியாலோசனை வழக்கு

மீரத் சதியாலோசனை வழக்கு 8-10-29ல் மீண்டும் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப் பட்டது. அதுபோது, எதிரிகளான [illegible] உஸ்மானி, டாங்கே இவர்கள் சார்பாக ஒரு மனு கொடுக்கப்பட்டது. அதில், அவர்கள் தசராவிடு முறைக்குப் பின்னர், சோஹ அலகாபாத் ஹைகோர்ட்டில் ஜாமீன் மனு கொடுக்கப் போவதால், அக்குற்றவாளிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். மீரத் ஆஸ்பத்திரியிலிருந்த முஸபர் அஹமது என்னும் எதிரி சிறைக்கு மாற்றப்பட்டதால், அவரும் கோர்ட்டுக்கு வந்திருந்தார். கோர்ட்டார் பிராஸிகியூஷன் தரப்பு சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டனர். பின்னர் பல சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பின்னர், தசரா விடுமுறையை முன்னிட்டு விசாரணை 14-10-29க்கு ஒத்திவைக்கப்பட்டது.

புத்தகப் பறிமுதல்

ஸ்ரீ ஞானஞ்சன் நியோகியால் எழுதப்பட்ட "பிற்னாபி பங்களா" என்னும் புத்தகம் இராஜத் துவேஷமான விஷயங்க ளடங்கியது என்று குறிப்பிடப்பட்டு, வங்காள அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

ஹிந்தி பரீட்சைக்குப் பாடபுத்தகங்கள்

அடுத்த ஆண்டு நடைபெறப் போகும் ஹிந்தி பரீட்சைக்குப் பாடபுத்தகங்கள் வருமாறு:—

பிராதமிக் பரீட்சைக்கு (1) பாலபோதினி, (2) முதற்பாட புத்தகம், (3) இரண்டாம்பாட புத்தகம், (4) மஜேதார் கஹானியா, (5) அநுவாதமாலா.

மத்தியம பரீட்சைக்கு (1) மூன்றாம் பாட புத்தகம், (2) மேவாட் பதனம், (3) ஆத்மோதார், (4) ஏகாந்தவாஸி யோகி.

ராஷ்டிரபாஷா பரீட்சைக்கு (1) அக்கா தாஸ், (2) சிம்ஹகார் விஜயா, (3) தேத்தி திகாதத், திலஸ்மாதி முந்தரி, (5) மிலான்.

இந்த வருஷம்முதல் பிரவேசிகா பரீட்சை நின்றுவிட்டது. ஹிந்தி பாஷையில் இலக்கிய ஞானத்தைப் பரிசோதிக்க "ராஷ்டிர-பாஷா விசாரத்" என்ற ஒரு புதிய பரீட்சை ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. இதில் தேறுகிறவர்களுக்கு "ராஷ்டிர பாஷா விசாரத்" என்ற பட்டம் அளிக்கப்படும். ஆசிரியத் தொழிலில் அமர உத்தேசிக்கிறவரே "பிரசாரக்" பரீட்சையில் தேறவேண்டும்.

பிற விவரங்களுக்கு "பரீட்சா மந்திரி, ஹிந்தி பிரசாரகர் சபா, திருவல்லிக்கேணி, சென்னை" என்ற விலாசத்திற்கு ஓர் அணா தபால் முத்திரையுடன் எழுதவும் என்று பரீட்சா மந்திரி நமக்கு அறிவிக்கிறார்.

புறா மூலம் களவு

தற்போது பர்லினில் பல களவுகள் நடைபெற்று வருகின்றன. அத்தகைய களவுகளுள் ஒன்று அண்மையில் இரகசியப் போலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது. பர்லினில் உள்ள ஒரு வியாபாரிக்கு நான்கு மூலையிலும் திறக்கப் பட்ட ஒரு பார்சல் வந்து சேர்ந்தது. அதைத்திறந்து பார்க்கையில் ஒரு புறா காணப்பட்டது. அந்தப் புறாவின் சிறகின்மேல் ஒட்டப்பட்டிருந்த ஒரு காகிதத்தில் "ஒரு பையில் ஐயாயிரம் பவுன் பெறும்படியான நோட்டுக்களை வைத்து இந்தப் புறாவின் காலில்கட்டி இதைப்பறக்கவிடவும். இல்லாவிடின் தங்கள் உயிருக்குத் தீங்கு விளையும்" எனக்குறிப்பிடப் பட்டிருந்தது. வியாபாரி இவ்விஷயத்தைப்போலீஸாருக்குத் தெரிவித்தார். அந்த உபாயஞ் செய்தவனைக் கண்டுபிடிக்கப்போலீஸாருக்குஒருவழிதோன்றியது. புறா பறக்கவிடப்பட்டது. உடனே போலீஸார் அதன் பின்னால் ஆகாயவிமானத்தில் சென்று அதன் சொந்தக்காரனாகிய கள்ளனையும் பிடித்துக் கைதுசெய்தனராம்.

50 ஆயிரம் பவுன் பெறுமான முத்து

சுமார் 50 குன்றிமணி எடையுள்ள ஒரு பெரிய முத்து பாரசிக் குடாக்கடலில் கிடைத்திருக்கிறது. இதனுடைய உருவம், நிறம் மிகவும் [illegible] பித்துக் கூறப்படுகின்றன. இத்தகைய முத்து கிடைத்தே [illegible] ளுக்கு மேலாகிறதாம். இம்முத்து 50 ஆயிரம் பவுனுக்கு மேல் விலை மதிப்பிடப்படுகிறது. முத்துக்குளிப்பவர்களுள் [illegible] வருக்குப் பாகமாகக் கிடைத்த முத்[illegible]யில் இவ்வரிய முத்திருந்தது. அன்[illegible] வரை இவ்வளவு விலையுயர்ந்த முத்தை கண்டிராராததால், அதன் மதிப்பைக்கேட்ட உடனே அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று கூறப்படுகிறது.

ஆஸ்திகத்தின் எழுச்சி

சுயமரியாதை இயக்கம் இஸ்லாத்துக்கு விரோதமே

11-10-29ந்தேதி பகல் 2-30 மணிக்கு ஜார்ஜ்டவுன் அங்கப்ப நாயக்கன் தெருவி லுள்ள ஜும்மா மஸ்ஜிதியில் தொழுகை முடிந்த பின்பு முஸ்லீம்களின் பெரியபொதுக் கூட்டமொன்று அல்லாமத் முப்தீ மௌலானா முஹம்மது தமீம் ஸாஹிப், அவர்களின் அக்கிராசனத்தின் கீழ்நடை பெற்றது. கூட்டத்தில் ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடியிருந்தார்கள்.

முதலில் சாரதா மசோதாவைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்ட பின், —

நாஸ்திகக் கட்சியும் இஸ்லாம் மதமும்

ஜனுப் எம். ஏ. மலிக் சாஹிப் அவர்கள் ஆரவாரத்தி னிடையே பேசுவதற்கு எழுந்தும், முதலில் திருகுறு ஆனி லிருந்து நாஸ்திகக்கொள்கையை ஒழிக்கவும், ஆஸ்திகத்தை வளர்க்கவும், கூறப்பட்டுள்ள சில ஆதாரங்களை எடுத்து ஓதி, பேசிய சாரம்வருமாறு:— சகோதரர்களே!

திருகுறுஆனையே உங்களுக்குத் துணையாகக் கொண்டு கையில் அதை சதா வைத்திருப்பவர்களே! நபிகள் நாயகம் அவர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நடக்கும் சுன்னத், வல், ஜமாஅத் என்னும் திருக்கூட்டத்தார்களே!

முஸ்லிம் வாலிபர்கள் நிலை

தென் இந்தியாவில் வதியும் முஸ்லிம்களெல்லோரும் தமிழ் பாஷையையே தங்கள் தாய் பாஷையாகக் கொண்டவர்கள். தென் இந்திய முஸ்லீம் வாலிபர்கள் மதக் கல்வியில் சரிவர பக்குவம் இல்லாதவர்களாய் எவர் எதைச் சொன்னபோதிலும், எவர் எதை எழுதிய போதிலும் அது மார்க்கத்தைத் தழுவியதா அல்லது மார்க்கத்திற்கு விரோதமானதா? எடுத்துக் கொள்ளக் கூடியதா? தள்ளக் கூடியதா என்று பரிசீலனை செய்து பார்க்கக் கூடிய அவ்வளவு சிறந்த ஞானத்திற்கு இன்னமும் வந்துவிட வில்லை. அவர்களுடைய தற்காலப் போக்கானது வெளிப் பகட்டையும் டம்பத்தையுமே பார்த்துக் களித்து மகிழும் நிலைமையிலிருக்கின்றது. பத்திரிகை என்றால் அதி காகிதம், அச்சு, பாஷாநடை படங்கள் முதலியவைகளைக் கண்ணுற்ற மாத்திரமே அதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஒழுங்கானவையா? அல்லது தவறானவையா? என்பதை அவர்கள் சிறிதும் கவனியாது பத்திரிகையின் உண்மைக்கு மாறான கூற்றுக்களையெல்லாம் வேத வாக்கைப்போல் உண்மையென்று நம்பிவிடக் கூடிய சுபாவத்தையுடையவர்களா யிருக்கின்றார்கள்.

இரு விஷநோய்கள்

நண்பர்களே! நமது இளைஞர்களாகிய நல்ல பயிர்களை அழித்து நாசம் செய்யக் கூடிய இருவிதமான விஷ நோய்கள் நமது நாட்டில் தாண்டவமாடி அவர்கள் மத்தியில் பரவிவிடக் கூடிய ஆரம்பநிலையிலிருக்கின்றன. அவைகளில் ஒன்றைப்பற்றி முதலில் உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன். அது மகா கோரமும் பயங்கரமுமான ஒரு நோய்; அது ஈரோட்டிலிருந்து உருவெடுத்து இப்பொழுது இந்தச் சென்னை மாநகரில் ஸ்தாபனம் பெற்றிருக்கின்றது. அந்த நோய்க்குடையவரும் அதை நாட்டில் பரப்ப உழைப்பவரும் இராமசாமி நாயக்கரே யாவர்.

இளைஞர் மத்தியில் பரவும் வழி அவர் அந்த வியாதியைத் தம்முடைய "குடியரசு" "ரிவோல்ட்" முதலிய பத்திரிகைகளின் மூலமாய் இளைஞர் மத்தியில் பரப்பி வருகின்றார். அந்தப் பத்திரிகைகள் நாஸ்திக இயக்கத்தைப் பரப்பி வருகின்றனவென்று நாம் மாத்திரம் கூற முன்வரவில்லை.

உலகமே அந்தப் பத்திரிகைகளை நாஸ்திகப் பத்திரிகைக ளென்று தூற்றி வருகின்றது. வாரந்தோறும் வெளிவரும் "குடியரசு" "ரிவோல்ட்" பத்திரிகைகளைப் படிப்பவர் அவைகளில் நாஸ்திக போதனைகளிருந்து வருவதைத் தெரிந்து கொள்வர். அந்தப் பத்திரிகைகளை நமது முஸ்லிம் வாலிபர்களிலும் சிலர் படித்து வருகின்றார். இஸ்லாம் மத தத்துவத்தில் பக்குவப்படாம லிருக்கின்ற அவர்களுடைய ஹிருதயம் அப்பத்திரிகைகளைப் படிப்பதனால் என்ன கதி ஆகுமென்பதை நான் உங்களுக்குக் கூறவேண்டிய தில்லை.

சுயமரியாதை இயக்கமும் இஸ்லாம் மதமும்

சபையோர்களே! இஸ்லாம் மதத்தைப் பரப்ப உலகில் தோன்றியவராகிய நமது ரசூல் அதிபரவர்கள் முதல்முதலாக கடவுள் உண்டென்னும் ஆஸ்திகக் கொள்கையை ஸ்தாபிக்க வேண்டியதே தங்கள் முதற் கடமையாக எடுத்துக் கொண்டார்கள். அதுவே நமது பரிசுத்தமான இஸ்லாம் மதத்தின் அடிப்படையான கொள்கை. இந்தக்கொள்கையை வேருடன் பிடுங்க முன்வந்திருக்கும் இராமசாமி நாயக்கரை நீங்கள் என்னென்று நினைக்கின்றீர்கள்? இவர் பொதுவாய் உலகிலுள்ள எல்லா ஆஸ்திகமதங்களுக்கும் விரோதமாய்க் கடவுள் இல்லை என்று சொல்லுவதோடு நில்லாமல் நமக்கு நேராகவே நமது புனிதமான இஸ்லாம் மார்க்கத்திலும் வந்து கை வைக்கத் துணிந்து விட்டார்! அவருடைய 'குடியரசு' பத்திரிகையில்ஓரிடத்தில்,

"ஆண்டவனுக்குத் தூதர்கள்உண்டென்று ஒரு சாரார் சொல்லுகிறார்களென்றும் * *

"ஆண்டவனுக்கும் ஜனங்களுக்கும் மத்தியில் இத்தனை தரகர்கள் வேண்டுமா என்றும்" பரிகாசம் செய்கின்றார்!

மற்றோரிடத்தில் "ஒரு முகம்மதியன் குறு ஆனிலுள்ள ஒற்றைக் கீறலைக் கூட தேவ வாக்கென்று சொல்லுகின்றான்" என்று எழுதி அலட்சியம் பண்ணுகின்றார். இன்னும் இம்மாதிரியாக வாயில் வந்தபடியெல்லாம்உளறிக்கொட்டுவதன்றி 22-9-29ல் வேலூர் லட்சுமண சுவாமி டவுன் ஹாலில் இவர் பேசிய போது,

"இறக்கும் தருவாயில் என்னை முழு நாஸ்திகனென்றால், அதுவே என்னுடைய முக்தியென்றும், கை கண்ட கை வல்லிய மென்றும் நான் மகிழ்வேன்"

"மதாசாரியாரும், இயேசுவும், நபீயும் நாஸ்திகர்களன்றோ?" என்றும் துணிந்து கூறியிருக்கின்றார். என்னே இவரது தைரியம்! என்னே இவரது துணிவு! முஸ்லீம்கள் பெரும் பான்மை யாகவுள்ள வேலூர் நகரில் இம்மாதிரி ஒருநாஸ்திக பிரசாரம்நடைபெற்றதைப் பார்க்கும் பொழுது உங்கள் உணர்ச்சி எப்படி இருக்கின்றது!

நபிகள் நாயகம் நாஸ்திகரா?

இஸ்லாம் மார்க்கத்தை அறியாமல் நபீகள் நாயகத்தைப் பற்றி உணராமல், அந்த நாயகர் நமது நபீகள் நாயகம் அவர்களை நாஸ்திகரென்று சுலபமாகத் துணிந்து முன்பின் யோசனையின்றி, பேசியது அவரது மடைமையை நன்குவிளக்க வில்லையா?

நபீ அவர்களை அவர்களுடைய சத்துருக்களில் எவரேனும் நாஸ்திகரென்று சொல்லியதுண்டா? அதற்கு திருகுறு ஆனிலாவது அவர்கள் திருவாக்கு நூல்களிலாவது சரித்திரங்களிலாவது இந்த நாஸ்திக வெறியர் ஏதாவது ஓர் ஆதாரத்தை எடுத்துக் காட்ட முடியுமா? மற்றோர் இடத்தில் அவர் "இந்திய இரத்தம் என் குழைகளினூடே செல்லுகின்ற பரியந்தம் யான் சாஸ்திரம், மதம், கடவுள் என்னும் மூடக்கோட்பாடுகளை விட்டொழித்து......என் சகோதர சகோதரிகளின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருவேன்" என்றும்,

மற்றோரிடத்தில் "கண்ணுக்குப் புலனாகாத கடவுளைக் கொணர்ந்து நம்மை மயக்குகிறார்கள்" என்றும் மனம்போனபடியெல்லாம் தமது ஊத்த வாயைத் திறந்து உளறிக் கொட்டியிருக்கின்றார்.

உங்கள் கடமை என்ன?

சகோதரர்களே! அந்தக் காலத்தில் யூனானிய (கிரீஸ்) பிலாஸபி(தத்துவ சாஸ்திரம்) பிரபலித்து நாஸ்திக இயக்கம்பரவ, அதற்கெதிரில் கிறிஸ்தவ மதம் நிற்காமல் அபஜெயமடைந்தது. அப்படியே இஸ்லாம் மதம் அங்கங்கேபிரவேசிக்க அதனோடும் யூனானியபிலாஸபி (தத்துவ சாஸ்திரம்) எதிர்த்தது. இருந்தாலும் நமது மேதாவிகளான இமாம் கஸ்ஸாலி, இமாம் ராஸி, காஸி அஸத், இப்ன் ரஷ்த் முதலியோர் அந்தத்தத்துவ சாஸ்திரத்தில் நுழைந்து நாஸ்திகப் பேயுடன் போராடி அதை வேரோடறுத்து இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்த சரித்திரம் உங்கள் கண்களுக்கு முன்னே வைக்கப்பட்டிருக்கவில்லையா? அந்த மேதாவிகள் நாஸ்திக இயக்கத்தைக் கண்டு மௌனமாய் இருந்தனரா? அவர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லையா? இப்பொழுது நமது நாட்டில் அவர்களைப் பின்பற்றுகின்ற மேதாவிகளாகிய உலமாக்களில்லையா? அவர்கள் இந்த நாஸ்திக இயக்கத்தைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியுமா? அப்படி யிருந்தால் அவர்கள் தங்கள் கடமையைச் செய்தவர்களாவார்களா? ஒரு நாளும் அவர்கள் அப்படி இரார்கள். உலமாக்களே! மகாஜனங்களே! பக்தியில் முதிர்ந்த நமது தேசமாகிய இந்தத் தமிழ் நாட்டில் இந்த நாஸ்திக இயக்கத்தைப் பரப்ப முன் வந்தவ்வருடைய பிரசார இயந்திரத்தையும், அந்த இயந்திரத்தினால் உண்டான பலஹீனமடைந்த சுயமரியாதை இயக்கத்தையும் நீங்கள் நன்கு தெரிந்து கொள்ளுங்கள். அந்த இயக்கத்தைத் திரும்பத் திரும்ப இந்த பரிசுத்தமான தேவாலயத்தில் நான் வாயால் சொல்ல வெறுக்கிறேன். முஸ்லிம் எவனும், இந்த இயக்கத்தைப் பார்த்து மௌனமாக இரான். முஸ்லிம் எவனோ, அவன் அந்தக் "குடியரசு" போன்ற பத்திரிகைகளைத் தன் கையினாலும் தொடான். முஸ்லிம் எவனோ, அவன் இதன் தலைவரையும், பத்திரிகைகளையும், சுயமரியாதை இயக்கத்தையும் தனக்குத் துணையாக்கிக் கொள்ள ஒருகாலும் இணங்கான்.

இஸ்லாத்திற்கு சுயமரியாதை விரோதமே

சுயமரியாதை இயக்கம் கடவு ளில்லை என்று சொல்லுகின்றது; மதங்க ளில்லை யென்று கூறுகின்றது; மதப் பெரியார்களையெல்லாம் தூற்றுகின்றது. குறிப்பாக இஸ்லாம் மதத்தையும் அதனுடைய ஸ்தாபகரையும் வாய்க்கு வந்தபடி குறை கூறித் தூற்றுகின்றது. மேலே கூடிய நோய் இராமசாமியின் சுயமரியாதை நோய்தான். மத ஆராய்ச்சி யற்ற நாஸ்திகக் கூட்டத்தவரின் நோய்தான். இந்த நோய் நமது வாலிப முஸ்லிம்களில் சிலரைப் பற்ற ஆரம்பித்து விட்டது. இதை நீங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டு சும்மா யிருக்கப் போகின்றீர்களா? அல்லது இந்தக் கொடிய நோய் நமது முஸ்லிம்களின் மத்தியில் பரவாமல் தடுக்கப் போகின்றீர்களா?

மற்றொரு கெட்டநோய்

மற்றொரு கெட்டநோய் நாச்சியார்கோயிலில் உருவெடுத்துச் சென்னையில் வந்து ஸ்தாபகம் பெற்றிருக்கின்றது. இந்த நோயைப் பரப்புபவர் பா. தாவுத்ஷா என்பார். "தாருல் இஸ்லாம்" என்றபத்திரிகையின் மூலமாக நமது வாலிபர்களுக்கு மத்தியில் இவர் இந்த நோயைப் பரப்ப முன்வந்திருக்கிறார்.

வெளியில் முஸ்லீம் வாலிப உலகம் தம்மை ஆதரிப்பதாகவும், தம்மை ஆதரிக்க பற்பல சங்கங்கள் இருப்பதாகவும், பல இடங்களிலிருந்து தமக்கு ஏராளமான ஆதரவுகிடைத்து வருவதாகவும், "தாருல் இஸ்லாம்" பத்திரிகையின் ஆசிரியர் படாடோபம் செய்து நம்மவர்களை மயக்கப் பார்க்கின்றார்; தம்முடைய வெறும் டம்பப் பிரசாரத்தினால் நம்மை ஏமாற்றப்பார்க்கின்றார். இப்படிச்செய்வதினால் முஸ்லீம்கள் ஏமாந்து விடமாட்டார்கள் என்பதை நான் அவருக்குப்பகிரங்கமாகச்சொல்லுகின்றேன். நாம் தக்க முயற்சி எடுத்து இந்த நோய் பரவாமல் தடுக்காவிடில், இந்த நோய் நம்மவர்களுக்குள் சீக்கிரத்தில் பரவிப் போகலாமென்று நாம் ஏன் நினைக்கக் கூடாது?

"தாருல் இஸ்லாமும்" அதன் கொடிய நோயும்

திருகுறு ஆனைத் தப்பர்த்தப்படுத்திக் காட்டுவதற்கும் மேதாவிகளுடைய அபிப்பிராயங்களை யெல்லாம் மாற்றி மதத்தின் உண்மை யான தத்துவங்களைப் புரட்டிக் காட்டுவதற்கும இப்பத்திரிகை உரிய கருவியாக இருக்கின்றது. இவ்வருஷம் ஜனவரிமீ 18உ வெளியான பத்திரிகையில் 12, 13 பக்கங்களில் "போலி இஸ்லாம்" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்துள்ள கட்டுரையை ஊன்றிப்படிப் போர்க்கு அதன் சாராம்சம் நன்கு விளங்கும் அதில்,

"இஸ்லாமென்பது கலிமாவுமன்று; தொழுகையுமன்று; நோன்புமன்று; ஜகாத்துமன்று; ஹஜ்ஜுமன்று; மற்றும் இஸ்லாமென்று கூறப்படும் பல நூற்றுக் கணக்கான வெறுஞ் சடங்குகளுமன்று; இஸ்லாம் என்பது ஒரு வாழ்க்கையை—ஒரு நியாயமான, சன்மார்க்கமான, பெருந்தன்மை பொருந்திய, பரிசுத்தமான, கௌரவமான, முயற்சியுடன் கூடிய வாழ்க்கையைக் குறிக்கின்றது."

இதிலிருந்தே இப்பத்திரிகை ஆசிரியர் பா. தாவுத்ஷா என்பாரின் நோக்கமும், வேஷமும் விளங்கவில்லையா? இவ்வாறு எழுதியிருப்பதிலிருந்து நமது வாலிபர்கள் என்ன தெரிந்து கொள்வார்களென்பதை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. இப்பத்திரிகையின் ஆசிரியர் ஓர் ஆங்கிலத் தமிழ் மொழி பெயர்ப்புக் காரரே யன்றி வேறல்லர்.

மதக்கல்வியும் அதற்குரிய பாஷையும் தெரியாத் சீர்திருத்தக்காரர்

பா. தாவுத்ஷா என்பார் திரு குறு ஆனும், நபிநாயகம் அவர்களின் திருவாக்குகளும், சாஸ்திரங்களும் எந்த பாஷையில் பிரபலித்து விளங்குகின்றனவோ அந்தப் பாஷையைக் கற்கக் கூடிய ஆரம்பப் பாடசாலையைக்கூட எட்டிப் பார்த்தவரல்லர். இது அவர் எழுதிவரும் சங்கதிகளிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும் இப்பொழுது நம்மவர்களுக்கு நன்கு தெரிந்து விட்டது. இந்த நிலைமையில் மதத்தில் சுயேச்சை பெற்றுத் தம்மனம் போனபடி யெல்லாம் அபிப்பிராயங்காட்டி நமது புனிதமான, பெருமைவாய்ந்த மதத்தையும், முஸ்லீம்களையும் சீர்திருத்த அவதரித் திருப்பதாகச் சொல்லி வாயில் வந்தபடி யெல்லாம் உளறிக் கொட்டுகின்றார்.

தன் முதுகுகூனை நிமிர்த்திக் கொள்ளச் சக்தியற்ற தவளை வைத்தியத்தில் நிபுணன் என்று சொன்ன கதையைப் போல எள்ளி நகைக்கக் கூடியதாக இருக்கின்றது.

பா. தாவுத்ஷாவின் நண்பர் துணைவர் யார்?

தோழர்களே! இவர் தமக்குத் துணைவராகவும் நண்பராகவும் யாரைப்பொறுக்கிஎடுத்திருக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? மேலேகூறிய, கடவுளற்ற, மதமற்ற, ஒருவரையே என்று இப்பொழுது நான் உங்களுக்கு ருசுவுடன் ரூபிக்கிறேன்.

"தாருல் இஸ்லாம்" 10-வது ஆண்டு விழா மலரில் 24-வது பக்கத்தில் இராமசாமியாரை நாற்காலியிலமர்த்திக் கழுத்தில் சால்வையும் மாலையும் போட்டு உட்கார வைத்திருப்பதைப் பாருங்கள்.

வேஷம் வெளியாக வில்லையா?

அந்த விழாமலரின் 50-ம் பக்கத்தில்இராமசாமியாரும் அவரது பரமானந்த சீடரான ஜே. எஸ். கண்ணப்பரும், பா. தாவுத்ஷா என்பாரின் "தாருல் இஸ்லாம்" பத்திரிகைக்கு மதிப்புரை கொடுத்திருக்கின்றனர். அதை அப்படியே அதில் எழுதப்பட்டுள்ள அழகின்படி படிக்கின்றேன்:—

"தாருல் இஸ்லாம்" பத்திரிகையும் இதன் ஆசிரியரும் நம் கூட்டத்தைச் சார்ந்தவர்கள். நாம் எப்படி இந்த சமயத்தில் மதத்தின் பெயரால், வேதத்தின் பெயரால், சாத்திரங்களின் பெயரால், புராணங்களின் பெயரால், பழக்க வழக்கங்களின் பெயரால் நடைபெறும் புரட்டுக்களை வெட்டவெளிச்சமாக்கு கின்றோமோ, அத்தன்மைத்தே "தாருல் இஸ்லாம்" பத்திரிகையும் இதன் அறிவிற் சிறந்த ஆசிரியரும் தம் சமயத்தின்பேரால் உள்ளபுரட்டுக்களையும், குருட்டு நம்பிக்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து மக்கள் அறிவு வளர்ச்சியையும், சுயமரியாதையையும் அடையத் தம்மாலான முயற்சி செய்து வருகிறார்கள்." இதிலிருந்து அவருடைய நட்பும் சிநேகிதமும் உதவியும் அவர் யாரிடத்தில் வைத்திருக்கிறார்? அவர் செய்யும் வேலை யென்ன? இவரது வேலை யென்ன? இருவரும் கைகோத்து தாங்கள் பிரமாதமாக எதையோ சாதித்து விட்டதாகக் கனவு காண்பதை நன்கு தெரிந்து கொள்ளுங்கள். மேலும் செங்கற்பட்டில் கூடிய இராமசாமியாரின் சுயமரியாதை மகா நாட்டிற்கு, பா. தாவுத்ஷா என்பாரும் சென்று அதை ஆதரித்து "நாமும் இதுபோல்தான் எங்கள் இஸ்லாம் மதத்தில் வேலை செய்து வருகின்றோம்" மென்று கூறியிருப்பது உலகறிந்த விஷயம்.

"திரு குறுஆன்" போதனை என்ன?

சகோதரர்களே! மேலேகூறியுள்ள இரண்டு கொடிய வியாதியும் ஒன்று சேர்ந்து நமது வாலிபர்களைப் பீடித்தால் அவர்கள் பிழைப்பார்களா? சர்வ வல்லமை யுள்ள ஆண்டவன் திருகுறுஆனில்:—

"ஓ உண்மையான மூமின்களே! நீங்கள் (உங்கள்) பக்தியுள்ள உத்தம முஸ்லிம்களை விட்டுவிட்டு கடவுள் இல்லை யென்று எதிர்ப்போரையும், கடவுளுக்கு நிகராகப் பல விக்கிரஹங்களை வைத்து வணங்குவோரையும் (உங்கள் மார்க்க சம்பந்தமான காரியங்களுக்கு) நட்பினராக்கிக் கொள்ள வேண்டாம்." என்று கூறப்பட் டிருப்பதை இந்த சமயத்தில் உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். இதிலிருந்து அந்த உபயதாரத்தாரின் போக்கு எப்படி முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் அவசியம்

அன்பர்களே! ஆண்டவன் அருளால் மேலே கூறப்பட்டுள்ள இருவகை வியாதியும் முஸ்லிம்களைப் பீடிக்காமலும், பீடிக்கப்பட்ட வாலிபர் சிலரை அந்த நோய்களிலிருந்து குணப்படுத்தவும் இப்பொழுது ஹிபாஜத்துல் இஸ்லாம் என்ற சங்கம் ஏற்பட்டிருப்பது உங்கள் அதிர்ஷ்ட வசமேயாகும். இது கற்றுத் தேர்ந்த மகா பெரிய கல்வி மான்களாகிய உலமாக்களால் ஸ்தாபிக்கப்பட்ட மிகுந்த கண்ணியம் வாய்ந்த சங்கமாகும். இச்சங்கத்திற்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்வது உங்கள் ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகும். இன்றேல் உலமாக்களை வீணில் குறை கூறிக் குற்றஞ் சாற்றித் தூற்றுதீர்கள். இந்தச் சங்கம் மேலே கூறியுள்ள வியாதிகளையும் இனி இவைபோல் தலை யெடுக்கும் எல்லா வியாதிகளையும் போக்கும் மேலான நோக்கத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. நேயர்களே! அவரவர் சக்திக் கேற்றபடி சங்கத்திற்குத் தாராளமாய் பொருளுதவி செய்து, சங்கத்தின் அஸ்திவாரத்தைப் பலக்கச் செய்து, அதன் வேலைகள் சீக்கிரத்தில் நன்கு நடைபெறும்படி பாருங்கள். எல்லோரையும் சங்கத்தை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் ஊக்கத்துடன் முடிவுவரையில் இருந்து என்பிரசங்கத்தைக் கேட்டதற்கு எனது மனப்பூர்வமான வந்தனத்தை அளிக்கின்றேன்.

முடிவில் அக்கிராசனர் முடிவுரை கூறிய பின் கூட்டம் இனிது கலைந்தது என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

"தாருல் இஸ்லாம் பத்திரிகையில்"

எனது நண்பர் ஆடும் கூத்து

நபிகள் நாயகத்தின் மாட்சி; ஊன்றிப் படியுங்கள்

ஜனுப் எம். ஏ. மலிக் சாஹிப் எழுதுவது:—

நிகழும் அக்டோபர் மாதம் 4-ம் தேதி வெளியான "தாருல் இஸ்லாம்" பத்திரிகையில், எனது நண்பர் ஜனுப் ம. கா. மு. காதிர் முஹியத்தீன் சாஹிப் அவர்கள், என் பெயர்வைத்து ஆடியிருக்கும் திருக்கூத்தைக் கண்ணுற்றேன். நண்பர், கடந்த செப்டம்பர் மாதம் 20-ம் தேதி சென்னை, ஜார்ஜ் டவுன் சங்க மகுதியில், மஹாஜன சமூகத்துக்கு மத்தியில், நான் செய்த பிரசங்கத்துக்கு வந்திருந்தால் எனது "கூற்றுக்கு ஒரு வார்த்தை" என எழுத அவர் இறந்து, அவருக்கு இடங் கொடுத்திராதென்பது எனது துணிபு.

அன்று, மகுதியில் கூடிய கூட்டம் ஒரு சாமான்யக் கூட்டமன்று. உலமாக்களில் மிக்க பிரக்யாதி பெற்றவர்களும், அதி விவேகிகளான பிரமுகர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். பொது ஜனங்கள் சுமார் ஆயிரம் பேருக்கு அதிகமாகவே கூடியிருந்தார்கள். கண்ணியமான இம்மகாசபையில், நான் எடுத்தோதியதை அமைதியுடன் செவிமடுத்துக்கொண்டிருந்த ஒவ்வொருவருடைய பார்வையிலும் எனது நண்பர் நிருபம் தென்படுமானால், அஃது அவர்களுக்கு நகைப்பையும், அநுதாபத்தையுமே தரும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

எனது பிரசங்கத்தைக் கேட்டிருந்து, அதை, பல பத்திரிகைகளுக்கு அனுப்பிய நிருபர் நான் செய்த பிரசங்கத்தைக் குறித்து "பிரசங்கத்தின் சாராம்ஸம்" என்று சொல்லியிருக்க. நண்பர், "சாராம்ஸம்" என்ற வார்த்தையில் கண் போடாமல், "நான்கு வாக்கியங்கள் அடங்கின ஒருபகுதியினின்றும் 'மூன்றாம் வாக்கியத்தை மாத்திரம்' எடுத்துக்காட்டி அதற்கு விபரீதப் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது" என்று நேரில் கேட்டிருந்தவர்போல் சொல்லித் தம் வாக்கை உறுதி படுத்துகிறார். இனி,

வாசகர்களுக்கு

எனது பிரசங்கத்தைக் கேட்டிருந்து பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பிய நிருபர் பிரசங்கத்தில், "அபூபக்கர் சித்தீக்" (ரலி) என்ற குற்றமுள்ள நூலைப்பற்றி, நான் எடுத்துப்பேசியஅநேகவிஷயங்களை மறந்து, இரண்டொரு விஷயங்களை மாத்திரம், சுருக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறாரென்பதை எனது உபந்நியாசத்துக்குச் செவிகொடுத்திருந்தவரெவரும் ஸ்பஷ்டமாய் அறிவர்.

பிரஸ்தாப நூலின் 13வது பக்கம் 22வது வரி முதல், 32வது வரி முடிய ஒரு வார்த்தையையேனும் கூட்டவோ, குறைக்கவோ, செய்யாமல் அப்படியே மஹாசபைக்கு முன் வாசித்துக்காட்டி அதிற்கண்ட பிழையை எடுத்து விளக்கிக் காட்டியிருக்க "மூன்றாம் வாக்கியத்தை மாத்திரம்" சுட்டிக் காட்டினேன் என்று நண்பர் சொல்வது உண்மைக்கு முற்றிலும் விரோதமேயாகும்.

பொதுவாய்ப் பத்திரிகை வாசிப்போர் எவரும் பத்திரிகையில், பிரசங்கத்தின் "சாராம்ஸம்" என்ற குறிப்பை நோக்கினதும், அதிலிருந்து பிரசங்கியின் வாய் வழியாய் வந்தனயாவும் பத்திரிகையில் வந்துவிட்டன என்று கொள்ளவே மாட்டார். உண்மையை அறிந்து கொள்ளாமல் பத்திரிகையில் வெளிவந்ததைமட்டும் ஆதாரமாகக்கொண்டு விஷயத்தை எதிர்க்கும் சுபாவம் விவேகிகளுக்கு சம்மதமாகாது.

பிரஸ்தாப நூலில் 22வது வரி முதல் 32வது வரி வரையுமுள்ளவிஷயத்தை எடுத்துக்கொண்டாலும்சரி, அல்லது அதன்மத்தியிலுள்ள மூன்றும் வாக்கியத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டாலும்சரி, எந்த வழியாய்ப் பார்த்தாலும், "நிச்சயமாகக் கோல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்று ரசூல் அதிபரைக் குறித்து மிஸ்டர் தாவூத்ஷாஹ் B. A. நூலில் கொடுத்திருக்கும் அவரது சொந்த அபிப்பிராயம் சுத்த தப்பு மாத்திரமல்ல; மிகக் கொடிய பாவமுமாகும். ஏனென்றால் எவரைப்பற்றிக் கூறுகிறாரோ அவர் நபீ, ரசூல், அன்றியும் இதற்கு மேலாக, இந்த அபிப்பிராயத்திற்காக "ஷரீ அத் இஸ்லாம்" என்ன தீர்ப்பு கொடுக்க, நீதியான முப்திகளைக் கட்டாயப் படுத்துகிறதோ அதற்கும் அவர் உள்ளாக நேரிடும் என்பதில் தடை எதுவும் இராதென்பது எனது கொள்கை.

ஏன்?

மிஸ்டர், தாவூத்ஷா B. A. தமது "அபூபக்கர் சித்தீக்" என்ற நூலில் 13 வதுபக்கம், 22 வது வரி முதல் 32 வது வரி ஈறாக, அடங்கிய வாசகமாவன:—

"அவர்கள் புறப்பட்டுச் சென்று விட்டதை அவர்களுடைய பகைவர்கள் அறிந்து கொண்டு அவ்விருவரையும் பிடித்துக் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பினார்கள். ஆனால், ஆண்டவனருளால் அவ்விருவரும் எதிரிகளின் கைவசம் சிக்கிக் கொள்ளாமலே மதினமா நகர் சென்று க்ஷேமமாய் இறங்கி-விட்டார்கள்"

இவை இருவாக்கியங்கள். இவைகளில் கண்ட அவ்விருவரும் என்பது, ரசூல் நாயகம் அவர்களையும், அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களையும் குறிக்கிறது.

இவ்வாக்கியங்களில் கண்ட "ஆண்டவனின் அருள்" அவ்விருவருக்கும் எதிரிகளின் கைவசம் சிக்கிக் கொள்ளாமலிருக்க, இருந்ததென்பது தெளிவாகிறது; மற்றபடியன்று.

"அவர்களிருவரும், அந்த ஹிஜ்ரத்தின் போது, எதிரிகளின்கையில் சிக்கிக்கொண்டிருப்பார்களாயின், நிச்சயமாகக் கோல்லப்பட்டே போயிருப்பார்கள். என்னே! ஆண்டகையின் அருள் இருந்தவாறு!"

இவையும் இருவாக்கியங்களே! இவைகளில் கண்ட அவ்விருவரு மென்பதும், மேற்கூறியபடி, ரசூல் நாயகம் அவர்களையும், அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களையும் குறித்ததே!

இவ்விரு வாக்கியங்களில், இரண்டாவது வாக்கியமாகிய "என்னே! ஆண்டகையின் அருள் இருந்தவாறு!" என்பதில் கண்ட அருளானது, அவ்விருவரையும், எதிரிகளின் கையில் சிக்கிக் கொள்ளாமலிருக்க, கிடைத்த அருளைக் குறிக்கிறதே தவிர சிக்கிக் கொண்டால் ஆண்டவனின் அருள் அவ்விருவருக்கும் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

"சிக்கிக் கொண்டிருப்பார்களாயின் நிச்சயமாகக் கோல்லப்பட்டே (ஏ) போயிருப்பார்கள்" இதில், "நிச்சயமாக" என்பதும், "கோல்லப்பட்டே" என்பதும், ஸ்திரத்தையும் உறுதியையும் காட்டுகின்றன.

"என்னே! ஆண்டகையின் அருள் இருந்த வாறு!" என்பதும் 22 முதல் 32-வது வரையுள்ள வரிகளில் கண்ட அருளும், சிக்கிக் கொள்ளாமலிருக்கக் கிடைத்தன என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் புலப்படுகிறதே யொழிய "சிக்கிக் கொண்டால் ஆண்டவன் அருள்கிடையாதென்பதையும் தப்பமுடியாதென்பதையும் ஸ்பஷ்டமாய்க் காட்டுகின்றன.

"பின்னர் சிக்கிக்கொண்டால், நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப்பார்கள் என்பது மிஸ்டர் பா. தாவூத் ஷாஹ்வின் சொந்த அபிப்பிராயம். அதனை, அவர் முஸ்லிம் மகாஜனங்களுக்கும்,விசேஷமாய்ப் பாடசாலை மாணவர்களுக்கும் பிரஸ்தாப நூலின் மூலம் போதிக்கிறார்.

மேற்கூறிய வாக்கியங்கள் சாதாரண நடையில் அமைக்கப்பட் டிருக்கின்றன. விபரீதப் பொருள் கொடுக்க அவ்வாக்கியங்களில் இடமுமில்லை. புதைந்து கிடக்கும் ஆழ்ந்த ஞானமும் அவைகளில் காணப்படவில்லை. மேலே சொல்லிய விளக்கத்தைத் தவிர எந்த வகையாலும், இதை மாற்றித் திரிக்க இயலாது. முயன்றாலும் அது முடியாத காரியம்:—

ஆகையால் ரசூல் நாயகரைப் பொறுத்த மட்டில் "அந்த ஹிஜ்ரத்தின்போது எதிரிகளின் கையில் சிக்கிக்கொண் டிருப்பார்களாயின், நிச்சயமாய்க் கொல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்று திருக் குறுஆன் கலையிலும், நபீ திருவாக்கு கலையிலும், நபீ சரித்திரக் கலையிலும், பயிற்சிபெற்றுத் தேறிய எந்தக் கல்விமான் இருதயத்திலும் உதியாது; நாவிலும் எழாது; எழுத்துப் பதிவுக்கும் வராது என்பது திண்ணம்.

கல்விமான் என்றும், சீர்திருத்தக்காரன் என்றும், சொல்லி உலகத்துக்கு மத்தியில் எழும்புகிற ஒருவன் மேற்கூறியவாறுசொல்லவோ, எழுதவோ, செய்வானேயில் அவன் பிரசாரம் ஞானத்தை ஊட்டாது; கலகத்தையும் அஞ்ஞானத்தையுமே பரப்பும்.

ரசூல் அதிபர் தமது கடமையைச் செய்ய முயன்ற ஆரம்பதசையில், "குறைஷிகள்" சகிக்கூடாத கஷ்டங்களும், துன்பங்களும் அவருக்கு இழைத்து வந்தார்கள். நபீயவர்களைக் காணுந்தோறெல்லாம், வாயில் வந்தபடி தூஷித்தும், நிந்தித்தும், வந்தார்கள். கண்ட இடமெல்லாம் கல்லெறிவதும், மண் வாரி வீசுவதும், பிரசங்கிக்கத் தொடங்கினால், கூக்குரலிடுவதும் கட்டி அடிப்பதுமான சொல்லொணாத் துன்பங்களைச் செய்து வந்தார்கள்.

விரல்விட்டு எண்ணத்தக்க சிலரே நபீ அவர்களை ஆதரிப்பவரா யிருந்தனர். இருந்தாலும் அவர்களும் பற்பல கஷ்டநஷ்டங்களுக்கு ஆளானார்கள். இந்த ஸ்திதியில் நபீ அவர்களுக்கு ஆண்டவன் ஒருவனைத் தவிர வேறு புகலிடமில்லை. திக்கற்ற காதையைப்போல் மக்காவின் வீதிகளில் நடந்து திரிந்தார்.

இங்ஙிலையை வெளித் தோற்றக்காரர்கள் கண்ணுற்று இவருடைய இஸ்லாமார்க்கம் முதலில் மக்காவில் பிரசாரிப்பதே அரிதாயிருக்க உலகில் சென்று தலைகாட்டுமா என்று நினைத்து, நபீ அவர்கள் கஷ்டப்படுவதையும், அவருக்கு ஒதுங்கும் தலம் இல்லாமலிருப்பதையும் கண்ணுற்று, "முஹம்மதை, அவர் நாயகன் கைவிட்டு விட்டான்; அவன் அவரைச் சம்மதிக்கவில்லை" என்று பேசலாயினர்.

இதற்காக, கருணையுள்ள ஆண்டவன், நபீ அவர்களுக்கு நபித்துவப் பதவியின் ஆரம்பத்திலேயே ஸ்திரமான வாக்குத் தத்தம் கொடுத்தருளினான். அது வருமாறு:—

"உன் ஆண்டவன் உன்னைக் கைவிடவுமில்லை. அவனுக்கு உன்னிடத்தில் அசம்மதமுமில்லை."

"உனது கடைசி நிலை, ஆரம்ப நிலையைவிட சாலச்சிறந்ததாய் இருக்கும்."

அதி. 93—3, 4.

ஆண்டவன் நபீ அவர்களுக்கு, ஹிஜ்ரத்துக்குமுன் கொடுத்த மேற்கூறிய வாக்குத் தத்தங்களை ஞானக்கண்ணால் பார்த்து, உனது கடைசி நிலையானது "ஆரம்பத்தைவிட சாலச் சிறந்ததாய் இருக்கும்" என்ற வாக்கை சிந்தனைக்குக் கொண்டுவருகிறவர் எவரும் அந்த ஹிஜ்ரத்தின் போது அவர்களிருவரும் எதிரிகளிடம் சிக்கிக் கொள்வார்களாயின் நிச்சயமாய்க் கொல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்று சொல்ல முன்வருவாரா?

ஆண்டவன், நபீயவர்களைநோக்கி, உனது கடைசி நிலை மிகச் சிறந்ததாய் இருக்கும் என்று சொல்லுகிறான். இதிலிருந்து, நபித்துவப் பதவியானது தனது அதிகார முழுமையையும் சம்பூரணம் செய்து, கடைநிறைவேற்றிக் கொடுத்தே யல்லாது இவ்வுலகத்தை விட்டு மறைந்து செல்லாது என்பது வெளிப்படவில்லையா?

ஆண்டவனுடைய வாக்கு தத்தத்தில் நம்பிக்கை வைப்பதா? ஒரு மிஸ்டர் பா. தாவூத்ஷாவின் நூதன அபிப்பிராயத்தை வாசித்து அதில் நம்பிக்கைக் கொள்வதா? உண்மையான ஒரு முஸ்லிம் வாயிலிருந்து ஆதாரமற்ற இத்தகைய வார்த்தைகள் வருமா?

மேற்கண்ட வாக்கியங்கள் கொண்ட அத்தியாயம், நபீ அவர்கள் பிரசாரத்துக்குக் கிளம்பிய ஆரம்ப காலத்தில், திருமக்காவில் ஹிஜ்ரத்துக்கு முன் இறங்கியது.

கருணையுள்ள ஆண்டவன், சர்வ லோகத்துக்கும் வேண்டி ஓர் இறுதியான தூதனை கிளம்பச் செய்து, தனது திருவுளத்தை, அவர் மூலம் சன்மானித்தருளி, அந்தத் திருவுளவாக்கு, சம்பூரணமடையவும், சாசுவதமாய் நிலைத்திருக்கவும், சித்தங்கொண்டு, கடைசி நபியாகிய நமது ஜெயரட்சகர் முஹம்மத் நபீ அவர்களை அனுப்பி இருக்கும்போது, அந்த அருள் நாதர் மூலம், ஆண்டவனுடைய திருவுளமாகிய திருவேதம் சம்பூர்ண மடைந்தாலன்றி ஆண்டவன் அவரை இம்மையிலிருந்து தன்னிடம் அழைத்துக் கொள்ள மாட்டான். அது சம்பூரண மாகும்வரை, அவருடைய ஜீவனுக்கு பரம நாயகனாகிய ஆண்டவனே உத்தரவாதி. மேலும் அவனே கண்காணித்து வருபவன். அவனுடைய பாதுகாப்பையும், அவனுடைய மகத்தான காவலையும், அவனுடைய பார்வையையும், ஸ்திரமாய் நம்பியே அவர் ஜனங்களுக்கு மத்தியில் எத்தகைய அச்சமும், கவலையுமற்று அவர் தமது கடமையை [illegible] மாய்ச் செய்து முடிக்க முன்வந்தார். இதன்படியேதான், அன்னவருக்கு அவர் கடமையில் பிரவேசித்த தேவ [illegible] ஆரம்ப தசையிலேயே,

"உன் ஆண்டவனுடைய [illegible] எதிர் நோக்கில், சகித்துக் கொண்டிரு நீ, நமது கண்களுக்கு முன்னே இருக்கிறாய்." அதி. 52—[illegible]

என்று கடவுள் நமது ரசூல் அதிபருக்கு ஆறுதலையும், திருப்தியையும் கொடுத்து வாக்களித்திருக்கிறான்.

"நீ, நமது கண்களுக்கு முன்னே இருக்கிறாய்" என்று அருளிய ஆண்டவனின் திருவாக்கை, ஊன்றிப்படித்த எந்த [illegible] "அவர் எதிரிகளிடம் சிக்கிக் கொண்டால் நிச்சயமாய்க் கொல்லப்பட்டேபோய் இருப்பார்" என்றுலகத்துக்குஅபிப்பிராயம் கொடுக்க முன்வருமா?

அப்படிச் சொல்லி ஒலிபிமே [illegible] வழி கொடுப்போரின் ஒரு குத்திரத்தையும், அழுக்காறுள்ள ஓர் இருளையும், அருவருப்புள்ள ஓர் அருசியையும், அக்கந்தங்களை வாரி வீசும் புயல்காற்று சூழ்ந்த ஓர் அந்தகாரத்தையும் ஒத்ததாகும்.

மேலும் அது மெய்யாகவே, சற்குண புத்திக்குரிய மாசற்ற பரிசுத்த ஸ்திர நம்பிக்கையையும், சப்தத்தையும் விட்டு நீங்கி, கபட ஓசைக்குரிய அஞ்ஞானக் குரலையே நிரப்பியதாகும்.

மேலும் ரசூல் அதிபர், முதல் முதலாய், திரு மக்காவில் பிரசாரத்துக்கு வெளிக் கிளம்பி வந்த போது, மக்காவின் கண்ணுள்ள சிறுவர் முதல் பெரியோர் உள்பட ஒவ்வொருவரும் நபீ அவர்களுக்கு மகா கொடிய சத்துருக்களாகவே நிலை எடுத்து நின்றனர்; பற்பலவிதமான தொந்தரவு கொடுத்துக் கஷ்டப் படுத்தினார்கள். அவருக்கு விரோதமாய் எத்தனையோ அபவாதங்களைக் கட்டிவிட்டார்கள். அவரைக் கொலை செய்துவிட சதியாலோசனைகள் நடத்தின. பகைவர்கள் ஆயுதங்களைத் தீட்டி ஆயத்தம் செய்து வைத்திருந்தார்கள்; நித்திரையில் நபீ அவர்களைச் சேதம் செய்துவிடச் சித்தங்கொண்டார்கள். யுத்தகளத்தில் சத்துருக்களால் நபீயவர்கள் சூழ்ந்துகொள்ளப்பட்டார்கள். அவர் சாவதானமாயிருக்கும்போது அவர் சிரசுக்கு நேராய் பாறைக் கல்லைத் தள்ளிவிட, பகைவர்கள் சூழ்ச்சி செய்தார்கள். பதுங்கியிருந்து அவரைத் தாக்கினார்கள்; உணவில் நஞ்சிட்டுக் கொடுத்தார்கள். ஆனால், ஒவ்வொரு சமயத்திலும், "சத்துருக்கள் பல முன்னவர்களானால், கண்காணி, அதற்கு எத்தனையோ மடங்கு, வல்லமை புடையான்" என்பதற் கொப்ப, திருக்குறுஆன் இந்தச் சமயத்தில் விளம்பப் படுத்திய திருவாக்கு அப்படியே ருஜூப்படுத்திற்று.

அதாவது "உன் உயிருக்கு ஹானி நேரிடாதபடி உன் ஆண்டவன் ஜனங்களைச் சூழ வைத்துக் கொண்டிருக்கிறான்"

அதி. 17—62.

என்பதே.

உத்தம, அறிவாளிகள் நபீ அவர்களின் பரிசுத்த வாழ்க்கையை ஆய்ந்தோய்ந்து பார்த்து வருவார்களாயின், இத்தகைய அமளியும், பயங்கரமுமான சந்தர்ப்பங்களில், அதிலும், குறிப்பாய்க்கலகமும், இரத்தஞ் சிந்தலுமே சகஜமாய் காணப்படும் அராபியா தேசத்தில், நியாயத்துக் குரிய அரைத்தன ஆட்சியே இல்லாத அந்தப் பிரதேசத்தில், நபீ அவர்கள் தமது கடமை அனைத்தையும் சரிவர செய்து முடித்தது அவருக்குக் கருணையுள்ள ஆண்டவனால் கிடைத்த ஒரு ஸ்திரமான அற்புதக் காவலே யொழிய வேறல்ல.

மகாகண்ணியம் தங்கிய திருக்குறுஆனையும், பரிசுத்த நபீ திருவாக்குச் சிந்தனையும், அப்படியே நாயகமவர்களின் திவ்விய ஜீவிய சரித்திர நூல்களையும், சரடறத் தெரிந்து கொள்ளுகிற ஒருவன், நபீ அவர்களுடைய காரியம் சம்பூரணமடைய அவர்கள் ஜீவனுக்கு ஆண்டவனால் இருவித காவல்கள் ஏற்பட்டிருந்தன வென்று தெரிந்து கொள்வான்:—

(1) சத்துருக்களுக்கு மத்தியில் நபீ அவர்கள் இருந்து வர, நபீ அவர்களை சத்துருக்கள் தெரிந்து கொள்ளாமற் போகும்படி அவர்கள் கண்களுக்கு மத்தியில் திரை போட்டு விடுவது. அதனால் சத்துருக்களுக்குக் கண்ணிருந்தும் பார்வை யற்றுப் போவது.

(2) சத்துருக்கள் பார்வையில் நபீ அவர்கள் தென்பட்டு அவர்களிடம் [illegible] கொலை செய்ய எத்தனிக்கப்பட்டும், அவர்கள் சக்தி பெருமை போதாமையிருந்தும், முடமாய்ப் போவது.

(தொடரும்)

கோழும்பில் கூட்டம்

கொழும்பு, இரண்டாங் குறுக்குத்தெரு "ஜாமிஉல் அல்பறு" பள்ளி வாசலில் இம்மாதம் 6-ந்தேதி, சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" (இஸ்லாத்தின் பாதுகாப்பு) சங்கத்தை ஆதரிக்க ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் சேர்ந்த ஒரு பொதுக்கூட்டம் அல் ஆலிமுல் அல்லாமா தலைமையில் நடைபெற்றது. அதுபோது நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு :—

ஜனுப் தாவூத்ஷாசாஹிபு அவர்கள் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு முற்றிலும் முரணானவைகளை யெழுதி வருவதை மிக அழுத்தமாக கண்டிக்கும் சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம் (இஸ்லாத்தின் பாதுகாப்பு) சங்கத்தை இம்மகாசபை ஆதரிக்கிறது.

சென்னை 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' (இஸ்லாத்தின் பாதுகாப்புச்) சங்கத்திற்கு இத்தீர்மானத்தைத் தெரிவித்துக் கொள்ளும்படி இம்மகாசபை கேட்டுக் கொள்கிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னையில் கூட்டம்

சென்னை ஹிமாயத்துல் இஸ்லாம் அஞ்சமன் சங்கத்தினுதரவில் 10-10-29ல் சென்னைக் கடற்கரை திலகர் கட்டிடத்தில் பால்ய விவாகத்தடை சட்டத்தை எதிர்ப்பதற்காக ஒரு பெரிய பொதுக்கூட்டம் மௌல்வி ஜியாவுதீன் சாஹிப் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நிறைவேறிய தீர்மானம் வருமாறு :—

"இந்தியா சட்டசபையில் சாரதாவினல் கொண்டு வரப்பட்ட குழந்தை விவாகத் தடை மசோதாவில் முஸ்லீம்களையும் கட்டுப்படுத்திச்சட்டமியற்ற ஐரோப்பியர்களும், நியமிக்கப் பட்டவர்களும், உத்தியோகஸ்தர்களுமாகச் சேர்ந்து ஆதரித்து அதை நிறைவேற்றியதை இப்பொதுக் கூட்டம் அழுத்தமாகக் கண்டிக்கிறது. இவ்விதம் முஸ்லீம்களை நிர்ப்பந்திப்பது குர்ரான் ஸுன்னத், ஹடீஸ், இஜ்மாவின் தீர்ப்புக்களுக்கு விரோதமாயிருப்பதாக உலமாக்கள் ஓயாதுவற்புறுத்தியிருப்பதுடனில்லாது இந்தியா முழுவதுமுள்ள முஸ்லீம்கள் பெரும்பாலோரும் அம்மசோதாவை ஆட்சேபித் திருக்கிறார்கள் அம்மசோதாவிற்கு இராஜப் பிரதிநிதி அவசரமாக அங்கீகாரமளித்தது, மன்னர்பிரான் மதவிஷயங்களில் தம்அரசாங்கம் தலையிடாது என்று வாக்குறுதி யளித்திருப்பதற்குப் புறம்பாக விருப்பதாக இக்கூட்டம் தெரிவித்துக் கொள்ளுகிறது. பால்ய விவாகத்தடை சட்டம் முஸ்லீம்களுக்கு மதப்பிரகாரம் சாசுவதமாயுள்ள அடிப்படையான சொந்த அனுஷ்டான உரிமையைப் பாதிக்கிறது. ஆகையினல் முஸ்லீம்களுக்கு அச்சட்டம் ஏற்பட்டதில்லையென்று அரசாங்கம் விலக்கு செய்யவேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது. அவ்விதம் செய்யாமல் போனால் இது காறும் பரமவிசுவாசமாக விருந்த 7 கோடி இந்திய முஸ்லீம்களும் அதிருப்தியடையநேரும். இதை மாட்சிமை தங்கிய மன்னர் பிரானறிந்து முஸ்லீம் சமூகத்தை அச்சட்ட அமுலிலிருந்து விலக்குமாறு வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்."

ரோட்டிக்குள் பணம்

டிக்கட் இல்லாமல் பிரயாணஞ் செய்ததற்காக 11 பேருக்கு அலகாபாத் இரயில்வே பிரத்தியேக மஜிஸ்திரேட் அபராதம் விதித்தார். இவர்களிடம் போதிய பணமிருந்ததாக நிரூபிக்கப் பட்டதால், அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் பணங்களை மிகவும் தந்திரமாக மறைத்து வைத்திருந்த விவரம் பின்வருமாறு விசாரணையில் வெளியாயின. ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்த இவர்கள் பிச்சைக்காரர்கள் போல் வேஷம் தரித்திருந்தார்கள். இவர்களுள் எட்டுபேரிடத்தில் எட்டு ரொட்டிகளைத் தவிர வேறொன்று மில்லை. அந்த ரொட்டிகளைச் சோதனை செய்ததில் ஒவ்வொரு ரொட்டியிலும் 39 ரூபாய்கள் அடங்கி யிருந்தன. ஏனைய மூன்றுபேர்களுள் ஒருவனிடத்தில் இருந்த கூடையில் ரகசியப் பை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 150 இருந்தது. ஒரு ஸ்திரீயினிடத்தி லிருந்த களிமண்ணால் செய்யப்பட்ட சிவன் உருவத்தை உடைத்தபோது, அதிலிருந்து 20 ரூபாய்கள் கீழே விழுந்தன.

முன்ஸிகஞ்சியில் ஆலயப்பிரவேசம்

வங்காளம், முன்ஸி கஞ்சியிலுள்ள காளி கோயிலில் நடைபெற்றுவரும் நாம ருத்திரர்களின் சத்தியாக்கிரக சம்பந்தமாக, கல்கத்தா ஆசிரியர் திரு பேந்திர பானர்ஜியும், சத்தியாக்கிரகக் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ சுரேந்திர மூசம்தாரும் இ. பு. கோ 114-வது பிரிவுப்படி கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் ஜாமீன் கொடுத்து, காவலிலிருந்து வெளிவர மறுத்துவிட்டார்கள். நாம ருத்திரர்கள் அக்கோயிலுக்குள் நுழைவதற்கும், வழிபாடு செய்வதற்கும் உள்ள உரிமையை ஸ்தாபிக்க 45 நாட்களாக சத்தியாக்கிரகம் செய்து வருகின்றார்கள்.

"இல்லறமும் இன் மொழியும்"

கணியூர் ஜனுப் கா. நயினர் முகம்மது எழுதுவது :—

மணியலை கொழிக்கும் அணிகடலுடுத்த அவனியிலே, ஆண்டவனால் இயற்கையிற் றோற்று வித்த—"அரிதரிது மானிடராதலரி" தென்று, ஔவைப் பிராட்டியால் அமிழ்தினு மினிய தமிழ்ச் சொற்களாற் புகழ்ந்துரைக்கப் பட்ட ஆன்மசரீரிகளாகிய ஆண்பெண் இருபாலாரும் கூடியியற்றும் இன்றியமையாத ஒரு பண்பையே இல்லறம், இல்லறம் என்பர் கற்றோரும் மற்றோரும். எனவே, மானிடயாக்கை வாய்ந்த மக்கட்கு இவ்வில்லற மியற்றல் இன்றியமையாத ஒன்றா? அவசிய மெனின் அதனல் வரும் பயன்யாது? அவ்வறத்தையின்பமாய்க் கழித்தற்குத்தம்பதிகள் எத்தகையரா யிருத்தல் வேண்டும்? இல்லறத்துக்கும் இன்மொழிக்கும் இயை பென்? இன்மொழியின் இலக்கணம் யாது? இவ்வின் மொழியைக் கடைப்பிடித்தல் இல்லறத்தார்க்கு இன்றியமையாமையும் இதனல் ஏற்படும் பயனும் என்? என்பவாதிய கடாக்களை யெழுப்பி விடை காண்டலே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

இல்லறம் மக்கட்கு இன்றியமையாத ஒன்றா?

இறைவனல் இயற்கையிற் றோற்று விக்கப் பெற்ற பொருள்கள் இருவகைப்படும். அவைகளில்ஒன்று ஆண், மற்றொன்றுபெண் என்பது அறிஞர்கண்ட உண்மை. அத்தகைய பொருள்களில் அரும் பெரும் பொருளாய்த் தோற்றுவிக்கப் பெற்றவர் மக்கள். அம்மக்களும் இயற்கையின் ஏவற்படி ஆண் பெண் இருவகையா புதித்தனர். அங்ஙனந் தோன்றிய மக்களில், அவனியிலே ஆண்டவனை முக்கரணங்களாலுந் தொழுது, அவனின் ஆணைப்படி அவனடியார்களைக் காண்டலும் அன்புட னுபசரித்து அறுசுவை யுண்டியருத்தி அன்னரை அனுப்புதலும், அடிகளிற் கொப்புளங்களரும்ப, அல்லும் பகலு மலைந்தாலும் அரைவயிற்றுக் கஞ்சியும் அகப்படாது அரும்பசியால் அகடு காய்ந்தோரைக் கண்ட உடனே அன்னார்க்கு வேண்டுவளித்தனுப்பலும், ஆண்டவன் திருவடிகளிலேயே அல்லும் பகலும் அழியா அன்பு வைத்துத் தவமியற்றும் அருந்துறவிகட்கு உதவியளித்தலும் ஆதிய செயல்களாம். அறங்களை யியற்றற்கு ஒரு சாரார் தோன்றுதல் இயல்பு. அவ்வொரு கூட்டத்தாரே இல்லற வாசிகளென்பது, யாரும் அறிந்ததொன்று. மேற்காணும் மேன்மைச் செயல்கள், ஆணும் பெண்ணும் கூடினலொழிய ஒருவராலியற்ற வொல்லாதென்பது மக்களுடைய அனுபவம். என்னை? மூற்கூறப் பெற்ற ஆண்டவனடியார், அருந்துறவியர், அகடு காய்ந்தோர் முதலியவர்கட்கு அன்னர் வேண்டுவன அளித்தற்குப் பொருள் வேண்டற்பாலது. அப்பொருளை யொருவரியற்றல் வேண்டும். அச்செயல் பெரிதும் ஆடவர்க்கே ஏற்பட்டது. அங்ஙனம், ஆடவன்மட்டும் பொருளை யீட்டிவிடின், மேற்குறித்த இல்லறக் கடன்களை யியற்ற வொல்லுமோ என ஆராய்வுழி, அப்பொருளைப் பண்படுத்தியளிக்க ஒருதுணைவி அத்தியாவசியமாய் வேண்டப் படுகிறாள். அவ்விருவரும் மனமொன்றி நடாத்தும்போழ் துதான் இல்லறக் கடன்கள் இனிது நிறைவேய்துகின்றன. ஆகவே, மக்கட் பகுதியினர்க்கு இவ்வில்லறம் இன்றியமையாதது தோன்றும். இவ்வுண்மையை நஞ்செந்நாப் போதகரிடம் சிறிது சென்று காண்பாம்.

நம்பொய்யில் புலவர் தாம் யாத்த பொது மறையின்கண், "இல்வாழ்க்கை" என்னும் அதிகாரத் தொடக்கத்தில், யாம்மேலே யியம்பியுள்ள செயல்கள் "இல்லறத்தார்கட்கு இன்றியமையாக் கடன்" என்று, திருகுறள்களான் இசைத்தருளியவற்றைச் சிறிது நோக்குமின்.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய
மூவர்க்கும் நல்லாற்றி னின்றதுணை"

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் றுணை"

வள்ளுவர் குறட்குத் தெள்ளிய உரைகண்ட ஆசிரியர் பரிமேலழகரும், "இயல்புடைய மூவர்" என்பதற்கு, "ஆசாரியனிடத்தே ஓதுகின்றவனும், விரதங் காக்கின்றவனுமாகிய பிரமசாரியும், காட்டினிடத்தே போய் மனைவியோடு தவஞ்செய்கின்றவனாகிய வானப் பிரஸ்தனும், எல்லாப் பற்றுக்களையும் விட்டவனாகிய சந்நியாசியும் என்றறிக" என்றும் குறித்திருப்பது மிகச் சிந்திக்கத் தக்கதொன்று. 'விருந்தோம்பல்' இல்வாழ்வானுக் குரிய இன்றியமையாக்கடனாகும். இதையும் நமதுபெரும் புலவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்
தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"

என இசைத் தருளினர். ஆகவே, இதுகாறுங் கூறியவற்றால், ஆடவரும், அரும் பெண்டிரும் சேர்ந்தியற்றும் அறம், இல்லறமென்பதூஉம், இஃதுமன்பதைத் தொகுதிக்கே இன்றி யமையாத தொன்றென்பதூஉம் கண்டாம். இனி இவ்வறத்தால் வரூஉம் பயனை ஒரு சிறிது ஆராய்வாம்.

'இல்லறத்தார்க்கேன்றும் இரும்பயன் என்?'

மாபெரும் புவியில் மாண்புடைய மன்பதைகள் வந்து தோன்றிய இரகசியம்தான் என் எனச் சிறிது இதயத்தை இதர விடங்களிற் செலுத்தாது ஆராய்ந்து பார்ப்பின், ஒரே ஒரு விடையே கிடைக்கும். அதுவே, என்றென்றும் அழியாத எம்பெருமானின் பெருந் திருவருளாற் றோன்றும் பேரின்ப மென்பது. அத்தகைய அழியா வின்பத்தை,—இடையில் அன்பந்தலை காட்டாது நிகழுமின்பத்தை யடைதற்குக் கால்கள் கொப்புளங்க ளரும்பப் பல காதங் கடந்து காடு சென்று, காய்ந்த சருகைப் புசித்துக் காற்றைப் பருகிக்கனன்மேனின்று கடுந்தவம் புரியவேண்டுவ தில்லை. அல்லும் பகலும் அணியலை கொழிக்கும் ஆழியபுனன் மேனின் றருந்தவ மியற்ற வேண்டுவதில்லை. ஆனல் இம்மையிலே யியற்றும் இல்லறத்தாலேயே இவ்வின்பத்தை யெய்தவியலும். என்னை? முற்றத் துறந்த முனிவனும் தான் தனதைம்புலன்களை யொடுக்கித் தவமியற்றல், "ஓர் உயரிய நிலையை (வீடுபேற்றை) அடைய வேண்டு மென்னும் சுயநலப் பற்றேயாகும் என்பது யாரும் மறுக்கொணு வாய்மை. ஆகவே, ஒருவன் சுயநலங் கொண்டவிடத்து, அவன் ஆண்டவன் திருவடிப் பேற்றிற்குப் பெரிதும் பொறுப்பாளியாவதில்லை. இல்லறத்தானே சுயநலப் பற்றற்றவன். தனக்கென வாழாப் பிறற்குரியாளன். அன்னான், தன்னுடைய உயிரும், தளராயாக்கையும், தணிவிலாப் பொருளும் தன்னுடைய வெனச் சாற்றுவதும் நினைப்பதுமின்று. எல்லாம், தனது வந்திழையாமினிய துணைவிக்கும், குழலும் யாழுங் கோதுபோற் பின்னிடக் குதலைமொழி குளறும் குறுநடைப் புதல்வர்க்கும், தனதுற்றுருறவினர்க்கும், அளித்து விடுகிறான். அதுபோழ்து தனக்கென வாழாப் பிறற்குரியாளனைத் திகழ்கின்றான். முத்திப் பேற்றை யடைகின்றான். இந்நிலையே துறவற நிலையினும் சிறந்ததெனப் பெரியார் கூறுவர். எடுத்துக்காட்டாக இத்தாணியிற் றோன்றிய எந்த மதத்தின் தீர்க்க தரிசிகளின் வாழ்க்கையை எடுத்துப் பார்த்தாலும், அன்னார் தனக்கென வாழாப் பிறற்குரியாளராகவே வாழ்ந்து தற்பரனின் இன்பத்தை யடைந்து சென்றுளா ரென்பது நன்கு புலனாகும். மணிமேகலையிற் புத்தர் பெருமானைச் சீத்தலைச் சாத்தனார் "தனக்கென வாழாப் பிறற்குரி யாளன்" னென்றே அழைப்பதும் ஈண்டு எடுத்தாளத்தக்கது. ஆகவே, இவ்வரு நிலையை—இவ் வீடுபேற்றை—இவ்விறவா வின்பத்தை யில்லறமே யளிக்கவல்லது. இதுவே இதன் பயன். இவ்வுண்மையை நமது நாயனாரும்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறளில்"

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்"

ஒருவன் இல்வாழ்க்கையைத் தரும வழியில் நடத்துவனுகில் துறவறத்திற்குப் போய்ப் பெரும்பயன் என்ன என்பதாம். ஆகவே, இதுகாறு மியம்பிய வாற்றால், இல்லறத்தின் பயன், இறுதியில் முத்தியை யளித்து இசைபட இம்மையில் வாழவைக்கும் என்பது இனிது விளங்கும்.

இனி இத்தகைய வில்லறம் இனிதாய் நடைபெற, வந்தலும் வந்திழையும் எத்தகையரா யிருத்தல் வேண்டும் எனச் சிறிது ஆய்ந்து மேற்செல்வல்.

(தொடரும்)

வேலைக்காரி : என்ன அம்மா! இந்த வீட்டில் பதின்மூன்று குழைந்தைகளா? என்னால் வேலைசெய்ய முடியாது.

எஜமானி : ஏன்? ஒற்றைப்படை எண்ணுய் இருக்கிற தென்று பார்க்கிறாயா? அடுத்த வருஷம் பதினான்கு குழந்தைகளாகி விடும். அதுவரை பொறுத்துக் கொண்டிரு.

கிருஷ்ண மிருத போதம்

ஞான புஷ்கரணி

மலர் - உ.

உய்த்துணர்தல்

அடையாறு ஸ்ரீமான் தி. மு. மாணிக்கம் பிள்ளை பின் வருமாறு எழுதுகிறார் :—

அறிஞர் யாவரும், அறிவைத்தேடும் எல்லா ஜனங்களும் தமது அக்கம் பக்கங்களில் நோக்கிச் சிந்திக்க வேண்டும். எல்லாப் பொருள்களும், உயிருள்ளவை யானுலுஞ் சரி, உயிரற்றவை யானுலுஞ் சரி சொற்ப கால மிருப்பனவே; எதுவும் நிலைத்திருப்பதில்லை. எல்லாப் பொருள்களுக்கும் ஜனன மரணம் உண்டு. அவசரத்தோடு இடிபடல் நிகழுகின்றது; சிறிதுகாலத் துன்பமும் அற்பசுகமும் இருக்கின்றன. ஏக்கங்கள், திருப்தியடையாத ஆசைகள், ஒருபோதும் திருப்திசெய்ய முடியாத இச்சைகள் குடிகொண் டிருக்கின்றன. சூன்யம் என்பது பெருத்த சமுத்திரமா யிருக்கின்றது. ஒதுக்கிடங்களில் தனியாய்ப் பூத்திருக்கும் மிருதுவான புஷ்பத்தைப்போல் பிரேமையும் அன்பும் வாடுகின்றன. ஜனனத்தில் சந்தோஷமும் மரணத்தில் துக்கமும் வருகின்றன. திருநாள் என்பது பறந்து செல்லும் மேகம் போன்றது; உயிருள்ளயாவும் உயிரற்ற பொருள்களெல்லாம் க்ஷீணித்துக்கொண்டே அழிவிற்குப் போகின்றன. எல்லோரும் பிணமாகி இடுகாட்டிற்குப் போகிறார்கள்; பிறகு மண்ணாகி விடுகிறார்கள்.

எங்கெங்கே பார்த்தாலும் இவ்விதமான ஒழுங்கின்மையும், சொல்லமுடியா அலைச்சலுங்கூடிய திருப்தியடையாதவதோவொன்று குடிகொண்டிருக்கின்றது. விஷயங்கள் ஏன் இப்படி யிருக்கின்றனவென்று விசாரிக்கும் மனமுடையவன் நீடித்துள்ளது யாதேனும் உண்டா, நிலைத்திருப்பது யாதாகிலும் மிருக்கின்றதா, அழியாமலிருப்பது யாதேனு முளதா, இளைப்பாறுமிடம் ஏதாவது இருக்கின்றதா வென்று கேட்க வேண்டும்; விசாரிக்கவேண்டும்; தேடவேண்டும்.

ஆசைகளிலிருந்தும், திருப்தியடையா இச்சைகளினின்றும் விடுபட்டிருக்கும் இடம் ஏதாவதில்லையா? அமைதியுடன் சாந்தமாய் நிலைத்திருக்கும் ஸ்தலம் யாதுமில்லையா? மாறுதலில்லாமல், அழிவில்லாமல் வாடிப் போகாமல் சாந்தமாயுள்ள பொருள் யாதுமில்லையா வென்று அறிவுடனிருக்கும் மனது ஆலோசிக்கின்றது; சுற்று முற்றும் இந்த நிலையில்லா விஷயங்களைப்பார்த்து நீடித்திருப்பது யாதொன்று மில்லையா? சாசுவதமானது யாது மில்லையா வென்று கேட்கின்றது.

அந்தப் பொருளைக் காணுதவர்கள் இதற்குப் பதிற் சொல்ல முடியாது. கண்டவர்களோ விளக்க மில்லாத வகையில் தான் சொல்ல முடியும். ஏனெனில் ஒவ்வொருவரும் விகாச முறையில் தமக்கிருக்கும் சாமர்த்தியத்தை யொட்டித் தமது எண்ணம், உணர்ச்சி இவைகளிருக்கும் தரத்திற்குத் தக்கபடி கோரியதைக் காண வேண்டியிருக்கின்றது. எல்லோருக்கும் அதே காட்சி கிடைக்கும். எல்லோரும் அதே அழகைப் பார்ப்போம், என்றாலும் பார்த்ததைச் சொல்லும் வார்த்தைகள் வெவ்வேறு பொருளைக் கொடுத்துவிடும்.

அறிவாளிகளும், வயதில் மூத்தவர்களும் - அதாவது தேக வயதல்ல; மற்று அநேகவித துக்கங்களாலும் வருத்தங்களாலும் சுகங்களாலும் பக்தி பரவசங்களாலும் அடிபட்டு அனுபவங்களில் தேர்ந்தவர்கள் அந்தக் காட்சியைப்பார்த்தவுடன், நிலைபேறுன்பொருள் ஒன்று இருக்கிறதென்று சந்தேகமின்றிச் சொல்லக்கூடும்.

அப்படியானல் அந்தக் காட்சி யென்பது யாது? அதுதான் மெய்ப்பொருள் நிலைத்துள்ளது; நீடித்துள்ளது. அதற்கு ஆதியுமில்லை; அந்தமுமில்லை; அது மாறுதது; அழிவற்றது. அஃது எங்கே இருக்கின்றது; அதை எங்கே காணுவோம் என்று கேட்பீரானல், அந்த நீங்கள் அந்த ஆனந்த நாட்டில் காணலாம் என்று யான் சொல்லுகிறேன்.

நீங்களதைக் காண வேண்டுமானல் ஞானசாரமாயும் மெய்ப்பொருளாயு மிருக்கும் அந்தத் தேவலோக புஷ்கரணியைத் தேட உங்கள் மனதையும் இதயத்தையும் செலுத்த வேண்டும். ஏனெனில் அவ்விடத்தில்,—அந்த நாட்டில் அந்த கர்ப்பக் கிரகத்தில் நாம் கற்க வேண்டியிருக்கின்றது; அனுபவம் பெறவேண்டி யிருக்கிறது; மனோவல்லமையாலும், உயர்வுற்ற தாபக்கிளர்ச்சியாலும் வளர வேண்டியிருக்கிறது. அவதாரரூபமாய் மெய்ப்பொருள் குடிகொண்டு சாசுவதமாயுள்ள சொருபத்தை அங்கே காண வேண்டியிருக்கிறது. உலகிலிருக்கும் உபாயமான வெறும் மகிமைகளாலும், சிநேகிதர்களுடைய முகஸ்துதிகளாலும் திருப்தி யடையாதிருக்கும் அமேசரைப்போல் நீங்கள்தேட வேண்டும். ஆகாயத்தின் சுத்த வெளியைப் பார்க்கவிரும்பினல் இருப்பிடத்தில் காடுபோ லிருக்கும் புதர்களை அப்புறம் ஒதுக்கித்தள்ள வேண்டும். அநித்திய விஷயங்கள் எனும் காட்டிலிருந்து வெளியே போவதற்கு வழியைக் காட்டும் நட்சத்திரங்களைப் பார்க்க வருமுன் வாழ்க்கையில் பட்டுப்போய் மறைக்கும் கிளைகளை வெட்டி எறிய வேண்டும்.

இவ்விதமாக நீங்கள் தொடங்க வேண்டும். யானும் அவ்விதமாகத் தான் ஆரம்பித்தேன். எனது சந்தத்தைக் கண்டேன். விஷயங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாயிருக்கும் மூலத்தை - பரிபூரணத்தை, அழகை, ஆனந்தக் களிப்பை - கண்டேன். அமிர்தத்தை ருசி பார்த்தேன். யான் பார்த்ததை எனது கருத்தின்படி தான் விவரிக்க முடியும். அஃது உங்களுக்கு அருத்தமாகாததுபோல் காணும்வார்த்தைகளைக் கொண்டு தான் சொல்லமுடியும். என்றாலும் அதைப் பற்றி நீங்கள் ஏக்கங் கொண்டிருந்த படியால் அது உங்களண்டை வந்தாயிற்று. அதை நீங்களாகவே பார்த்தவுடன், அஃது உங்கள் உயிருக் காதாரமான சுவாசம் போலாய்விட்டவுடன், நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அப்போது அமிர்தத்தை உட்கொண்டதாகவும், நித்தியமாய், நீடித்து மாறுததா யுள்ளதைக் கண்டதாகவும் உங்களுக்குத் தெரியும்.

உலகில் திருப்தி தருவதும், உங்கள் அவாவைத்திருப்தி செய்யக் கூடியதும் அமிர்தத்தைத்தவிர அதாவது மெய்ப்பொருளைக் காண்பதை விட வேறொன்று மில்லை. ஆனல் ஞான புஷ்கரணியை, மெய்ப்பொருள் வீற்றிருக்கும் அந்த ஆனந்த நாட்டைத் தேடுபவன் சுயகாமியத்தை அழிக்கும் விதத்தை முதன் முதல் கற்கவேண்டும். உண்மையான சிநேகித வாஞ்சையின் பெருமையை அதாவது எல்லா ஜீவராசிகளுடனும் ஒன்றிய உணர்ச்சி பெறும் போதும் மற்றவர்களை விட்டுத் தான் வேறல்ல என்றிருக்கும் போதும், உனது சுற்று முற்று மிருக்கும் அநித்தியப் பொருள்களிடையில் சந்ததமாயிருப்பதைக் காணும் போதும் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு மனிதனும், தவழ்ந்தோடும் மேகம் ஒவ்வொன்றும் இன்னும் பூமியிலுள்ளவை யெல்லாம் புதிய கருத்தை தனிநேத்தை, வேறுவித சுகத்தை வேறுவித ஆனந்தத்தைக் கொடுக்கும்போதும் உன்ன பிரேமையை உணர்ந்தறிந்து மதிக்கக் கற்க வேண்டும். அப்போது நீங்கள் ஆனந்த நாட்டில் புகமுடியும். அங்குச் சில்லென்று வீசும் அநேக காற்றுகளிருக்கின்றன.

ஏனெனில் சுயகா மியமும் மெய்ப்பொருளும் ஒன்றுய்க்கூடியிருக்க முடியாது. சுயகாமியத்தின் வழியோ துக்கத்திற்கும் வருத்தத்திற்கும் வாழ்வென்று கூறி நித்தியமென்றும் நீடித்ததென்றும் தவறாக எண்ணும் பறந்தோடும் சுகத்திற்கும் கொண்டு போய்விடும். மெய்ப்பொருளோ ஆனந்த நாட்டில் கொண்டு போய்விடும். ஏனெனில் அங்குச் சுயகாமியம் மறந்து போய் விடுகின்றது. செயல் கொண்டிருப்பனவும் தாவர ஜங்கமப் பொருளாயிருக்கும் உலகிலுள்ள எல்லாவற்றினுடும் ஒரு பாகமென்று உன்னை அங்கு உணரச் செய்யும், மனதில் நினைக்கச் செய்யும். அப்படிப்பட்ட மனதாயும் தாப உணர்வாயும் இருக்கும் ஜீவிதத்தின் கெட்டியான ஒற்றுமை அங்கிருக்கின்றது.

ஆனல் அந்த ஆனந்த நாட்டிற்குப் போகப் பிரியப்படுகிறவன்; பெருந்தன்மையுடையவனுக வேண்டுமானல் சுயகாமியத்தைப் பலி கொடுக்கும் விதத்தைக் கற்க வேண்டும். அஃது எவ்வளவு கஷ்டமானுலுஞ் சரி, அது தற்சமயத்தில் முடியாததானுலுஞ் சரி, எவ்வளவு களைக்கத் தக்கதானுலும் சரி, எவ்வளவு வருத்தமானுலுஞ் சரி அதைப் பலி கொடுக்க வேண்டும். நீடித்திருக்கும் பேரானந்தத்தை, பெரும் பரவசத்தை அதீத மகிமையைப் பெறுவதற்காகவும் பிறருக்கு அளிப்பதற்காகவும் அதைப் பலி கொடுக்க வேண்டும்.

இஃது எனது மனோவாஞ்சை யானதாலும், எனது ஆனந்தமா யிருப்பதாலும், அந்த இராஜ்ஜியத்தைப் பார்த்திருப்பது எனது களிப்பாயிருப்பதாலும் அக்கறுமணக் காற்றைச் சுவாசிக்க நாம் எல்லோரும் சேர்ந்து போவோம்; சேர்ந்து பார்ப்போம்; சேர்ந்து சோதிப்போம்.

நீங்கள் எனது கண்கள் வழியாய்ப் பார்ப்பதற்கு முன் எனது மனதின் மூலமாய் நினைப்பதற்கு முன் எனது இதய வழியாய் உணருவதற்கு முன் உங்களிடத்திலிருக்கும் யோசியாது வைத்திருக்கும் அபிப்பிராயங்களை உடைத் தெறிய உங்களுக்குப் பலமும் திறமையுமிருக்க வேண்டும். ஏனெனில் நாம் காண்பது விவேகத்தின் ரசமாயும் யோசிக்கு மறிவின் சாரமாயும் தாபங்களின் ஸ்தலமாயும் அன்பின் அமுதமாயு மிருக்க வேண்டும். துர் அபிப்பிராயங் கொண்டவர்களும், பந்தங்களால் பிடிபட்டவரும் அதன் முழு அழகையும் பெருமையையும் மகிமையையும் பார்க்க முடியாது. துரபிப்பிராய மென்பது சூரிய வெளிச்சத்தை மங்க வைக்கும் வர்ணக் கண்ணாடியைப் போல் காட்சியைக் கலக்கி விடுகிறது.

இக் காரணத்தைக் கொண்டு அதைப் பார்க்க வேண்டிய கிரமத்தோடு பார்க்க விரும்பும் நீங்கள், இருந்தது இருந்தாற்போல் பார்க்க விரும்பும் நீங்கள், தடையின்றியும் பயமின்றியுங் களிப்புடனும் அடக்கியாளும் திறமையுடனும் வரவேண்டும். ஆனல் அந்த வளர்ச்சிக்கு நீங்கள் வர, நீங்கள் உங்களுக்குள்ளே யிருக்கும் நாதத்தின் வாக்கிற்குக் கீழ்ப்படிந்து வந்திருக்க வேண்டும். தாரபிப்பிராயச் சுவர்களையும், உங்களை இறுக்கிப் பிடிக்கும் இடுக்குகளையும், தற்சமயம் உடைத் தெறிந்து அதைப் பரிசோதிப்போம்; இதயத்தால் மாத்திரமல்ல கமது மனதோடும் சோதிப்போம்.

மனிதனுடைய சிற்பி வேலைத் திறமையைப் பூரணமாய்க் காட்டும் சுற்சிலையையாவது, மாலைப் பொழுதில் மலைச் சிகரத்தின் மேல் வானத்திலுள்ள வர்ண விநோதக் காட்சியையாவது வேகமாய்ப் பறக்கும் பறவையின் பிரகாசத்தை யாவது, வயலிலிருக்கும் மனோஞ்சித புஷ்பத்தையாவது, தனியாயிருக்கும் பலத்த விருட்சத்தையாவது இப்படிப்பட்ட பூலோக அற்புதத்தைப் பார்த்து அக் காட்சியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு காம விகாரங்களால் ஊசலாடவைக்கும் மனச் சோர்வையாவது பெருத்த பாவசமாவது வரும்போது அவைகளைத் தீர்க்க அதை உபயோகப் படுத்தவேண்டும். அஃது உனக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அதனுடைய அழகைக் கொண்டும், சுகத்தைக் கொண்டும், உனது அற்பத் தொந்திரவுகளை நீக்குமானல் அப்போது நாம் ஒவ்வொருவரும் எதற்காக ஏக்கங்கொண் டிருக்கிறோமோ, எதை விசாரித்துக்கொண் டிருக்கிறோமோ, அதைக்காண மனதும் இதயமும் ஒன்றாய்ச் சேர்ந்து உடன்பட்டு ஒத்திருப்பதைக் காட்டுகின்றது.

இதைப் போலவேதான் சந்ததமாயுள்ள மெய்ப்பொருளின் காட்சியும். நீங்கள் அதனுடன் வாழவேண்டும். உங்கள் விஷயங்களின் மேல் கவனம் வைத்திருக்கும் போதெல்லாம், அற்ப விஷயங்களின் பிரியம் வைக்காத நேரமெல்லாம், ஒவ்வொரு நிமிஷமும் அந்த அழகைக் கருத்திலிருத்தி அதை யொரு விலையுயர்ந்த இரத்தினமாக அணைத்து வைத்திருக்க வேண்டும். சாதாரண பூலோக சுந்தரத்தின் காட்சியை நீங்கள் கண்டிருப்பீர்களானலும் அது சஞ்சலப்படுஞ் சமயத்தில் அநேகமாய் நினைவுக்குவரும். அற்பமனமுடையவரும், ஈன இதய முடையவரும் அதனுடைய அழகைச் சீக்கிரம் மறக்கின்றவர்கள். ஆதலால் நீடித்திருக்க வேண்டிய அந்த அழகை, நிலைத்திருக்கவேண்டிய அந்த ஆனந்தத்தையும் மெள்ள மெள்ள மறந்து விடுகிறீர்கள்.

நாம் அறிவுடையோர்களானல் துரபிப்பிராய மில்லாத இதயமும் சுத்தமனமுமுடையவரானல் அப்போது பூலோகப் பெருங்காட்சியின் அழகு எப்போதும் மனதிலிருக்கும். நீங்களதை எப்போதும் மனோரஞ்சிதத்திற்குக் கொண்டுவந்து அதில் வாழலாம்; வெளியுலகை மறக்கலாம். பரவசமாக்கும் அந்தக் காற்றை எப்போதும் சுவாசிக்கலாம். இப்படி நீங்கள் ஆனந்த நாட்டைப் பார்த்து ரோஜா மலர்களால் நிறைந்த இந்தத் தோட்டத்தை, பரவச ஆனந்த அமிர்தமாயிருக்கும் இந்த இடத்தைச் சுத்த மனதுடன், சுத்த இதயத்துடன் பற்றிப் பிடித்தவுடன் நீங்கள் எப்போதும் அதில் வாழக் கூடும். அப்புறம் அந்த நித்தியத்திலிருந்து அநித்தியத்திற்கும் போய்த் திரிந்து கொண்டிருக்கலாம். அப்படிக்கின்றி நம்மில் அநேகர் அநித்தியத்தில் குடிகொண்டு எப்போதோ, ஒரு சமயம் நித்தியத்தில் உலாவப் போகின்றீர்கள்.

அற்பவிஷயங்களைத்தான் நாம் எப்போதும் நித்தியமென்று மதிக்கின்றோம். இக் காரணத்தால் பெருமை வாய்ந்த அந்தக் காட்சி, மகிமை பெற்ற அந்தக் காட்சி நமக்கு அபூர்வமாயிருக்கின்றது. ஏனெனில் நாம் அற்ப விஷயங்களால் சூழப்பட்டு அதற்கு அடிமைப்பட்டிருக்கிறோம். இக்காரணத்திற்காக அமைதியா யில்லாத சாந்தமில்லாத மனதிலாவது எப்போதும் அடித்துக் கொண்டிருக்கும் இதயத்திலாவது ஒரு நாம் பார்த்த அப்படிப்பட்ட காட்சியை ஞாபகத்தில் வைப்பது மெத்த கஷ்டம். இவ்விதக் காட்சியை நாமெல்லோரும் பார்த்திருக்கிறோம், பார்ப்பது பிரமாதமல்ல.

சூரிய அஸ்தமனத்தின் அழகையும், விருட்சத்தின் அலங்காரத்தையும், சுனை மற்ற ஆகாயத்தில் பறக்கும் பட்சியையும் நாம் ஒவ்வொருவரும் பார்த்திருக்கிறோம். அநித்தியப் பொருள்கள் மூலமாய்ப் பேரின்பத்தைப் பார்ப்பீர்களானல், அவைகளிடையில் அதீதமாயுள்ள மெய்ப்பொருளைக் காண

பீர்களானல் அதுதான் நித்தியமான பொருள். ஆனல் அதைப்பார்க்க உங்களுக்குக் கண்களிருக்க வேண்டும்; எப்படிப்பட்ட கண்கள் என்றாலோ அழகான காட்சிகளைப் பார்க்க வெகுகாலம் வழக்கப்பட்ட கண்கள், கஷ்டங்கள் எவ்வாறு யிருந்தபோதிலும், வருத்தங்கள், துக்கங்கள் என்ன வந்தபோதிலும் நெடுங்காலம் தேடத் திறமையுடன் பார்த்ததை ஞாபகத்தில் வைக்கும் கண்கள் இருக்க வேண்டும்.

மெய்ப் பொருளிருக்கும் அந்தக் கர்ப்பக்கிரகத்தில் நீங்கள் நுழைந்த பிறகு அதை இழக்கமாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அந்தச் சாசுவதத்தின் பகுதியா யிருப்பீர்கள். அப்புறம் உலகிலுள்ள மகிமை, சொந்த சிநேகிதர்கள், அற்ப பிரேமை முதலியன யாவும் உங்களுக்கு முக்கியமாகத் தோன்ருது. ஏனெனில் நீங்கள் சாசுவதத்தைச் சார்ந்தவர்கள். ஞானகாரமான தேவ தீர்த்தத்தை உண்டவர்கள்.

நீங்கள் அதில் நுழைந்த பிறகு அங்கிருந்து எப்போதும் வெளியே போய் உலகிலுள்ள பறந்தோடும் நிலையில்லா விஷயங்களைப் பார்க்கலாம். மற்றவர்களுக்குச் சுகத்தைக் கொடுக்க முடியும்; அவர்களை இரக்கத்தோடு பார்க்க முடியும்; நீடித்திருக்கும் நித்தியப் பொருளை மற்றவர்களுக்கு அளிக்க முடியும்.

அந்த இராஜ்ஜியத்தில், அந்தத் தோட்டத்தில் பேரின்பமா யிருக்கும் மெய்ப்பொருளின் ஸ்தானத்தில் நீங்கள் உமது சுய இச்சை கொண்டே நுழைய வேண்டும். உமது சொந்த பலத்தைக் கொண்டும், உமது சொந்த ஆசையாலும், உமது பெருந் தகைமையைக் கொண்டும் இந்த நீடித்திருக்கும் பெருமையை உண்டாக்க வேண்டும். உங்களுடைய பரிபக்குவத்தைக் கொண்டும் உங்களுடைய கூர்ந்த விவேகத்தைக் கொண்டும் இந்தச் சாகா நிலையை உண்டாக்கவேண்டும். நான் உண்டாக்கித் தருவதா யிருந்தாலும் அல்லது எவராகிலும் உண்டாக்கித்தருவதும் அற்பமா யிருக்கும். ஆனல் நீங்களாகவே உங்களுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டு உண்டாக்கு வீர்களானல் அது நீடித்திருக்கும்; நிலைத்திருக்கும்.

நீங்கள் அந்த நாட்டில் நுழைந்தபோது துக்கத்தையும் வருத்தத்தையும் இன்னும் பூலோக கொடூர இன்பங்களையும் கொடுக்கும் சுயகாமியத் தன்மைக்கு உங்கள் பேரிலுள்ள அதிகாரம் இழந்து விடுவதையும் அதனுடைய ஆளுகையும் சக்தியும் ஈனப்பட்டதால் உன்பேரில் அதற் கிருந்தபிடி போய் விட்டதையும் தெரிந்துகொள்வீர்கள்.

அந்தப் பரிபூரணத்தில் வளர்ந்து மெய்ப்பொருளிருக்கும் அந்தக் கர்ப்பக் கிரகத்தில் நீங்கள் நுழைகையில் "தான் வேறு" என்று உமக்கிருக்கும் தன்மை கொஞ்சங் கொஞ்சமாய் நழுவி விடும். இது தான மெய்ப்பொருள். இது தான் ஐக்கிய பரமார்த்திகம்; மானிடன் காணக் கூடிய பேரின்பம் இதுவே.

ஔவையார்

——

(பி. ஸ்ரீ)

ஔவையார் பெயரை அறியாதாரில்லை. இப்பெயர் கொண்ட பெண்மணிகள் சிலர் நல்லிசைப் புலமை வாய்க்தவர்களாக விளங்கினரென்பது வெளிப்படை. 'ஔவை வாக்கு' என்று, இந்நாட்டில் வழங்கும் பல அறிவுரைகளும் அறவுரைகளும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. 'அறஞ்செய விரும்பு' என்னும் ஔவை வாக்கு எவ்வளவு சொற்சுருக்கமும் பொருட் பெருக்கமும் கொண்டு திகழ்கின்றது.

ஔவையாரும் அதிகமானும் ஒரு காலத்தவர். ஔவையார் அதிகமானைப்பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. கபிலரும் அதிகமான் காலத்தவரே. ஆனல் சங்க காலத்து ஔவை வேறு, பிற்காலத்து ஔவை வேறு என்று தற்கால ஆராய்ச்சியாளர் கருதுகின்றார். திருவள்ளுவர் தமது நூலை அரங்கேற்றிய போது அதனைக் கபிலரும் கேட்டனரென்பது திருவள்ளுவ மாலையினின்று தெரிய வருகின்றது. இங்ஙனம் ஒரு காலத்தவரென்று கருதப் பெறும் ஔவையாரும் திருவள்ளுவரும் கபிலரும் அதிகமானும் சகோதரர்களே என்பதை மெய்ப்பிக்கும் பழைய ஆதாரம் ஒன்றும் காணப்படவில்லை.

ஆத்திச்சூடி, மூதுரை முதலான நூல்களியற்றிய ஔவையார் சங்க காலத்தவரா என்னும் கேள்வி பிறக்கின்றது. மூதுரை என்னும் நூல் பழைய நூல் என்பதில் ஐயமில்லை. தனிப்பாடல்களைக் குறித்தும் பிற நூல்களைக் குறித்தும் நிச்சயமாக ஒன்றும் கூறுதல் பொருந்தாது.

பிற்காலத்து ஔவையாரே தனிப்பாடல்களைப்பாடி யிருத்தல் வேண்டும். ஔவையாரைக் குறித்துப் பலகதைகள் வழங்குகின்றன. அதிகமானிடம் நெல்லிக் கனியொன்று பெற்றுக் காயசித்தி செய்து கொண்டு ஔவையார் நெடுங்காலம் உயிர் வாழ்ந்தனர் என்பது போன்ற கதைகளை நவீன ஆராய்ச்சியாளர் நம்புவதில்லை. கதை நிகழ்ச்சிகளைக் குறிக்கும் தனிப்பாடல்களிலும் சில விசுவாமித்திரர் சிருஷ்டியாக இருத்தல் கூடும்.

"வரகரிசிச் சோறும்
வழுதுணங்காய் வாட்டும்
முரமுர வென்றே புளித்த
மோரும்-பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன்
புகழ் புரிந்திட்ட சோறு
எல்லா வுலகும் பெறும்"

என்னும் பாட்டைப் பாடிய ஔவையார் சங்ககால ஔவையாராகஇருத்தல் கூடுமோ? எனினும் இஃது ஓர் ஔவையார் பாட்டு என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. சங்ககால ஔவையைப் பார்க்கிலும் அதிக அளவில் பிற்கால ஔவையாரே தமிழ்ப் பொது மக்களுடைய உள்ளத்தை வசீகரித்தவராவர்.

சங்ககால ஔவையார்பண்டிதர்க்குஉரியவரெனின் பிற்கால ஔவையார் பண்டித பாமரரான பொது மக்கள் அனைவர்க்கும் உரியராவர். ஏழைமக்களின் உள்ளத்தோடு ஒன்றுபட்டிசைந்துநின்றது பிற்கால ஔவையா ருள்ளம். இங்ஙனம் பொது மக்களோடும் வாழ்விலும் தாழ்விலும் வறுமையிலும் சிறுமையிலும் இரண்டறக் கலந்து நின்ற ஔவையாரைக் குறித்தே சில வார்த்தைகள் இங்குக்கூற விரும்புகிறேன்.

வரகரிசிச் சோற்றையும் புளித்தமோரையும் புகழ்ந்து பாடிய ஔவையார் 'வறுமையிற் செம்மை' வாழ்வு நடாத்திய மூதாட்டியன்றோ? ஒரு காலத்தில் ஔவையார் காதி யென்பவனால் உபகரிக்கப் பெற்றாள். அவனோடு விவசாயத் தொழிலில் சிறிது காலம் ஒத்துழைத்தாள். அவனுக்கு ஆடு மாங்க வேண்டி வாதவன், வத்தவன், யாதவன் என்னு மூவரிடம் சென்று கேட்டாள். அப்பொழுதுஒருவன் 'பின்' என்றான்;மற்றொருவன்'நாளை'என்றான்; பிறிதொருவன்'இல்லை' என்றான். இந்நிகழ்ச்சியைக் குறித்து ஔவையார் பாடிய பாட்டு தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகிறது. அது வருமாறு:—

"வாதவர்கோன் பின்னை யென்றான்
வத்தவர்கோன் நாளையென்றான்
யாதவர்கோன் யாதொன்றும்
இல்லையென்றான் ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும்
வத்தவர்கோன் நாளையினும்
யாதவர்கோன் இல்லையினிது"

மேலே குறித்த பாட்டு ஔவையாரின் உலக அனுபவத்தை நன்கு வெளியிடுகின்றது. இவ்வாறு உலக அனுபவங்களை வெளியிடும் பாடல்கள் பல ஔவையாரால் பாடப்பெற்றன. பின்வரும் பாட்டையும் ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

"அற்ற தலையின் அருகிற் றலையதனைப்
பற்றித் திருகிப் பறியேனே—வற்றல்
மரமனை யானுக்கு இம்மனையாளை யீந்த
பிரமனை யான் காணப் பெறின்"

என்னும் மொழிகளில் எத்தகைய அனுபவம் விளங்குகிறது பாருங்கள். ஔவையார் பசித் தீயால் பெரிதும் வருந்துவதும் உனக்குச் சோறில்லையென்று வீட்டு எஜமானன் வற்றல் மரம்போல் நின்று கூறுவதும் அவன் மனைவி இரகசியமாக அழைத்து ஔவையாரை உபசரிப்பதும், ஔவையாருளளத்தில் சீற்றமும் மகிழ்வும் ஒருங்கே பொங்கு வதும் இச்சிறுபாட்டில் நன்கு சித்திரிகப் படுகின்றன.

"உப்புக்கும் பாடிப்புளிக்கும் ஒருகவிதை
ஒப்பித்து நிற்குமுளம்"

என்பது ஔவையாரின் மனநிலை. ஔவையார், அரசர் செல்வர் ஆகியோரது அதிகார ஆடம்பரங்களை மதித்தவரல்லர்; ஏழைகளையும் அவர்களது சுகதுக்கங்களையும் காதலித்தார். இவருக்குக் 'கூழுக்குப் பாடி' என்றொரு பெயருமுண்டு. எனினும் எளிய வாழ்க்கை கொண்டிருந்த ஔவை தன் கவிதையைக் குறித்து உயர்ந்த கௌரவமான அபிப்பிராயங் கொண்டிருந்தார். 'என்றுங் கிழியாது என் பாட்டு' என்று இவர் இறுமாந்து கூறுவது காண்க.

"மதியாதார் முற்றம் மதித்தொருகாற்
மிதியாமை கோடியுறும்" [சென்று

"உண்ணீருண்ணீ ரென்றே ஊட்டாதார்
உண்ணாமை கோடியுறும்" [தம்மனையில்

"கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்
கூடுவதே கோடியுறும" [மோடு

"கோடானு கோடி கொடுப்பினும்தன்
கோடாமை கோடியுறும்" [னுடைநாக்

என ஔவையார் பாடிய 'நாலுகோடி கவி'யும் ஔவையாரது வறுமை வாழ்க்கையை வெளியிடுகின்றது.

ஔவையாருக்கு நூலறிவைப் பார்க்கிலும் ஆழ்ந்தகன்ற அனுபவ ஞானமே அதிகமாக இருந்தது. மக்கள் உள்ளங்களை, அவர் புத்தகங்களை வாசிப்பது போல் எளிதில் வாசித்து வந்தார். ஒரு பாலை வனத்தை வருணிக்கும் ஔவையார் வாக்கைப்பாருங்கள்,

"கற்றார் பிரிவும் கல்லாதார் இணக்கமும்
கைப்பொருள் ஒன்று
அற்றார் இளமையும் போலே
கொதிக்கும் அருஞ்சுரமே"

என்னும் அடிகளில் உலக அறிவும் உயர்தர அறிவும் ஒருங்கே ஒளி வீசுகின்றன. இவர் செந்தமிழ்த் தொண்டர்களான நாயன் மார் ஆழ்வார்களைப் போல், மானுடம் பாடாது தெய்வத்தையே பாடவேண்டு மென்னும் விரதங் கொண்டவரல்லர். எனினும் அப்பெரியார்களைப் போலவே இவரும் வீண் புகழ்ச்சி செய்யாத விரத முடையராய் மக்களை வாழ்விக்கும் பெரு நெறிபிடித்தொழுகினர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

சில மூடர் ஔவையாரால் பாடல் பெற விரும்பினர். அவர்கள் அறிஞரல்லர்; வீரரல்லர்; இரசிகருமல்லர். இவர்களை எவ்வாறு பாடுவது? இவர்களைப் புகழ்வது பாவமேயன்றோ? ஔவையார் அச்சந்தர்ப்பத்தில் ஒரு பாடல் பாடியுள்ளார். வள்ளல்களையும் வீரர்களையும் அறிஞர்களையும் பாடிய என் வாக்கால் 'எங்களையும் பாடுக' என்று நீங்கள் வெட்கமில்லாது வேண்டுகின்றீர்.

"நும்மைஇக்கு எவ்வனம் பாடுகேன் யானே
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர்வாய்ச் சொற் புலம்பலுக்கு இரங்கீர்.
அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தெருளீர்
உடஇர் உண்ணீர் கொடஇர் கொள்ளீர்
ஒவவாக்காணத்து உயர் மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே"

நீங்கள் போர்க்களத்தைக் கண்ணில் கண்டதுமில்லை, இசை கேட்கும் செவியும் உமக்கில்லை. வள்ளன்மை ஒரு சிறிதும் உம்மிடம் இல்லை. சோற்றுச் சுவையல்லது தமிழ்ச்சுவை அறியீர். இத்தகைய பயனற்ற வாழ்வுவாழும் உம்மை நான் எவவாறு பாடுவேன்? இவ்வாறு ஔவையார் இரங்கிக் கூறும் மொழிகளில் அவரது அருமையான பொன்னுள்ளம் இனிது புலனாகின்றது.

ஔவையார் நம் மக்கள் வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரமான விவசாயத்தைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் அவ்வாக் குடியானவர் வாழ்க்கையில் பெருங்காதலுள்ளவராகக் காட்டுகின்றது. தொழிலுக்குச் சகயும் உயர்ந்த லட்சியத்திற்கு உள்ளமுமாக வாழவேண்டுமென்பது ஔவையார் பெருங் கொள்கை. தமிழர் பொது மறையாகிய திருக்குறளின் திரண்ட பொருளை வெளியிடும்போது ஔவையார் வாக்கு வருமாறு:—

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருள்
[எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொத் தாற்று-ஆதரவு
பட்டதேயின்பம் பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

இப்பாட்டில் அறம் பொருளின்பமென்னும் முப்பாலும் திட்பமாக ஒரு சூத்திரத்தில் அமைவதுபோல் அமைந்துள்ளன.

ஔவையார் மனநிலையினை அவர் பாடிய ஒரே வெண்பாவால் வெளியிடுதல் கூடும்.

"ஒன்றாகக் காண்பதேகாட்சி புலனைந்தும்
வென்றான் தன்வீரமே வீரம்-என்றானும்
சாகாமற் கற்பதே கல்விதனைப் பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்"

இப்பாடலின் பொருளை உள்ளவாறு நந் தமிழ் மக்கள் உணர்ந்து ஒழுகுவாரெனின், நந்தாய் நாடு மகோந்நதநிலைபெறும் என்பதில் ஐயமுண்டோ?

முழுதும் படியாதீர்கள்

புதையல் புதையல்

சிரங்கு, சொரி சிரங்கு, முதுகில் கையில் படை இவைகளைக் கேவலம் எனும் எமது மருந்து 3-மணி நேரத்தில் எமனைப்போல் போக்கடிக்கும். வாங்கிச் சுகமாய்ப் போனவர்கள் கல்கத்தா, பம்பாய், பஞ்சாப் இத்தியாதி தேசத்தில் கணக்கில் சொல்ல முடியாது. இந்த மருந்தினுல் சரீரத்தில் கிஞ்சிற்றேனும் எரிச்சலென்பதே கிடையாது. வேஷ்டிகளில் கறைபடும் என்ற பயமே வேண்டாம். இமயமலையிலுள்ள மகரிஷியால் கண்டுபிடித்த வேர்களினுல் செய்யப்பட்டது. கம்பெனி பெயர் முன்னேற்றத்திற்காகவே டப்பி 1-க்கு விலை 4 அணுவாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு டஜனுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு மருந்துடன் ஒரு டைம்பீஸ் வரும். 2 டஜனுக்கு ரெயில்வே ரெகு லேட்டர் பாக்கட் வாச்சு அனுப்பப்படும். 3 டஜனுக்கு கோல்டன் ரிஸ்டு வாச்சு கொடுக்கப்படும். ஒவ்வொன்றுக்கும் 3 வருஷம் உத்தரவாதம். போஸ்டேஜ் பாக்கிங் செலவு வேறு. ஒரு முறை பரீட்சை பண்ணுங்கள்.

சுயராஜ்ய டிரேடிங் கம்பெனி,
நெ. 6, ரகுகந்தன் லேன், கல்கத்தா.

சமையலில்
சௌகரியம் வேண்டுமானுல்
வேறு யோசனையின்றி இன்றைக்கே

ருக்மணி குக்கர்

அடுக்கைத் தருவியுங்கள். சுகம் நிச்சயமாய்க் கிடைக்கும். 1, 2, 4, 6, 8 பேர்களுக்குரிய ஐந்து அளவுகள் முறையே ரூபா 13, 18, 22, 27, 33-ல் உண்டு. இரயில் கூலி வேறு.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம் (3) சென்னை

கும்பகோணம் தென் இந்தியா கன்பெக்ஷனரி
பாக்டரியில் தயாரிக்கப்படும்

பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்

என் ?

ஏன் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலை இதுவே. வெகு கோர்த்தியானவை என்ற புகழ்ப்பெற்றது. விலை வெகு நயம். ஒரு முறை தருவித்துப்பாருங்கள். உண்மை விளங்கும். விலை விபரத்திற்கு உடனே எழுதுங்கள்.

THE SOUTHERN INDIA CONFECTIONERY FACTORY,
Kumbakonam,

திருப்போரூர்ச்
சந்நிதிமுறைத்திரட்டும், அரும்பதவுரையும்
கிளேஸ், அணு 5; ரப். அணு 3.

வேண்டுவோர் விலைக்கு மேல் ஒரு அணு தபால் தலை சேர்த்து அனுப்பினுல் புத்தகம் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

சீர்திருத்தம் எங்கே?

சமூக ராஜீய சீர்திருத்தக்காரர்களே! நீங்கள் சீர்திருத்தம் விரும்புவது உண்மையா? ஹிந்து முஸ்லீம், பிராமணர் - அல்லாதார் பூசல்களை யொழிக்கக் கருதுவது வாஸ்தவமா? அப்படியானுல் உலக முழுதும் இந்திய வேதாந்த இரகசியங்களைப் பரவச் செய்த மகான் ஸ்ரீ ராமதீர்த்த பரமஹம்சரின் ஜீவிய சரித்திரத்தையும் உபதேச மொழிகளையும் கற்றுணருங்கள். உயரிய சமரச சமய உணர்ச்சியைப் பெருமுன்னர் எத்தகைய முன்னேற்றமும் அடைதல் முடியாது. அத்தகைய சமரச உணர்ச்சியால்தான் தற்காலம் நாட்டில் தோன்றியுள்ள சமய, சமூகப் பூசல்களை யொழித்துச் சகோதரத்துவத்தை நிலை நிறுத்த முடியும். பரம ஹம்சரின் உபதேச மொழிகள் இக்காலத்துக்கு மிக மிக இன்றியமையாதது. ஆதலின் மேற்படி மகானின் சரித்திரத்தைப் படிக்கா முன்னர் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுவதெல்லாம் வெறும் பேச்சே. இதில் எல்லாவித இரகசியங்களும் அடங்கி யிருக்கின்றன. இரண்டு பாகங்களும் சேர்ந்து அழகான கலிகோ பைண்டு செய்யப் பட்டு சுவாமிகளின் திருவுருப்படத்துடன் கூடியது.

1280 பக்கங்களைக் கொண்ட பெரிய புத்தகத்தின் விலை ரூ. 5 தான்.
வி. பி. வேறு.

விலாசம்:—இண்டோ மலாயன் ஸ்டோர்ஸ்,
நெ. 2, பிலிப்ஸ் தெரு, ஜி. டி., மதராஸ்

மருங்காபுரி ஜமீன்தாரணி
கி. சு. வி. இலட்சுமி அம்மணி அவர்கள் இயற்றிய

திருக்குறள் தீபாலங்காரம்

திருக்குறளைப் போன்று உறுதிப் பொருள்களை உணர்த்தகல்ல நூல் வேறு எம்மொழியிலும் இல்லை என்றே கூறலாம். அது கருதியே பல தேச பாஷைகளில் திருக்குறளை மொழி பெயர்த்திருக்கின்றனர். பல ஆசிரியர்களும் உரை வரைந்திருக்கின்றனர். இதுபோது, இலக்கண இலக்கிய ஆராய்ச்சி யற்றவருங்கூட திருக்குறள் உண்மையினை எளிதிலுணர்தற் பொருட்டு ஒவ்வொரு திருக்குறளின் கருத்தையும் வியாசமுறையில் பல தமிழ்ச் சரிதங்களை இடையிடையே பெய்து, ஆண் பெண்ணுகிய இருபாலரும் படித்துப் பயன் பெறும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுளது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகுபெற அச்சிட்டுளது. டிம்மி 8-பக்க அளவில் சுமார் 500-பக்கம் கொண்ட புத்தகம் ஒன்றின் விலை ரூ. 3.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

பொடியிற் சிறந்தது ராஜன் பட்டணம் பொடி

ஆர். எஸ். சுகந்த மூக்குத்தூள்

விலை விவரங்களுக்கும் மற்றும் எங்களிடம் தயாராகும் [illegible]களுக்கும் எழுதவும்.

பி. வி. ராஜன் & கம்பெனி,
தந்தி விலாசம் :— "நஸ்யம்," நெ. 44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, உ. மதராஸ்.

தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும்
கூடின சோதிட புஸ்தகங்கள்.

1. பிருஹத்ஜாதகம் :—இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும் நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். புஸ்தகம் டிம்மி 8 பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த கலிகோ பைண்டு செய்தது. கிளேஸ் ரூ. 8. ரப் ரூ. 7.

2. ஜாதக த்வாதசபாவ பலநிர்ணயம் :—(முதற்பாகம் 1-ம் பாவம் முதல் 5-ம் பாவம் முடிய.) இதில் பாராசரஸம்ஹிதை, ஸாராவளி, பலதீபிகை, ஸர்வார்த்த சிந்தாமணி, ஜாதக தத்துவம் முதலிய கிரந்தங்களில் ஒவ்வொரு பாவவிஷயமாகக் கூறியுள்ள வசனங்கள் யாவையும் தனித்தனியே எடுத்து எழுதி அவற்றை எளிய தமிழ் நடையில் பெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். கிளேஸ் ரூ. 3-8-0. ரப் ரூ. 3. மேலுள்ள பாவங்கள் கூடிய சீக்கிரத்தில் தனிப் புஸ்தகமாக வெளியாகும்.

3. உடுதசாபல நிர்ணயம் :—தசை, புக்தி, அந்தரம், சூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள அதாவது ஒவ்வொரு நாழிகையிலும் நடக்கும் பலனை இதன் மூலம் நீங்கள் கணக்கிட்டுக்கொள்ளக் கூடும். டிம்மி 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. விலை கிளேஸ். ரூ. 4. ரப் ரூ. 3-8-0.

4. சகுனபல நிர்ணயம் :—ஸ்ரீ வாராஹமிஹிராசாரியரால் பிருஹத் ஸம்ஹிதை என்ற கிரந்தத்தில் 85-வது அத்தியாயம் முதல் 95-வது அத்தியாயம் முடியவுள்ள 11 அத்தியாயங்களால் உபதேசிக்கப்பட்ட சகுன பலன்கள் இதில் அடங்கி இருக்கின்றன. கிளேஸ் ரூ. 1-8-0. ரப் ரூ. 1-4-0.

5. கோசரபல நிர்ணயம் :—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் வெகு தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. விலை அணு 12.

6. ஜாதக சந்திரிகை :—இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப் பெட்டிக்குத் திறவுகோலாகும். வதூவரர்களுடைய 10 விதப் பொருத்தம் பார்க்கும் முறைகளு மிதிலடங்கி யிருக்கின்றன. விலை ரூ. 1.

7. நவக்கிரஹாராதனக் கிரமம் :—இதில் நவக்கிரஹ பூஜா முறை, நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், ஆதித்யஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு தேவநாகரலிபியில் தனியே பிழையின்றி அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை கிளேஸ் ரூ. 1-4-0. ரப் ரூ. 1.

கடலங்குடி நடேசசாஸ்திரியார், 72, பெரியதெரு, திருவல்லிக்கேணி.

கணித ஜோதிடம்

கணிதரீதியாய் ஆராய்ந்து பலன் கூறப்பட்டுவருகிறது. ஒரு வருஷ மாத வாரியாக அல்லது திசாபுத்தி படிக்கு இரண்டு வருஷ பலன் எழுத ரூபா 2. மாதம் ஒன்றுக்கு ஒன்பது பலனுக, ஒரு வருஷப் பலன் எழுத ரூ. 10. ஒரு வருஷத்திற்குத் தினபலன் எழுத ரூபா 20. ஜாதகம் இல்லாதவர் லெட்டர் எழுதும் நேரத்தையும் பெயரையும் எழுதவும். எழுகேள்விகளுக்கு ரூபா 1. பொருத்தம் பார்க்க ரூபா 1. ஜாதகக்குறிப்பு எழுத ரூபா 2. ஆதிநூல்களைக் கொண்டே ஆராய்ச்சி யுற்றிருக்கின்றோம். ஒருவருடைய ஆயுளை இன்ன வருஷம் மாதம் தினம் நட்சத்திரம் இறந்துபோகும் நேரம் உள்பட தெரிந்து அத்துடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூபா 25. சந்தான மில்லாதவர்க்கு ஏற்படும் பதின் மூன்று தோஷங்களையும், இன்ன தோஷம் அல்லது அடைந்த விபரம் அதன் நிவர்த்தி இவற்றைத் தெரிந்து சொல்ல ரூபா 5. அன்னிய நாட்டு நண்பர்கள் முன்பணம் அனுப்ப வேண்டியது.

அப்பாஜி ஜோஸ்யர்,
நெ. 321, [illegible], திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் அபிப்பிராயம்:

"ஸ்ரீமான் ரு. அப்பாஜி ஜோசியர் அவர்களை யான் ஏறக்குறைய [illegible] அறிவேன். அவரது சோதிடப் புலமையின், ஆற்றலையும், பலன்கூறும் திறத்தையும் ஆராய்ந்து உணரும் வாய்ப்பு பலமுறை எனக்குக் கிடைத்தது. அவர் பண்டைச் சோதிட நூல்பல ஆராய்ந்து தெளிவு பெற்றிருத்தலையுணர்ந்தேன். அவர் பலர்க்கும் கூறிய பலன்கள் கடைமுறையில் உறுதிப்பெற்றதையும் கண்டேன். காலக் குறிப்புத் திட்டப்படப்பொறிக்கும் ஆற்றல் அவர்பால் அமைந்திருத்தல் வியக்கத்தக்கதா யிருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள மிகச் சில ஜோதிடக் கலைஞர்களுள் ஸ்ரீமான் அப்பாஜி ஜோசியரும் ஒருவர் என்று கூறல் மிகை [illegible]. ஸ்ரீமான் அப்பாஜி ஜோசியர் அவர்கள் தம் வாழ்வில் வெற்றி பெறுமாறு அருமுக கடவுள் திருவடியை வழுத்துகிறேன்."

Printed and Published by T. V. Kalyanasundaran (Editor) at the Sadhu Press, 12-Ganapathi Mudaly St., Royapettah, Madras.

END OF
ISSUE